# சோவியத் யூனியனும் வியத்னும் ஜனநாயகக் குடியரசும் நண்பர்கள் சகோதரர்கள்

வியத்னும் ஜனநாயகக் குடியரசு கட்சி, அரசாங்க தூதுகோஷ்டியின் 1973 ஜுலை 9–16 திகதி விஜயம் சம்பந்தமான தஸ்தாவேஜுகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோவியத் யூனியனும் வியத்னும் ஜனநாயகக் குடியரசும் நண்பர்கள் சகோதரர்கள்

தகவல் பகுதி
சோவியத் யூனியன் ஸ்தானிகராலயம்,
27, ஸர் எர்னஸ்ட் டி ஸில்வா மாவத்தை,
கொழும்பு—7.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


சோவியத்— வியத்னுமிய கூட்டறிக்கை 5

வியத்னும் ஜனநாயகக் குடியரசின் கட்சி, அரசாங்க தூதுக்குழுவினை கௌரவிக்குமுகமாக நடந்தவிருந்து 11

தோழர் எல். ஐ. பிரெஷ்னேவ் உரை 11

தோழர் லி துவான் உரை 19

1973 ஜூலை 11ம் நாள் சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி மத்திய கமிட்டிப் பொதுச் செயலாளர் தோழர் லியோனித் பிரெஷ்நேவிற்கு சர்வதேச லெனின் சமாதான விருது அளிக்கப்பட்டபொழுது தோழர் லீ துவான் ஆற்றிய உரை 26

மாஸ்கோவில் லிகசியோவ் மோட்டார் ஆலையில் கூட்டம் 28

தோழர் வி. வி. கிரிஷின் உரை 28

தோழர் லீ துவான் உரை 38

லெனின்கிராட் கிரோவ் தொழிலகத்தில் கூட்டம் 49

தோழர் ஜி. வி. ரொமாநோவின் உரை 50

தோழர் ஏ. என். கொஸிஜின் உரை 57

தோழர் லீ துவான் உரை 65

தோழர் பாம் வான் தாங் உரை 70

வியத்நாம் ஜனநாயகக் குடியரசினது கட்சி, அரசாங்கத் தூதுக்குழுவுக்கு சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் லெனின்கிராட் பிரதேசக் கமிட்டியும் லெனின்கிராட் உழைக்கும் மக்கள் பிரதிநிதிகளின் நகர சோவியத்தும் அளித்த விருந்துபசாரம். 71

தோழர் ஜி. வி. ரொமாநோவ் உரை 71

தோழர் பாம் வான் தாங் உரை 74

"நியூ டைம்ஸ்" சஞ்சிகைக்கு பாம் வான்தாங் அளித்த பேட்டி 78

1973 ஜூலை 16ம் திகதி பாம் வான் தாங் டெலிவிஷனில் நிகழ்த்திய உரை 82

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டிக்கும், சோவியத் சோஷலிஸக் குடியாசுகள் ஒன்றியத்தின் அமைச்சரவைக்கும் 84



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோவியத் – வியத்னும் கூட்டறிக்கை

வியத்நாம் உழைப்பாளி மக்கள் கட்சி, வியத்நாம் ஜனநாயகக் குடியரசு சார்பில் வியத்நாம் உழைப்பாளி மக்கள் கட்சியின் மத்தியக் கமிட்டி பிரதம செயலாளர் லி துவான், வியத்நாம் உழைப்பாளி மக்கள் கட்சி மத்தியக் கமிட்டின் பொலிட் பீரோ உறுப்பினரும் வியத்நாம் ஜனநாயக குடியரசின் அரசாங்கத்தின் பிரதமருமான பாம் வான் டாங் தலைமையிலான ஒரு தூதுக்குழு 1973 ஜூலை 9 முதல் 16ந் தேதிவரை சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டியின், சோவியத் அரசின் அழைப்பை ஏற்று சோவியத் யூனியனுக்கு அதிகார பூர்வமான நட்புறவு விஜயம் மேற்கொண்டது.

சோவியத் யூனியனில் இருந்தபோது வியத்நாம் தூதுக்குழு மாஸ்கோவிலுள்ள லிகசோவ் தொழிற்சாலைக்கு விஜயம் செய்தது, லெனின் கிராட் சென்று அங்கு வரலாற்றுச் சிறப்புடைய விசேஷ இடங்களையும் அதன் சில தொழிற்துறை நிறுவனங்களையும் நேரில் கண்டது.

மாஸ்கோவிலும் லெனின் கிராடிலும் தகர்க்கவொண்ணுத சோவியத் வியத்நாம்- நட்புறவுக்குத் தெட்டத் தெளிவான சான்றளிக்கும் பல கூட்டங்களில் தூதுக்குழு கலந்து கொண்டது. சோதர வியத்நாம் பிரதிநிதிகளுக்கு சோவியத் யூனியனில் அளிக்கப் பெற்றதான அன்பான நேச பூர்வமான வரவேற்பு, வீரஞ்செறிந்த வியத்நாம் மக்களுடன் சோவியத் உழைக்கும் மக்கள் பூண்டுள்ள உறுதியான ஒருமைப்பாட்டைப் பிரகடனம் செய்தது.

இந்த விஜயத்தின்போது, வியத்நாம் உழைப்பாளி மக்கள் கட்சி மத்தியக் கமிட்டியின் பிரதம செயலாளர் லி துவான், வியத்நாம் உழைப்பாளி மக்கள் கட்சி மத்தியக் கமிட்டியின் பீரோ உறுப்பினரும் பிரதமருமான பாம் வான் தாங், மத்திய கமிட்டியின் பொலிட் பீரோ உறுப்பினரும் துணைப் பிரதமருமான லி தான் என்கியும், சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டி பொதுச் செயலாளர் எல். ஐ. பிரெஷ்னேவ், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டியின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போலிட் பீரோ உறுப்பினரும் சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத் தலைமைக் குழுவின் தலைவருமான என் வி. பொத்கோர்னி, சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் போலிட் பீரோ உறுப்பினரும் சோவியத் யூனியன் அமைச்சரவைத் தலைவருமான எ. என். கோசிகின், சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டியின் பொலீட்பீரோ உறுப்பினரும் அயல்துறை அமைச்சருமான எ. எ. குரோமிகோ சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் பொலீட் பீரோ உறுப்பினரும் பாதுகாப்பு அமைச்சருமான எ. எ. கிரெச்கோ, சோவியத் கம்யூனிஸ்ட் கட்சி மத்தியக் கமிட்டியின் செயலாளர் கே. எப்ஃ. கதுஷெவ் ஆகியோரைச் சந்தித்து பேச்சுவார்த்தைகள் நடத்தினார்கள்.

சந்திப்புகளிலும் பேச்சுவார்த்தைகளிலும் கலந்து கொண்டோர் பின்வருமாறு—

சோவியத் தரப்பில்— சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டி உறுப்பினரும் சோவியத் யூனியன் அமைச்சரவை உதவித் தலைவருமான வி. எஸ். நொவிகோவ்; சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டி உறுப்பினரும் சோவியத் யூனியன் அயல்துறை வர்த்தக அமைச்சருமான என். எஸ். பதோலி செவ்; சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டி உறுப்பினரும், அயல்நாடுகளுடனான பொருளாதார உறவுகள் பற்றிய சோவியத் யூனியன் அமைச்சரவையின் அரசாங்கக் கமிட்டியின் தலைவருமான எஸ். எ. ஸ்கச்கோவ்; சோவியத் கம்யூனிஸ்டு கட்சி மத்தியக் கமிட்டி பொதுச் செயலாளரின் உதவியாளருமான கே. வி. ருஸகோவ்; சோவியத் யூனியன் உதவி அயல்துறை அமைச்சர் என். பி. ஃபிரியூபின், வியத்நாம் ஜனநாயகக் குடியரசிலுள்ள சோவியத் தூதர் ஐ. எஸ். ஷ்செர்பகோவ்;

வியத்நாம் ஜனநாயகக் குடியரசின் சார்பில்— வியத்நாம் உழைப்பாளி மக்கள் கட்சி மத்தியக் கமிட்டி உறுப்பினரும்; சோவியத் யூனியனிலுள்ள வியத்நாம் ஜனநாயகக் குடியரசின் தூதருமான வோதுக் தாங்; அமைச்சரும், வியத்நாம் ஜனநாயகக் குடியரசின் அரசாங்க திட்டக் கமிட்டியின் உதவித் தலைவருமான என்குயென் வான் கா; வியத்நாம் ஜனநாயகக் குடியரசின் உதவி அயல்துறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைச்சர் என்குயென் கோதாச், வியத்நாம் ஜனநாயகக் குயாசின் தேசியப் பாதுகாப்புத் துறை உதவி அமைச்சர் மேஜர் ஜெனரல் திரான் சாம்.

நேசபூர்வமான சூழலிலும் தோழமை பூர்வமான பரஸ்பர இணக்கத்தோடும் நடைபெற்ற பேச்சுக்களின் போது இரு தரப்புக்களும் தகவல்களைப் பரிமாறிக் கொண்டன. சோவியத் யூனியனுக்கும் வியத்நாம் ஜனநாயகக் குடியாசுக்கும் இடையே சர்வாம்ச ஒத்துழைப்பை மேலும் வளர்த்துக் கொள்வது சம்பந்தமான பிரச்சினைகளையும், வியத்நாம் குறித்த பாரிஸ் உடன்பாட்டை அமுல் செய்வது பற்றியும், பொதுவான அக்கறைக்குரிய இதர முக்கியமான சர்வதேசப் பிரச்சினைகளையும் அவர்கள் விவாதித்தார்கள்.

# 1

சோவியத் தலைவர்கள் சோவியத் யூனியனில் கம்யூனிஸ நிர்மாணத்தின் முன்னேற்றம் பற்றியும், சோவியத் மக்கள் ஐந்தாண்டுத் திட்டத்தின் மூன்றாவது நிர்ணயமான ஆண்டின் கடமைகளை அரசியல் உழைப்பு உற்சாகத்துடன் நிறைவேற்றி வருவது பற்றியும் வியத்நாம் நண்பர்களுக்கு விவரங்கள் கொடுத்தார்கள்.

வியத்நாம் தூதுக்குழு சோவியத் மக்கள் பாலும் மாபெரும் லெனினது நாட்டின்மீதும், சோஷலிஸ கம்யூனிச சகாப்தங்களை கட்டியங் கூறி மக்களுக்குத் தமது விடுதலை போராட்டத்திற்கான பாதையைக் காட்டிய, மனிதகுல வரலாற்றின் மகத்தான புரட்சியான அக்டோபர் புரட்சியின் தாயகம் மீதுமான வியத்நாம் மக்களின் நட்புக் கனிந்த உணர்வுகளைப் பிரகடனம் செய்தது.

சோவியத் அரசாங்கம் தனது வாழ்நாளில் அடைந்துள்ள தலைசிறந்த சாதனைகள் குறித்து வியத்நாம் தரப்பு ஆழ்ந்த பாராட்டுகளைத் தெரிவித்தது. சோவியத் மக்கள் அக்டோபர் புரட்சியின் ஆதாயங்களைக் கௌரவத்துடன் ஆதரித்து வந்துள்ளார்கள். பாசிஸ்டு அபாயத்திலிருந்து மனித குலத்தைக் காப்பாற்றினார்கள். உலக சோஷலிச அமைப்பை நிறுவுவதற்கான சாதகமான நிலைமைகளை உருவாக்கச் செயலூக்கத்துடன் உதவினர். இந்த அமைப்பு மனித சமூகத்தின் வளர்ச்சியில் ஒரு நிர்ணய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான கூறாக உள்ளது. தேச விடுதலைக்கான உலகு தழுவிய இயக்கத்திற்கு வலிமைமிக்க எழுச்சியைத் தந்தது. பொருளாதார, கலாசார, விஞ்ஞான, தொழில் நுட்ப வளர்ச்சியில் முன் என்றுங் கண்டிராத முன்னேற்றத்தை சாதனையாக்கியது. மனிதனது நன்மைக்காக முதல் முதலாக புறவெளி ஆராய்ச்சி சகாப்தத்தைத் தொடங்கி வைத்தது. இன்று சோவியத் யூனியன் நவீனமான தொழில், வளர்ச்சியடைந்த கூட்டுப்பண்ணை விவசாயம், வலிமை மிகு ராணுவப் படைகள், முன்னேற்றமான கலாசாரம் விஞ்ஞானம் ஆகியவற்றைக் கொண்டதான ஒரு மாபெரும் உலக வல்லரசாக விளங்குகிறது. சோஷலிசத்தை கட்டி வளர்த்த முதல் நாடு சோவியத் யூனியன், இப்போது அது கம்யூனிசத்திற்கான பாதை அமைத்து வருகிறது.

சோவியத் யூனியன் தான் தோன்றிய நாள் தொட்டே, சமாதானத்தைப் பேணிக்காக்கவும், சர்வதேச நட்புறவை வலுப்படுததவும் பெருமளவு பங்குப்பணி ஆற்றி வந்துள்ளது. இதர சோதர சோஷலிஸ நாடுகளுடன் சேர்ந்து அது சமாதானம, தேசிய சுதந்திரம், ஜனநாயகம் சோஷலிசம் ஆகியவற்றுக்காக, ஏகாதிபத்தியத்தை எதிர்த்து போராடும் உலகின் புரட்சிகர முற்போக்கு சக்திகளை வலுப்படுத்தச் செயலூக்கத்துடன் உதவுகிறது.

சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியாலும் தோழர் எல். ஐ. பிரெஷ்னேவ் தலைமையிலுள்ள அதன் மத்தியக் கமிட்டியாலும் வழி நடத்தப்படும் சோவியத் மக்களுக்கு சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் 24வது காங்கிரஸ் வகுத்து முன் வைத்த கம்யூனிச நிர்மாணம் பற்றிய தலைசிறந்த கடமைகளை நிறைவேற்றுவதில் புதிய பெரிய வெற்றிகள் கிடைப்பதாக என்று வியத்நாம் மக்கள் மனப்பூர்வமாக விழைகிறார்கள். இந்த நிர்மாணப்பணி சோஷலிச உலக அமைப்பின் வலிமையை உயர்த்தப் பெருமளவு துணைசெய்யும், சோஷலிசத்திற்கான போராட்டத்தில் மக்களுக்கு உத்வேகம் அளிக்கும்

வியதநாம் தலைவர்கள் வியத்நாமிலுள்ள நிலைமை, இந்தப் புதிய கட்டத்திற்கான கடமைகள், வியத்நாம் மீதான பாரிஸ் உடன்பாட்டைக் கறாராகச் செயல்படுத்துவதை உத்தரவாதம் செய்வதற்கான நடவடிக்கைகள், தேசிய பொருளாதாரத்தை புனரமைத்தல், வடக்கு வியத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாமில் சோஷலிச நிர்மாணம் பற்றிய தகவல்களை சோவியத் தரப்புக்கு அறிவித்தார்கள்.

சோவியத் கட்சி, அரசின் சார்பிலான தூதுக்குழு வியத்நாம மக்களின் வீரசாகசம், தமது தாயகத்தின் விடுதலைக்கும் வியத்நாம் ஜனநாயகக் குடியரசின் சோஷலிச நிர்மாணததிற்குமாக விடுதலைப் போரில் அவர்கள் ஈட்டிய புகழார்ந்த வெற்றிகளையும் குறித்துப் பாராட்டுத் தெரிவித்தது. வியத்நாம் உழைப்பாளி மக்கள் கட்சியினால் தலைமை தாங்கப்பெற்றும் சோதர சோஷலிச நாடுகளின் உதவியும் ஆதரவும் பெற்றுள்ள வியத்நாம் மக்கள், சமாதான பூர்வமான, ஐக்கிய சுதந்திர, ஜனநாயக, சுபிட்ச வியத்நாமைக் கட்டுவதில் பூரண வெற்றி பெறுவர் என்று சோவியத் தலைவர்கள் நம்பிக்கை பிரகடனம் செய்தனர்.

வியத்நாம் உழைப்பாளி மக்களின் கட்சியின் தலைமையின் கீழ் வியத்நாம் மக்கள் ஈட்டிய வெற்றியும், ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பை எதிர்த்த போராட்டத்தில், தமது நாட்டில் தாமே எஜமானர்கள் என்ற உரிமையை நிலைநாட்டவும் அம்மக்கள் தோற்றுவித்த தன்னல மறுப்பு, தாங்கும் சக்தி, தீரம் சோஷலிசத்தின் மகத்தான ஜீவசக்தியை மையப்படுத்திக் காட்டும் என்று தாம் கருதுவதாக சோவியத் தரப்பு வலியுறுத்திக் கூறியது. வியத்நாம் மக்களின் அடிப்படையான தேசிய உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் அடிப்படையில் வியத்நாமில் போரை நிறுத்தி சமாதானத்தை மீண்டும் ஸ்தாபித்த பாரிஸ் உடன்பாடும் இவ்வாண்டு ஜூன் 13ந தேதிய கூட்டறிக்கையும் வியத்நாம் ஜனநாயகக் குடியரசின், தெற்கு வியத்நாம் குடியரசின் இடைக்காலப் புரட்சி அரசின் அடிப்படை சாதனையாகும். இது வியத்நாம் மக்களின் வீரசாகசத்தின் விளைவாகும். சோஷலிச நாடுகளுக்கும், தேச விடுதலை இயக்கத்திற்கும், முற்போக்கு மனித குலம் அனைத்திற்குமான பொது வெற்றியாகும்.

வியத்நாம் உழைப்பாளி மக்கள் கட்சியின் மத்தியக் கமிட்டி, வியத்நாம் ஜனநாயகக் குடியாசு அரசாங்கம், அனைத்து வியத்நாம் மக்கள் சார்பிலும், போற்றற்குரிய ஜனாதிபதி ஹோசிமின் ஆணைகளை நிறைவேற்றும் வகையிலும் வியத்நாம் கட்சி, அரசின் தூதுக்குழு, சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி, சோவியத் அரசாங்கம், அனைத்து சோவியத் மக்களுக்கும் வியத்நாம் மக்களுக்கும் ஈணுவ அரசி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யல், இராஜ்ய முனைகளில் மதிப்புக்குரிய விரிவான திற மான ஆதரவும் உதவியும் வழங்கியதற்காக மனப் பூர்வ மான ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டது. இந்த உதவிகள் தமது சுதந்திரம் சுயாதீனம் ஆகியவற்றைப் பாதுகாத்துக் கொள்ளவும், சோஷலிச நிர்மாணத்தில் ஈடுபடுவதற்குமான போராட்டத்தில் வியத்நாம் மக்கள் அடைந்த வரலாற்றுச் சிறப்புடைய வெற்றிக்கு பிரதான மாக உதவின.

வியத்நாம ஜனநாயகக் குடியரசு அரசும், தெற்கு வியத்நாம் குடியரசின் இடைக்கால புரட்சி அரசும் வியத் நாம் பற்றிய பாரிஸ் உடன்பாட்டுக்கு முழு மதிப்பளித்து அதைக் கறாராகச் செயல்படுத்த உறுதியாக நிற்கின்றன என்றும், அமெரிக்காவும் சைகோன் நிர்வாகமும் இதைச் செயல்படுத்த வேண்டும் என்று வற்புறுத்துவதாகவும் வியத்நாம் தரப்பு மீண்டும் வலியுறுத்தியது.

பாரிஸ உடன்பாட்டை அமுல் நடத்துவது, வியத்நா மில் சமாதானத்தைப் பேணிக் காப்பது, வடக்கு வியத்நா மில் சோஷலிசத்தைக் கட்டுவது, தெற்கு வியத்நாமை சமா தானம், சுதந்திரம், ஜனநாயகம், நடுநிலைமை என்ற பாதை யில் வளர்த்து நாட்டின் சமாதானபூர்வமான மறு இணைப்பை நோக்கி முன்னேறுவது என்ற திசையிலான வியத்நாம் குடியரசின் இடைக்காலப் புரட்சி சர்க்காரின் கொள்கையை சோவியத் யூனியன் உறுதியாக ஆதரிக்கி றது.

தெற்கு வியத்நாம் தேச விடுதலை முன்னணியுடனும் தெற்கு வியத்நாம் மக்கள் சார்பில் வாதாடும் உண்மையான ஒரே தலைவனை தெற்கு வியத்நாம் குடியரசின் இடைக் காலப் புரட்சி அரசாங்கத்துடனும் சோவியத் யூனியன் நேச உறவுகளை எல்லா வழிகளிலும் வளர்த்துக்கொள்ளும்...

லாவோசில் சமாதானத்தை மீண்டும் நிலைநாட்டி தேசிய ஒற்றுமையை சாதனையாக்குவது குறித்து இருதரப்புகளும் ஆதரவு தெரிவித்தன. இந்த உடன்பாடும் கறாராகவும் முற்ற முழுக்கவும் செயல் படுத்தப்பட்டால் சுதந்திரமான சுயா தீனமான வளர்ச்சிக்கான லாவோஸ் மக்களின் ஆதிபத்திய உரிமையைப் பெற உதவும் என்று அவை நம்புகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது நாட்டின் சுதந்திரம் சுயாதீனத்திற்கான உரிமைகளை வெற்றிகரமாக ஆதரித்து நிற்கும் கம்போடியா நாட்டின் தேசபக்த சக்திகளுடனான தமது ஒருமைப்பாட்டை சோவியத் வியத்நாம் தூதுக்குழுக்கள் வலியுறுத்தின.

## 2

உலகில் சக்திகளின் புதிய அணியமைப்பு, சோஷலிச நாடுகளின அரசியல் பொருளாதார ராணுவ வலிமையின் வளர்ச்சி, தேச விடுதலை இயக்கம் பலமடைதல், தொழிலாளி வர்க்கம் கம்யூனிஸ்டு இயக்கத்தின் எழுச்சி ஆகியவை சமாதானம், சமூக முன்னேற்றத்திற்கு மேலும் வெற்றிகளை அளிப்பதற்கான உண்மையான நிலைமைகளை உருவாக்குகின்றன என்று சோவியத் வியத்நாம் தலைவர்கள் நம்புகிறார்கள். பாரிஸ் உடன்பாடு கையொப்பமிடப்பட்டதில் வெளிப்பட்டதான ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பை எதிர்த்த போராட்டத்தில் வியத்நாம் மக்களின் வெற்றி, ஆசியாவிலும் உலக முழுவதிலும் பந்தோபஸ்தையும் சமாதானத்தையும் வலுப்படுத்துவதில் ஒரு முக்கிய பாத்திரம் வகிக்கிறது.

சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் 24ஆவது காங்கிரஸ் முடிவுகளின் பிரகாரம், சமாதானத்தையும் சர்வதேச பந்தோபஸ்தையும் வலுப்படுத்தும் திசையில், வெவ்வேறு விரித்துரைக்கப்பட்ட பல்வேறு சமுதாய அமைப்புகளுடைய அரசுகளிடையே சமாதான சகவாழ்வுக் கோட்பாட்டை அமுலாக்கும் திசையில், சுதந்திரம் சுயாதீனம் சமூக முன்னேற்றத்திற்காக பாடுபட்டு வரும் மக்களுக்குத் தீவிரமான ஆதரவு அளிக்கும் திசையில் இயங்கி வரும் சோவியத் யூனியனின் செயல்பாட்டை வியட்நாம் உழைப்பாளி மக்கள் கட்சியும் வியத்நாம் ஜனநாயகக் குடியரசு அரசாங்கமும் ஆதரிக்கின்றன.

ஜெர்மன் சமஷ்டிக் குடியரசுடன் சோவியத் யூனியன், போலந்து, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு ஆகிய நாடுகள் கையொப்பமிட்டுள்ள ஒப்பந்தங்களில் விளக்கப்பெற்றுள்ள ஜெர்மன் ஜனநாயக குடியரசுக்கும் ஜெர்மன் சமஷ்டிக் குடியரசுக்கும் இடையிலான எல்லை உள்ளிட்ட ஐரோப்பாவிலுள்ள இன்றைய அரசாங்க எல்லைகளின் மீறவொண்ணுத் தன்மையினை சர்வதேச சட்டத்தின் கீழ் இறுதியாக அங்கீகரிப்பதானது, ஐரோப்பாவிலும் உலக முழுவதிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதானத்தைப் பேணிக் காப்பதில் ஒரு மிகவும் பிரதான மான முன்னேற்ற நடவடிக்கையாகும்.

தனது பணிகளைத் துவக்கியுள்ள பந்தோபஸ்து ஒத்துழைப்புக்கான அகில— ஐரோப்பிய மாநாடு பாசிச எதிர்ப்பு உலகப் போரின் பலன்களை நிலை நிறுத்தும் எனவும், இந்த மாகண்டத்தில் சமாதானத்தையும் பந்தோபஸ்தையும் வலுப்படுத்துவதற்கான சாதகமான நிலைமைகளை மேலும் உருவாக்கும் எனவும் இரு தரப்புகளும் நம்புகின்றன.

ஏகாதிபத்தியம், காலனியாதிக்கம், நவீன காலனியாதிக்கத்தினை எதிர்த்தும், சுதந்திரம் சுயாதீனம் சமூக முன்னேற்றத்திற்காகவும், ஆசியா, ஆபிரிக்கா, லத்தீன் அமெரிக்க மக்கள் நடத்தும் போராட்டத்தை சோவியத் வியத்நாம் பிரதிநிதிக் குழுக்கள் உறுதியாக ஆதரிக்கின்றன

இன்றைய நிலைமைகளில், சோஷலிச நாடுகளிடையான இணைவையும் ஒத்துழைப்பையும் அதிகபட்சம் வலுப்படுத்துவதும், சோஷலிச அமைப்புக்கும் தேச விடுதலை சக்திகளுக்கும் இடையிலான கூட்டணியை வலுப்படுத்துவதும், மார்க்சிய லெனினிஸ, தொழிலாள வர்க்க சர்வதேசியத்தின் அடிப்படையில் விசேஷ முக்கியத்துவமுடையதாகும் என்று இரு தரப்புகளும் கருதுகின்றன. சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியும் வியத்நாம் உழைப்பாளி மக்கள் கட்சியும் இன்றைய சமாதானம் விழையும் ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளை ஒன்று சேர்க்க உதவும் வகையில் தமது முயற்சிகளைப் பன்மடங்காக்குவோம் எனக் கூறுகின்றன.

## 3

சோவியத யூனியனுக்கும் வியத்நாம் ஜனநாயகக் குடியரசுக்கும இடையிலான உறவுகளை முழுமையாகப் பரிசீலனை செய்த சோவியத், வியத்நாம் கட்சி அரசாங்கத் தூதுக்குழுக்கள் சோவியத் வியத்நாமிய நட்புறவும் அரசியல் பொருளாதார, சித்தாந்த, தற்காப்பு போன்ற மிகவும் முக்கியமான துறைகளில் சோதரா ஒத்துழைப்பும் பயனுள்ள வகையில் அபிவிருத்தியடைந்து வருவதை அளப்பரிய மன நிறைவுடன் குறித்தன. சோவியத் யூனியனுக்கும் வியத்நாம் ஜனநாயகக் குடியரசுக்கும் இடையே வளர்ந்து வரும் உறவுகளின் இன்றைய, நீண்ட காலத்திய கடமைகள் குறித்து இருதரப்புக்களும் விவாதித்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரு தரப்புக்களும் பின்வருவனவற்றை ஒப்புக்கொண்டன. பல்வேறு மட்டங்களில் சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சிக்கும் வியத்நாம் உழைப்பாளி மக்கள் கட்சிக்குமிடையில் சோதர உறவுகளை விரிவாக்குவது, பொது அக்கறையுள்ள பிரச்சினைகள் மீது ஆலோசனை நடத்திக் கருத்துப் பரிமாற்றம் செய்வது;

பொருளாதார, விஞ்ஞான, தொழில் நுட்பத் துறைகளில் வியத்நாமிய ஊழியர்களுக்கும் பயிற்சியளிப்பது உட்பட இரு நாடுகளிடை மேலும் நெருக்கமாக பொருளாதார தொழில் நுட்ப ஒத்துழைப்பை வளர்க்க வேண்டும். இது வியத்நாம ஜனநாயகக் குடியரசின் சோஷலிச பொருளாதாரதைப் புனரமைக்கது மேலும் வளர்க்கவும். வியத்நாமிய மக்களின் வாழ்க்கைத் தரங்களை உயர்த்தவும அவசியம்; இரு நாடுகளின விஞ்ஞான கலாசார அமைப்புகளிடையிலும் பொது ஸ்தாபனங்களிடையிலும் மேலும் நெருககமான உறவுகளை ஊக்குவிக்கும் சோஷலிஸ கம்யூனிச நிர்மாணத்திலான அனுபவத்தைப் பரிமாறிக் கொள்ளவும் வேண்டும்.

சோவியத் யூனியனுக்கும் வியத்நாம் ஜனநாயக் குடியரசின் கட்சி, அரசாங்க தூதுக்குழு விஜயம் செய்த பொழுது வியத்நாம் ஜனநாயகக் குடியரசைப் புனரமைத்து அதன் பொருளாதாரத்தை வளர்க்க சோவியத் யூனியன் உதவி புரியும் என்று கோட்பாடளவில் ஒப்புக்கொள்ளப்பட்டது. சோவியத் யூனியன் உதவியுடன் கட்டப்பெற்ற பொருளாதார நிறுவனங்களைப் புதுப்பிப்பதற்கும் நீர்விசை மின் நிலையங்கள் உள்ளிட்ட வடக்கு வியத்நாமின் சோஷலிச தொழில் வளர்ச்சியை மேம்படுத்தும் புதிய தொழில் நிறுவனங்களைக் கட்டவும் உதவத் தயாராக இருப்பதாக சோவியத் தரப்பு கருத்து தெரிவித்தது. 1974ல் சோவியத் யூனியன், மக்களுக்குத் தேவையானதும் தேசிய பொருளாதாரத்தைப் புனரமைசக அவசியமானதுமான பல்வேறு தொழிற்துறை விவசாய யந்திரங்களையும் போக்குவாத்து வசதிகளையும் பயனீட்டுப் பொருள்கள், உணவுப் பண்டங்கள் ஆகியவற்றை வியத்நாம் ஜனநாயக குடியரசுக்கு சப்ளை செய்யும்.

சோதர வியத்நாமிய மக்களுக்கு ஆதரவு தருவது என்ற தனது நிலையான சர்வதேசியக் கொள்கையிலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல்படத் தொடங்கியும், போரால் அழிக்கப்பட்ட பொருளாதாரத்தை புனரமைப்பதில் வியத்நாம் ஜனநாயக குடியரசின் முன் உள்ள தேவைகளை கருத்தில் கொண்டும், சோவியத் கம்யூனிஸ்டு கட்சியின் மத்தியக் கமிட்டியும் சோவியத் அரசாங்கமும் கடந்த சில ஆண்டுகளாக பொருளாதார அபிவிருத்திக்காக சோவியத் யூனியன் வியத்நாம் ஜனநாயக குடியரசுக்கு அளித்துள்ள கடன்களை கொடையாகத் தந்த உதவியாகக் கருதுவதாக முடிவு செய்துவிட்டன. இருதரப்புகளும் இந்த முடிவு பற்றிய ஒரு தஸ்தாவேஜில் கையொப்பமிட்டுள்ளன.

இந்த நேச பூர்வச் செயலுக்காக வியத்நாம் தரப்பு சோவியத கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்தியக் கமிட்டிக்கும் சோவியத் அரசாங்கத்திற்கும் உளமார்ந்த நன்றி தெரிவித்துள்ளது. இந்த முடிவு வியத்நாம் மக்களுக்கு பெருமளவு உத்வேகமளிக்கும். சோவியத் கம்யூனிஸ்டு கட்சி, சோவியத் அரசு, சோதர சோவியத் மக்கள் பால் ஆழ்ந்த நன்றி உணர்வினை எழுப்பும் எனவும் நம்புகிறது. விஜயத்தின் போது வியத்நாம் ஜனநாயகக் குடியரசுக்கு சோவியத் யூனியன் உதவி புரியும் என்று கோட்பாடளவில் ஒப்புக் கொள்ளப்பட்டது. இது வியத்நாம் ஜனநாயக குடியரசின் சோஷலிச நிர்மாணத்தில் பெரும் பங்கு வகிக்கும் என்று வியத்நாம் கட்சி, அரசு தூதுக்குழு வலியுறுத்தியது.

வியத்நாம் ஜனநாயகக் குடியரசின் கட்சி, அரசாங்கத் தூதுக்குழு சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்ததும், பேச்சுக்களின் விளைவும் சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி, வியத்நாம் உழைப்பாளி மக்கள் கட்சிக்கு இடையேயும் சோவியத் யூனியன், வியத்நாம் ஜனநாயகக் குடியரசுக்கு இடையிலும் பிரிக்க வொண்ணாத நட்புறவும், ஒத்துழைப்பும் வலுவடைந்து வளர்ச்சியடைந்து வருகிறது என்பதை இருதரப்புகளும் மெய்யாகவே உணர்ந்துள்ளன.

வியத்நாம் உழைப்பாளி மக்கள் கட்சியின் மத்தியக் கமிட்டி வியத்நாம் ஜனநாயக குடியரசின் அரசாங்கம் ஆகியவற்றின் சார்பில் தோழர்கள் லி துவானும், பாம் வான் தாங்கும் சோவியத் கட்சி அரசாங்க தூதுக் குழுவினை வியத்நாம் ஜனநாயகக் குடியரசுக்கு விஜயம் செய்யுமாறு அழைத்தார்கள். அழைப்பு நன்றியுடன் ஏற்கப்பட்டது விஜயத்தின் தேதி பின்னால் ஒப்புக்கொள்ளப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வியத்னும் ஜனநாயகக் குடியரசின் கட்சி, அரசாங்க தூதுக்குழுவினை கௌரவிக்கு முகமாக நடந்த விருந்து.

ஜூலை 10ம் நாள் சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டி சோவியத் யூனியன் சுப்ரீம் சோவியத் தலைமைக் குழு, சோவியத் அரசாங்கத்தின் சார்பில், வியத்நாம் உழைப்பாளி மக்கள் கட்சியின் மத்தியக் கமிட்டி பிரதம செயலாளர் லி துவான், வியத்நாம் உழைப்பாளி மக்கள் கட்சி மத்தியக் கமிட்டியின் போலிட் பீரோ உறுப்பினரும் வியத்நாம் ஜனநாயகக் குடியரசு அரசாங்கத்தின் பிரதமருமான பாம் வான் தான் தலைமையிலான வியத்நாம் ஜனநாயகக் குடியரசு அரசாங்கத் தூதுக்குழுவினை கௌரவிக்குமுகமாக விருந்து அளிக்கப்பட்டது.

சோவியத் கம்யூனிஸ்ட்டுக் கட்சி மத்தியக் கமிட்டி பொதுச் செயலாளர் பியோனித் பிரெஷ்னேவும், வியத்நாம் உழைப்பாளர் கட்சி மத்தியக் கமிட்டியின் பிரதமச் செயலாளர் லி துவானும் உரையாற்றினர்கள்.

## தோழர் எல். ஐ. பிரெஷ்னேவ் உரை.

மதிப்புக்குரிய தோழர் லி துவான்,

மதிப்புக்குரிய தோழர் பாம் வான் தாங்,

அருமை நண்பர்களே,

எமது கம்யூனிஸ்ட்டுக் கட்சியின் சார்பில், சோவியத் மக்கள் அனைவரின் சார்பில் உங்கள் மூலம் வீரஞ்செறிந்த வியத்நாம் மக்களை வரவேற்கிறோம். அம்மக்களுடன் சோவியத் மக்கள் நீண்டு நிலவும் தகர்க்கவொண்ணாத நட்புறவின் நிலையான பந்தங்களால் இணைக்கப்பட்டிருக்கிறார்கள்.

தலைசிறந்த மார்க்சிய— லெனினிய மேதை ஹோ சி மின்னால் நிறுவப்பெற்ற வியத்நாம் உழைப்பாளி மக்கள் கட்சியை நாங்கள் வரவேற்கிறோம். அக்கட்சி ஆழமான புரட்சிகரமாற்றங்களை நிறைவேற்றியுள்ளது. ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பின் பயங்கர நாட்களில் அனைத்து மக்களையும் சுதந்திரத்திற்கான போராட்டத்திற்கு எழுச்சியுறச் செய்து மிகவும் கடுமையான சோதனைகளிடையே சுதந்திரம், சோஷலிசம் என்ற பதாகையை கௌரவத்துடன் உயர்த்திப் பிடித்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஹோ சி மின்னை மிகுந்த ஈடுபாட்டுடன் பின்பற்றுபவர்களும் பொதுவான மார்க்சிய— லெனினிய லட்சியங்களுக்கும் நமது கம்யூனிஸ்டு கட்சிகளின் நோக்கங்களுக்குமாகப் பற்றுறுதியுடன் போராடுவோருமான எமது மாபெரும் நண்பர்கள், தோழர்கள் லி துவான், பாம் வான் தாங் இதர வியத்நாமிய தலைவர்களை நாம் உளமார வாவேற்கிறோம்.

அருமை வியத்நாமிய நண்பர்களே உங்களை பலமுறை சந்தித்திருக்கிறோம். ஆனால் இந்த சந்திப்பு விசேஷமானது. போர் முடிந்து போரில் வியத்நாமிய மக்கள் தலைசிறந்த வெற்றிகளை ஈட்டிய பிறகு உலக முழுவதிலும் ஒரு புதிய சூழ்நிலை நிலைநாட்டப் பெறும் பொழுது, முன் எந் நாளையும் விட மிகவும், தொளிவான முறையில் சமாதானம் முடிவமைதிக்கான போக்குகள் வலுப்பெற்று வரும் பொழுது இந்த சந்திப்பு ஏற்பட்டுள்ளது.

சோவியத கம்யூனிஸ்டுக் கட்சியின் சார்பில், சோவியத் மக்களின் சாரபில், வியத்நாம் உழைப்பாளி மக்களின் கட்சியையும் எமது வியத்நாமிய நண்பர்கள் அனைவரையும் இந்த வாலாற்றுச் சிறப்புடைய வெற்றித் தருணத்தில் உளமாரப் பாராட்டுகிறோம்!

சோவியத் மக்கள் எப்போதும் தமது வியத்நாமிய சோதரர்களுடன் தோளோடு தோள் சேர்ந்து நின்று வந்திருக்கிறார்கள். சமாதானத்திற்கும் சோஷலிசத்திற்குமான உங்கள் போராட்டத்திற்கு சர்வாம்ச உதவியும் ஆதரவும் வழங்குவது எமது சர்வதேசக் கடமை என்றே எப்போதும் கருதி வந்திருக்கிறோம். கட்சியின் 23வது காங்கிரசின் போதே "வியத்நாம் ஜனநாயகக் குடியரசினுல் உயர்த்திப் பிடிக்கப்பட்ட சோஷலிசச் சுடரொளியை எவராலும் அணைக்க முடியாது" என்று நாம் நம்பிக்கையோடு பிரகடனம் செய்தோம். இந்த சுடரொளி எரிந்து கொண்டிருப்பதை இப்போது முழு உலகமும் காணமுடியும். வியத்நாமில் நடந்த போர் வெறும் ஒரு பிரதேச விஷயமாக மட்டும் இருக்க முடியாது. அது பல நாடுகளின் நலன்களை ஆழமாக தொட்டது. அதன் விளைவுகள் உலக அரசியல் முழுவதையும் பாதித்தன. ஒரு சோஷலிச நாட்டை எதிர்த்த நேரடித் தாக்குதல் என்பதால் இது பெருமளவு சர்வதேச சூழ் நிலையில் மேம்பாடு ஏற்படுவதற்கு முட்டுக்கட்டை போட்டது. தென் கிழக்காசியாவில் போர்க் களங்களைக் கலைப்பதற்கான போராட்டம், சோவியத் கம்யூனிஸ்டுக் கட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சியின் 24வது காங்கிரஸ் அங்கீகரித்த சமாதான வேலைத் திட்டத்தில ஒரு கேந்திர அம்சமாக இருப்பதும் அது சோஷலிச நாடுகளின் நமது காலத்தின் அனைத்து முற்போக்கு சக்திகளின் பொது கோரிக்கையாகிவிட்டதும் தற்செயலானதல்ல.

நான்காண்டுகளுக்கு முன் மாஸ்கோவில் நடைபெற்ற கம்யூனிஸ்டு தொழிலாளர் கட்சிகளின் சர்வதேச மாநாடு எடுத்த முக்கியமான முடிவுகளை இன்று நினைவு கூர்வது தவறாக இராது என்று நான் நம்புகிறேன். அந்த முடிவாவது: 'ஒரு ராணுவ அபாயதை எதிர்த்து மக்களை கூண்டோடு அழிக்க அச்சுறுத்தும் ஓர் அணு ஆயுத உலகப் போர் அபாயத்தை எதிர்த்த போராட்டம், உலக சமாதானத்திற்கான போராட்டம் ஏகாதிபத்திய— எதிர்ப்பு சக்திகளின் கூட்டுச் செயல்பாட்டின் பிரதான இணைப்பாக விளங்குகிறது.'

சோவியத் யூனியனிடமிருந்தும் அனைத்து சோதர சோஷலிச நாடுகளிடமிருந்தும் வியத்நாமுக்கு கிடைத்த சர்வதேச ஆதரவு இந்தப் போராட்டத்தின் பிரிக்க முடியாத ஓர் அம்சமாகும். வியத்நாமின் மாபெரும் வீரச் செயல் அதன் வெற்றி ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளுக்கு ஒரு மாபெரும் வெற்றி சமூக முன்னேற்றத்திற்கு கிடைத்த ஒரு பொது வெற்றி.

வியத்நாமிய தோழர்களின் வெற்றி இப்போது பாரிஸ் உடன்பாடு என்ற ஒரு பிரதான அரசியல் தஸ்தாவேஜில் ஒருமுகப்படுத்தப்பெற்றுள்ளது. சோஷலிச நிர்மாணத்தை மேலும் வளர்ப்பதற்குரிய வாய்ப்பு வியத்நாம் ஜனநாயகக் குடியரசின் முன் உள்ளது. நாட்டை சமாதான பூர்வமாக மீண்டும் ஒற்றுமைப்படுத்தும் திசையில் முன்னேறுவதற்கான நிலைமைகள் உருவாக்கப்பட்டு வருகின்றன.

வியத்நாம் ஜனநாயகக் குடியரசும், தெற்கு வியத்நாம் குடியரசின் இடைக்கால புரட்சிகர அரசாங்கமும் மேற்கொண்ட நிலையுடனை எமது ஒருமைப்பாட்டை நாம் வெளிப்படுத்துவதோடு, எல்லாத்தரப்பினரும் பாரிஸ் உடன்பாட்டை முழுமையாகவும் கறாராகவும் நிறைவேற்ற வேண்டும் என்பதற்கான எமது ஆதரவை பிரகடனம் செய்கிறோம். வியத்நாம் பற்றிய சர்வதேச மாநாட்டின் இறுதிச் செயல்பாட்டில் சோவியத் யூனியன் கையொப்பமிட்டதன் பொருள் குறிப்பாக இதுவேயாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர்கள் மீது தமது சொந்த விதிகளைத் திணிக்க விரும்புவது சோஷலிச நாடுகளுக்கு அந்நியமானது, புரட்சிகள் ஏற்றுமதி செய்யப்படுவதில்லை. ஆனால் எதிர்ப்புரட்சி ஏற்றுமதி செய்யப்படுவதை எதிர்த்தும், மக்களின் உள் விவகாரங்களில் ஏகாதிபத்தியங்கள் தலையிடுவதை எதிர்த்தும் நாம் எப்போதும் உறுதியாகப் போராடுவோம். ஒவ்வொரு நாடும் தனது சொந்த சமூக அமைப்பினைத் தேர்ந்து கொள்ளவும், தனது சொந்த வருங்காலத்தை நிர்ணயித்துக் கொள்ளவுமான மாற்றவொண்ணு உரிமையினைச் செயல் படுத்தவேண்டும்.

இதற்காகத்தான் சோஷலிஸ்டு நாடுகள் பல ஆண்டுகளாக ஓர் உறுதியான நிலையான சமாதானத்திற்காக முரணின்றிப் போராடி வருகின்றன. அதன் அனுகூலங்களை இன்றைய தலைமுறை மட்டுமின்றி வரப்போகும் தலைமுறைகளும் அனுபவிக்க முடியும்.

தனது சமாதான வேலைத் திட்டத்தை செயலாக்கும் போக்கில் சோவியத் யூனியன், சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி 24ஆவது காங்கிரசுக்குப் பிறகு சர்வதேச பந்தோபஸ்தை வலுப்படுத்துவதற்கான பல பிரதான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

மிகவும் முக்கியமான நடவடிக்கைகளில் ஒன்று, சோவியத் யூனியனுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே கையெழுத்தாகியுள்ள அணு ஆயுதப் போரைத் தடை செய்வது பற்றிய ஒப்பந்தமாகும். இதர சோவியத் அமெரிக்க ஒப்பந்தங்களைப் போலவே இந்த ஒப்பந்தத்தையும் செயல்படுத்துவதானது சோவியத் அமெரிக்க மக்களின் நலன்களுக்கு மட்டுமின்றி சர்வதேச அரங்கில் அரசியல் சூழ்நிலை பொதுவாக மேம்படவும், சோஷலிசக் கூட்டமைப்பு முழுவதன் நலன்களுக்கும் சமூக முன்னேற்ற லட்சியத்திற்கும் உதவிகரமாக இருக்கும் என்பதில் எமக்கு ஐயமில்லை.

ஹெல்சிங்கியில் பந்தோபஸ்து ஒத்துழைப்புக்கான ஐரோப்பிய மாநாடு தனது பணிகளை வெற்றிகரமாகத் தொடங்கிவிட்டது. அதில் கலந்து கொள்வோர் அனைவரின் நல்லெண்ணம் இருக்குமானால் அது ஒரு மைல் கல்லாக இருக்க முடியும், கட்டாயம் இருக்க வேண்டும். இந்த அகில ஐரோப்பிய மாநாட்டின் தயாரிப்புகளில் சோவியத் யூனியன் பெரும் பங்கு வகித்தது. இந்த முக்கியமான சர்வ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய லட்சியம் வெற்றிகரமாவதை உத்தரவாதம் செய்ய நாம் பாடுபடுவோம்.

சுருங்கக் கூறின் உலகக் கொள்கையின் ஆக்கபூர்வ மாறுதல்களின் சாரம் சர்வதேச உறவுகளைப் புனரமைப்பதில் காணக்கிடக்கிறது. இதன் மீது சமாதான சகவாழ்வுக் கோட்பாடுகளின், அதாவது சோஷலிசம் முதலில் ஸ்தாபிக்கப்பட்ட பொழுது லெனின் முன் வைத்த அதே கோட்பாடுகளின் அடிப்படையில் இது துவக்கம் செய்யப்பட்டுள்ளது.

இது எளிய காரியமன்று. இதற்கு அரசியல் நிதான புத்தி, கோட்பாடுகளை அனுசரித்தல், பிடிவாதமான உறுதி ஆகியவை அவசியம்; ஏனெனில் வேறுபட்ட சமூக அமைப்புகளையுடைய நாடுகளிடையிலான உறவுகள் எழுகின்றன. நாம் தொழிலாளி வர்க்கத்தின் சித்தாந்தமான மார்க்சிய—லெனினிய சித்தாந்தத்தை உறுதியாகக் கடைப்பிடிக்கிறோம்.

முதலாளித்துவ நாடுகளிடம் அவற்றுக்கே சொந்தமான பூர்ஷுவா சித்தாந்தம் உள்ளது. ஆனல் இது கெடுபிடியைத் தளர்த்துவதற்கான குறிப்பிட்ட நடவடிக்கைகளையோ, மனித குலத்தை என்றென்றைக்குமாக அணு ஆயுதப் போர் அச்சுறுத்தலிலிருந்து தப்புவிப்பதற்கென ஒப்புக்கொண்ட சில நடவடிக்கைகளை மேற்கொள்வதையோ தடை செய்யக் கூடாது.

சோவியத யூனியன் படிப்படியாக அரசியலில் மட்டுமின்றி ராணுவ முடிவமைதியையும் நோக்கி நடைமுறைச் செயல்களை எடுக்குமாறு வலியுறுத்துவது அவசியம் என்று கருதுகிறது. கெடுபிடி நிலையைத் தளர்த்துவதற்காக உருவாக்கப்பட்ட அடிப்படையின் ஆழமும் திறமும், சமாதானத்தை வலுப்படுத்துவதற்கான முழு லட்சியமும் இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதை பெருமளவு சார்ந்து இருக்கும்.

சோதர சோஷலிஸ்டு நாடுகளுடன் தோளோடு தோள் சேர்ந்து அணிவகுத்துச் செல்லும் சோவியத் யூனியன் சமாதான கோபுரமானது ஒவ்வொரு தேசியப் பகுதியின் அரசுரிமை, சுதந்திரம் ஆகியவற்றை மதிக்கும் அடிப்படையிலும், முடிவமைதி நடைமுறை உலகு தழுவியது, சர்வாம்சத் தன்மை வாய்ந்தது என்ற அடிப்படையிலும் உறுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யான அஸ்திவாரத்தின் மேல் கட்டுப்படுவதை உறுதி செய்யும்.

இந்த விஷயத்தில் தென் கிழக்கு ஆசியாவிலும் ஆசிய மாகண்டத்தில் ஒட்டு மொத்தமாகவும் நிலைமை முழுமையாக சகஜமாக்கப்படுவது மாபெரும் முக்கியத்துவமுடையதாகும்.

தெற்குவியத்நாமில் ஆழமான ஜனநாயக மாற்றங்களுக்காகவும் வடக்கு தெற்குப் பகுதிகளை சமாதான வழியில் மீண்டும் ஒன்று சேர்ப்பதற்குரிய நிலைகளை உருவாக்குவதற்குமான போராட்டம் இன்னும் பிற்போக்கு சக்திகளின் எதிர்ப்பை எதிரிட நேர்ந்துள்ளது. லாவோசில் மீண்டும் சமாதானத்தை நிலைநாட்டி, தேசிய ஒன்றிணைவை சாதனையாக்குவது சம்பந்தமான உடன்பாட்டை நிறைவேற்றுவதில் முட்டுக்கட்டைகள் உள்ளன.

கம்போடியாவில் ஆயுதமேந்திய போராட்டம் நடைபெறுகிறது. அங்கு தேச பக்த சக்திகள் தமது நாட்டின் உண்மையான சுதந்திரத்திற்கும் சுயாதினத்திற்கும் உறுதியாகப் பாடுபட்டு வருகிறார்கள். வியத்நாம் மண்ணில் சமாதனத்தை வலுப்படுத்த வியத்நாம் ஜனநாயகக் குடியரசின் முரணற்ற கொள்கை இந்தோ-சீன தீபகற்பத்திலுள்ள சகல மக்களுக்கும் தமது தேசிய அபிலாஷைகளுக்கான போராட்டத்தில் உத்வேகமளிக்கிறது.

இந்தோ-சீன தீபகற்பம் முழுவதிலும் சமாதானத்தை மீண்டும் நிலைநாட்டுவது, பெரிய ஆசியாக் கண்டத்தில் பந்தோபஸ்தை வலுப்படுத்துவதற்கு மேலும் விசேஷ நடவடிக்கைகளுக்கான முன் தேவைகளை உருவாக்கும். எவ்வித விதிவிலக்கும் இன்றி எல்லா ஆசிய நாடுகளிடையிலும் சமத்துவமான நல்ல அண்டை உறவுகளை நிலைநாட்ட மேலும் ஊக்குவிப்பைத் தரும் என்று நாங்கள் மெய்யாகவே ,, ணர்கிறோம்.

சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி 24ஆவது காங்கிரஸ் முடிவுகளால் வழிகாட்டப் பெற்று எமது நாடு எப்போதும் போலவே இஸ்ரேலிய ஆக்கிரமிப்பின் விளைவுகளை அகற்ற அரபு மக்கள் நடத்தி வரும் நியாயமான போராட்டத்தினை ஆதரித்து வருகிறது. பிடித்தடக்கியுள்ள அரபு பகுதிகளிலிருந்து இஸ்ரேல் படைகளை விலக்கிக் கொள்ள வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகின் அந்தப் பகுதியிலுள்ள நிலப்பகுதியின் எல்லைகள் மீண்டும் நிலைநாட்டப்பட வேண்டும், பிரபலமான ஐ. நா. பந்தோபஸ்துக் கவுன்சில் ஐ. நா. பொதுச் சபை தீர்மானங்களுக்கு ஏற்ப மத்தியக் கிழக்கிலுள்ள எல்லா நாடுகளின் அனைத்து மக்களின் பந்தோபஸ்து பாதுகாக்கப் பட வேண்டும்.

சர்வதேச பந்தோபஸ்தை வலுப்படுத்துவதில் வெற்றிகள் காண வேண்டுமானால், நமது பொதுவான உன்னத லட்சியமான உலகில் நிலையான சமாதானத்தை நிறுவ மேலதிகமான ஊக்கத்தோடும் அதிகரித்த உறுதியுடனும் போராட வேண்டுவது நமது கடமையாகும். இதுவே சோஷலிச நாடுகளின் அயல்துறைக் கொள்கைச் செயல் பாடுகளின் கேந்திரமான அம்சமாகும். இது அனைத்து மக்களின் ஜீவாதார அபிலாஷைகளுக்கும் முற்றிலும் பொருத்தமாக உள்ளது.

தென் கிழக்காசியாவிலான நிகழ்ச்சிகள், ஒட்டு மொத்தமான சர்வதேச நிகழ்ச்சிகள் இரண்டையும் கருதிப் பார்க்கும் பொழுது நமது சந்திப்பு முக்கியமான, கேந்திரமான தருணத்தில் நடைபெறுகிறது எனலாம். சர்வதேச விவகாரங்களில் ஆக்கபூர்வமான மாற்றங்களை வலுப்படுத்தவும் அவற்றை மாற்றவொண்ணாததாக்கவும் விழைகிறோம். சோஷலிச நாடுகளின் ஒன்றிணைவும், சோஷலிச உலகத்திற்கும் தேச விடுதலை சக்திகளுக்குமிடையிலான நெருக்கமான கூட்டணியும் மேலும் வளர்வது மூலமும், கம்யூனிஸ்டு தொழிலாளர் கட்சிகள் அனைத்து ஏகாதிபத்திய எதிர்ப்பு சக்திகளை ஒற்றுமை ஒத்துழைப்பு வளர்வது மூலமும் மிகப் பெருமளவுக்கு எளிதில் சாதனையாகும்.

வியத்நாம் கட்சி அரசாங்க தூதுக்குழுவின் விஜயத்தையும், அந்த அடிப்படையில் இன்று துவங்கிய பேச்சு வார்த்தைகளையும் காணும் பொழுது, நமது கூட்டு பணி சோவியத்—வியத்நாம் நட்புறவை ஒருபுதிய மட்டத்திற்கு உயர்த்தி, எல்லாப் பிரதானத் துறைகளிலும் நமது ஒத்துழைப்பின் வீச்சு விரிவடைந்துள்ளது. நமது பொதுவான மாபெரும் புரட்சிகர சாதனையான உலக சோஷலிச அமைப்பினை வலுப்படுத்துவதில் இது சிறந்த பங்குப்பணியாற்றும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோவியத்— வியத்நாம் நட்புறவின் திறனும் வலுவும் போர் நாட்களில் மெய்யாகவே நிரூபமாயின. இப்போது சமாதான நாட்களில் நாம் நமது மக்களின் சகோதரத்துவத்தை மேலும் வலுப்படுத்த எமது வியத்நாம் தோழர்களுடன் சேர்ந்து பணியாற்ற முழுமையாக உறுதி பூண்டுள்ளோம்.

நமது கட்சிகளிடையே சோதித்துப் புடம் போடப் பெற்ற மார்க்கசிய லெனினியம், தொழிலாளி வர்க்க சர்வதேசியம் என்பதன் அடிப்படையில் விரிவான, பயனுள்ள, முறையான தொடர்புகளையும், வெகுஜன அமைப்புகளிடை நெருக்கமான உறவுகளையும், முழுமையான பொருளாதார ஒத்துழைப்பையும் உருவாக்க விழைகிறோம். சோவியத மக்கள் போரால் அழிந்து போன பொருளாதாரத்தைப் புனரமைக்கவும் உழைக்கும் மக்கள் வாழ்க்கைத் தரங்களை மேம்படுத்தவும் கலாசாரம் கல்வியில் முன்னேற்றமடைவது குறித்தும் தமது நண்பர்களின் அக்கறையைப் புரிந்துகொள்கிறார்கள்.

வியத்நாம் மக்கள் தமது பாதுகாப்பைக் கட்டிக்கொள்ளவும், ஆக்கிரமிப்பை எதிர்த்து போராடவும், பல ஆண்டுகளாக சோவியத் யூனியன் விரிவான தன்னலமற்ற உதவிகளை வழங்கி வந்துள்ளது, வியத்நாம் ஜனநாயக குடியரசின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்வதற்கு மாபெரும் உதவி நல்கியுள்ளது. சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் மத்தியக் கமிட்டியும் சோவியத் அரசாங்கமும் இவ்வாறு அளித்த உதவிகள் அனைத்தையும் அன்பளிப்பான உதவி என்று கருத முடிவு செய்துள்ளன என்று வியத்நாமியத் தோழர்களிடம் மிகுந்த மகிழ்ச்சியுடன் கூற விரும்புகிறேன். வியத்நாம் ஜனநாயகக் குடியரசு சோஷலிச நாடுகள் அனைத்திடமிருந்துமான சர்வதேசிய உதவியைச் சார்ந்து நின்று தனக்கு முன் உள்ள கடமைகளை வெற்றிகரமாக நிறைவேற்றும் என்று நாங்கள் நம்புகிறோம்.

வியத்நாமிய கட்சி, அரசாங்க தூதுக்குழு விஜயம் குறித்து எமது ஆழ்ந்த மனநிறைவைப் பிரகடனம் செய்வதோடு விருந்துபசார வாழ்த்துக்களை பிரேபிக்கிறேன்.

வீரஞ் செறிந்த வியத்நாமிய மக்கள் வாழ்க! அவர்களது போராடும் முன்னணிப்படையான வியத்நாம் உழைப்பாளி மக்கள் கட்சி வாழ்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீறவொண்ணுத சோவியத் வியத்நாம் நட்புறவு வாழ்க!
எமதருமை நண்பர்கள் தோழர் லி துவான், தோழர் பாம் வான் தாங் அனைத்து வியத்நாம் தோழர்கள் வாழ்க!

## தோழர் லி துவான் உரை.

அருமைத் தோழர்கள் பிரெஷ்னேவ், போத்கோர்னி, கோசிகின் அவர்களே, அருமை சோவியத் கட்சி, அரசுத் தலைவர்களே, அருமைத் தோழர்களே,

எங்களுடைய தூதுக் குழுவிற்கு அளிக்கப்பெற்ற உள்ள பூர்வமான, அன்பான, நேசம் மிக்க வரவேற்புக்காக, வியத் நாம் உழைப்பாளி மக்கள் கட்சி, வியத்நாம் ஜனநாயக குடியரசு சர்க்கார் தூதுக்குழுவின் சார்பில், சோவியத் சாக்காருக்கும், சோவியத் மக்களுக்கும் என்னுடைய மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகிறேன். எங்களுடைய நாட்டைப் பற்றியும், எங்களுடைய மக்களின் புகழ் மிகு வீரம் செறிந்த செயல்களைப் பற்றியும் பாராட்டிக் கூறியமைக்காக தோழர் பிரெஷ்னேவுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.

சகல வியத்நாமிய மக்களின் ஆர்வமிக்க விருப்பத்தையும், தனது இறுதி உயிலிலும், இறுதி விருப்ப ஆவணத்திலும் ஜனுதிபதி ஹோ சி மின் தெளிவாக வெளியிட்ட விருப்பத்தையும் நிறைவேற்றும் வகையில் எமது தூதுக்குழு, வியத் நாமிய மக்களுக்கு அளிக்கப்பெற்ற பெருமளவான ஆதரவுக்காகவும், மகத்தான தாராள உதவிக்காகவும் சோவியத் யூனியனின் புகழ்மிகு கம்யூனிஸ்டுக் கட்சிக்கும், மதிப்புமிகு தோழர் பிரெஷ்நேவின் தலைமையிலான அதனுடைய மத்தியக் கமிட்டிக்கும் வியத்நாமிய மக்களின் அன்புமிக்க நேசப் பார்ன்மை உணர்ச்சிகளையும், மனப்பூர்வமான நன்றியையும் தெரிவித்துக் கொள்வதற்காக எங்கள் தூதுக்குழு சோவியத் யூனியனுக்கு வந்துள்ளது. இந்த உதவியின் மூலம், தமது நாட்டின் விடுதலைக்காக அமெரிக்க ஏகாதிபத்தியத் திற்கெதிரான போராட்டத்தில் வியத்நாமிய மக்களின் மாபெரும் வெற்றிக்கும் ஒரு சோஷலிச சமுதாயத்தை நிர்மாணிப்பதற்கான அவர்களின் முயற்சிகளுக்கும் சோவியத் யூனியன் ஒரு கணிசமான பங்கு பணியாற்றியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருமைத் தோழர்களே,

"நீங்கள் தண்ணீர் குடிக்கும் போது அதனுடைய கிணற்று ஊற்றைப் பற்றி நினையுங்கள்" என்று ஒரு வியத்நாமிய பழமொழி கூறுகிறது. இன்று வெற்றியின் விழாச் சூழலில், வியத்நாம் உழைப்பாளி மக்களும், வியத்நாமில் புரட்சியின் லட்சியத்திற்காக, அனேகமாக அரை நூற்றாண்டுக் காலமாக, சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியும் சோவியத் மக்களும் ஆற்றி வரும் முக்கியப் பங்குப் பணியை மீண்டும் நினைவு கூர்கின்றனர். வியத்நாமியப்புரட்சி முதிர்ச்சியடையாமலிருந்த காலந்தொட்டு அது புகழ்மிக்க வெற்றிகளை ஈட்டிய காலம் வரையிலும், குறிப்பாக, எமது நாட்டின் விடுதலைக்காக நீண்ட காலமாகப் போராடிய பின் அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளுக்கு எதிராக அடைந்த வெற்றியின் போதும், மேலும் சோஷலிச நிர்மாணக் கால கட்டம் முழுமையிலும் சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியும், சர்க்காரும், சோவியத் ஒன்றியத்தின் மக்களும், சர்வதேசியம் எனும் உன்னதமான உணர்வில் செயல்பட்டும், வியத்நாமிய மக்களின் தரப்பில் விசுவாசமாக நின்றும் வந்துள்ளனர். அவர்களுக்கு முழுமனதான ஆதரவையும், தாராளமான சோதர உதவியையும் நிலையாக அளித்து வந்துள்ளனர். சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் 23ஆவது, 24 ஆவது காங்கிரஸ்கள் வெளியிட்ட அறிக்கைகளையும்,வேண்டுகோள்களையும் நாங்கள் என்றும் நினைவில்கொள்வோம். அவை வியத்நாம், இந்தோ— சீன மக்களுடன் ஒருமைப்பாட்டைத் தெரிவித்தன. அவை வியத்நாமிய மக்களிடையே தன்னம்பிக்கையையும் உற்சாகத்தையும் ஏற்படுத்தின. சோவியத் யூனியன் அளித்த பயனுறுதியான ஆதரவும், சகல துறை உதவியும், அத்துடன் கூடவே, நமது சோவியத் சகோதரர்கள், சகோதரிகளின் எண்ணற்ற சிறந்த, மகத்தான செயல்களும் வியத்நாமிய மக்களுக்குக் கூடுதல் பலத்தைக் கொடுத்தன, தமது வெற்றிவாகை சூடிய போராட்டத்தில் நமது நாட்டின் குடிமக்களுக்கும், படைவீரர்களுக்கும் மகத்தான தார்மீக ஊக்குவிப்பாக அவை சேவை புரிந்தன, அந்தப் போராட்டத்தின் சிகரமாக நமது இன்றைய ஒளி வீசும் வெற்றி சாதிக்கப்பெற்றது. இந்த ஆதரவும் உதவியும் பொதுவான லட்சியங்களில் நண்பர்கள், சகோதரர்களின் தீவிர ஒற்றுமையை உருவகப்படுத்துகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேசமும், அன்பும், உருக்கமும் நிறைந்த இந்த சந்தர்ப்பத்தில் வியத்நாம் உழைப்பாளி மக்கள் கட்சி, வியத்நாம் ஜனநாயகக் குடியரசு சர்க்கார், மற்றும் சகல வியத்நாமிய மக்களின் சார்பிலும் என்னுடைய ஆழ்ந்த நன்றியுணர்வை சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சிக்கும், சோவியத் சர்க்காருக்கும், சோவியத் மக்களுக்கும் மீண்டும் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நீண்ட காலத்திற்கு முன்பிருந்து, உமது நாட்டின், சோவியத் யூனியனின் பெயரே, வியத்நாமிய மக்களின் உள்ளங்களில் ஒருவிசேஷ இடத்தை வகித்துவந்துள்ளது,ஏனெனில், சோவியத் யூனியன்தான் மனித குலத்தின் வரலாற்றில் ஒரு புதிய யுகத்தைத் துவக்கி வைத்த அக்டோபர் புரட்சியின் பிறந்தகமாகும், உலக புரட்சியின் மாபெரும் தலைவராகிய லெனினுடைய பிறப்பிடமாகும். முதல் வியத்நாமியக் கம்யூனிஸ்டாகிய தோழர் ஹோ சி மின், தமது மக்களும் தமது நாடும் விடுதலை பெறுவதற்குரிய பாதையைக் கண்ட நாடு சோவியத் யூனியன்தான். கடந்த காலத்தில் காலனி ஆட்சியின் இருளிலும், இன்றைய விடுதலை, சுயாதீனத்தின் சூரிய ஒளியிலும் வியத்நாமிய மக்களும்,தமது உள்ளங்களில் ஆழ்ந்த பரிவுணர்ச்சியுடனும் களிப் பெருமிதத்துடனும் தமது சோவியத் சகோதரர்கள், சகோதரிகளின் வெற்றிகரமான பணியின் ஒவ்வொரு படியையும், தமது நாட்டை நிர்மாணிப்பதிலும், பாதுகாப்பிலும் அவர்களின் வெற்றிகளையும் கூர்ந்து கவனித்து வந்தனர், இன்றும் கவனித்து வருகின்றனர்.

சோவியத் மக்களின் கடினமான, புகழ்மிக்க புரட்சிகரப் போராட்டத்தின் அமரத்துவம்வாய்ந்த காவியம் சோஷலிசத்தின் ஜீவசக்திக்கும், போர் அரங்கிலும் ஆக்க உழைப்பின் அரங்கிலும் சோவியத் மக்களின் மகத்தான திறமைக்கு சான்று கூறுகிறது.

சோஷலிசத்தை வெற்றிகரமாக நிர்மாணித்த முதல் நாடு சோவியத் யூனியன்; கம்யூனிசப் பாதையில் பயணத்தை தொடங்கியுள்ள முதல் நாடும் அதுவே. இதன் மூலம் அது, மனித குலத்தின் மிகவும் உன்னதமான, எழில் மிக்க கனவைச் செயலாக்கி வருகின்றது. உலக வரலாற்றில் பல பத்தாண்டுகளாக, அது ஆற்றிவந்துள்ள பெருமளவு முக்கியமான பங்கின் காரணமாகவும், அதனுடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலிமைமிகு பொருளாதார ராணுவ ஆற்றலின் காரண மாகவும் சோவியத் யூனியன் சமாதானம், தேச சுதந்திரம், ஜனநாயகம், சோஷலிசத்திற்கான மக்களின் போராட்டத் தில் ஒரு விசேஷ முக்கியத்துவம் வாய்ந்த இடத்தை வகிக்கிறது.

தமது சோவியத் சகோதரர்களின் வண்ணமிகு சாதனை களைக் கண்டு எல்லையில்லாப் பெருமிதமும் ஆனந்தமும் அடையும் வியத்நாமிய மக்கள் கம்யூனிசத்தை நிர்மாணிக் கின்ற, மற்றும் சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் 24-வது காங்கிரசின் முடிவுகளுக்கு உகந்த வகையில் உலகளாவிய சமாதானத்தைப் பாதுகாக்கின்ற, உலகப் புரட்சிகர இயக் கத்திற்கு உதவி அளிக்கின்ற தமது உன்னதமான பணியில் சோவியத் மக்களுக்கு மென்மேலும் அதிக வெற்றிகள் கிடைப்பதாக, என்று மனப் பூர்வமாக விழைகின்றனர். மார்க்சிய— லெனினிய கருத்துக்களினால் உத்வேகம் பெற்ற, எல்லையில்லா ஆக்கத்திறன்களையும் வலிமையையும் பெற் றுள்ள 25 கோடி சோவியத் மக்கள், சகாப்தகர முக்கியத் துவம் வாய்ந்த மேலும் பல மகத்தான வெற்றிகளை அடை வார்கள், சோவியத் யூனியனின் வரலாற்றுப் பாத்திரத்தை மேலும் அதிகமாக உயர்த்தி உலக முழுமையின் மக்களின் புரட்சிகரப் போராட்டத்தின் லட்சியத்திற்கு ஒரு தலை சிறந்த பங்குப் பணி ஆற்றுவார்கள், சகல கண்டங்களிலு முள்ள தமது சகோதரர்கள், நண்பர்களுடைய அபிலாஷை களுக்குச் சேவை செய்கிறார்கள் என்பதில் வியத்நாமிய மக் கள் ஆழ்ந்த நம்பிக்கை கொண்டுள்ளனர்.

அருமைத் தோழர்களே,

வியத்நாமிய மக்கள், உலகெங்குமுள்ள தமது சகோதரர் கள், நண்பர்களின் உதவியுடன், இதுவரை தெரிந்துள்ள சகல காலனியாதிக்கப் போர்களிலும் மிக மிகக் குரூரமான போரில் வெற்றி பெற்றனர் என்பது தெரிந்ததே. போரை முடிவுக்குக் கொண்டு வந்து வியத்நாமில் மீண்டும் சமாதா னத்தை நிலை நாட்டும் பாரிஸ் உடன்பாடு, வியத்நாமின் சுதந்திரத்தையும் அரசுரிமையையும், ஒற்றுமையையும், பிர தேச ஒருமைப்பாட்டையும், தெற்கு வியத்நாமிய மக்க ளின் சுயநிர்ணய உரிமையையும் அமெரிக்காவும், பிறநாடுக ளும் பூரணமாக மதிக்க வேண்டுமென்று விதிக்கிறது. இவ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாண்டு மார்ச் 29ல், அமெரிக்கப் படைகளின் கடைசிப் பிரிவு தெற்கு வியத்நாமிலிருந்து வாபஸ் பெறப்பட்டது.

இந்த வரலாற்று வெற்றி வியத்நாம் மக்களுக்கு சாதக மான நிலைமைகளை உருவாக்கியுள்ளது, சமாதானத்தைப் பாதுகாத்து வலுப்படுத்தவும், வடக்குப் பகுதியில் சோஷலி சத்தை நிர்மாணிக்கவும், தெற்கு பகுதியில் சுதந்திரத்தை யும் ஜனநாயகத்தையும் அடைவதற்கும் அதை தொடர்ந்து எமது நாடு முழுமையும் சமாதானபூர்வமாக மீண்டும் ஐக்கியமடைவதற்கும் வியத்நாம் மக்களுக்குப் பெரும் வாய்ப்புகளைத் திறந்துவிட்டுள்ளது.

சமாதான ஒப்பந்தம் கையெழுத்திட்டதற்குப்பின் கடந்த ஐந்து மாதங்களுக்கு மேற்பட்ட காலத்தில் வியத் நாம் ஜனநாயகக் குடியரசு சர்க்காரும், தெற்கு வியத் நாமின் இடைக்காலப் புரட்சிகர சர்க்காரும் இந்த ஒப்பந் தத்தைக் கறாராகக் கடைப்பிடித்துக்கொண்டும், செயலாக் கிக் கொண்டும் வருகின்றன; அதே பொழுதில் அமெரிக்கா வும் சைகோன் அதிகாரிகளும், தெற்கு வியத்நாமுக்கும் வடக்கு வியத்நாமுக்கும் ஒரு சோப் பொருந்தும் அந்த ஒப்பந்தத்தின் முக்கிய ராணுவ, அரசியல் விதிகளைக் கடுமை யாகவும், திட்டமிட்ட முறையிலும் மீறி வருகின்றனர். அமெரிக்கா, மற்றும் சைகோன் அதிகாரிகளுடைய இந்த ஆத்திரமூட்டல்களையும் துரோகச் செயல்களையும் முடிவுக் குக்கொண்டு வருவதற்கு வியத்நாமிய மக்கள் தம்மாலான சகலமும் செய்து வருகின்றனர். பாரிஸ் உடன்பாட்டையும், 1973 ஜூன் 13ந் தேதிய கூட்டறிக்கையையும் அவர்கள் பூரணமாகவும் கறாராகவும் கடைப்பிடிக்க வேண்டுமென்று வியத்நாமிய மக்கள் கோருகிறார்கள். தெற்கு வியத்நாம் குடியரசின் தற்காலிகப் புரட்சிகர சர்க்கார் 1973 ஜூன் 29ல் முன்வைத்த ஆறு அம்ச யோசனைக்கு பதிலளிக்க வேண்டுமென்று வலியுறுத்தி வருகின்றனர். தமது நியாய மான போராட்டத்தில் வியத்நாமிய மக்கள் வெற்றியடை வார்கள் என்பதில் எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது. இந்த நம்பிக்கை அவர்களின் வளைந்து கொடுக்காத சித்தத் திலும், உலகத்தின் அனைத்து மக்களின் சித்தத்திலும் ஏற்படுகிறது. வரலாற்றின் தணியாத முன்னேற்றத்தில் இந்த நம்பிக்கை ஏற்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமெரிக்க ஏகாதிபத்திய வாதிகளுக்கு எதிரான, தமது நாடுகளின் விமோசனத்திற்கான போரில் லாவோசிய மக்களும், கம்போடிய மக்களும் அடைந்து வரும் கவர்ச்சியான வெற்றிகளுக்கு வியத்நாமிய மக்கள் வாழ்த்துக் கூறுகிறார்கள். லாவோசிய மக்களின் போராட்டத்திற்கு வியத்நாமிய மக்கள் தமது தங்கு தடையற்ற ஆதரவளிக்கிறார்கள்; அமெரிக்காவும், வியன்டியன் சர்க்காரும் வியன்டியன் உடன்பாடுகளைக் கறாராகக் கடைப்பிடிக்க வேண்டுமென்று கோருகின்றனர். வியத்நாமிய மக்கள் கம்போடிய மக்களின் போராட்டத்தைப் பூரணமாக ஆதரிக்கின்றனர். அவர்களின் சுதந்திரத்தையும் அரசுரிமையையும் மதிக்கின்றனர், விடுதலை செய்யப்பெற்ற கம்போடிய பிரதேசங்களின் மீது காட்டுமிராண்டித் தனமாகக் குண்டு வீசும் அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளைக் கண்டனம் செய்கின்றனர்.

வியத்நாம் புரட்சி அடைந்த சகல வெற்றிகளுக்கும் சோவியத் மக்கள், சீன மக்கள், பிறசோதர சோஷலிச நாடுகளின் மக்கள், சர்வதேசக் கம்யூனிஸ்டு, தொழிலாளி வர்க்க இயக்கம், சமாதானத்தையும் நீதியையும் பேணிப் போற்றும் சகல நாடுகள், மற்றும் முற்போக்கு மனித குலம் முழுமையின் ஒருமைப்பாடும், மகத்தான ஆதரவும், உதவியும்தான் பெருமளவு காரணம் என்பதை நாங்கள் முன்பு போலவே தற்போதும் பூரணமாக உணருகிறோம். சகல கண்டங்களிலுமுள்ள தமது சகோதரர்கள், நண்பர்களின் நம்பிக்கைக்குத் தகுதியான முறையில், வியத்நாமிய மக்கள் தமது தற்போதைய இடர்ப்பாடுகளையும், துன்ப துயரங்களையும் சமாளித்து, தமது நாட்டின் நலன்களுக்காகவும், தமது உயர்ந்த சர்வதேசியக் கடமையை நிறைவேற்றும் வகையிலும், புதிய கட்டத்திலான தமது நியாயமான போராட்டத்தை பூரண வெற்றி கிட்டும் வரை தொடர்ந்து நடத்துவதென்று உறுதி பூண்டுள்ளனர்; உலக மக்களின் பொதுவான புரட்சிகர லட்சியத்திற்குத் தமது பங்குப் பணியை ஆற்றுவதற்குத் தங்குதடையின்றி தமது பலம் முழுவதையும் ஈடுபடுத்துவதற்குத் தயாராகியிருக்கிறார்கள்.

அருமைத் தோழர்களே,

நமது கட்சிகள், மக்களின் மகத்தான நட்புறவும் தீவிர ஒற்றுமையும் போராட்ட வேள்வியில் தோன்றி முதிர்ச்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யடைந்தன; இவை காலத்தின் வரலாற்றின் சோதனையில் தேறி மென்மேலும் வலுவடைந்து கொண்டும், அதிக ஸ்திரமடைந்துகொண்டும், உறுதியானவையாகவும், மீறவொண்ணாதவையாகவும் மாறி வருகின்றன. தனது வாழ்க்கை முழுவதும் வியத்நாமிய— சோவியத் நட்புறவைப் பேணி வந்த தோழர் ஹோ—சி—மின் அவர்களின் ஆணைகளைப் பின்பற்றி வரும் நமது கட்சியும், சர்க்காரும், மக்களும் நமதிருநாடுகளிடையேயான மகத்தான நட்புறவும், தீவிர ஒற்றுமையும் இனி எல்லாக் காலத்திற்கும் வலுப்பெற்று மலர்ச்சியுறுவதை உறுதி செய்வதற்காகத் தமது முயற்சிகள் அனைத்தையும் செலுத்துவதற்கு உறுதி கொண்டுள்ளனர்.

சகோதரர்கள், நண்பர்களிடையிலான சகல சந்திப்புகளின்போதும் ஏற்படுகின்ற இந்தக் குதூகலமான சூழலில் நான் வாழ்த்துக் கூற விரும்புகிறேன்.

கம்யூனிஸ சமுதாயத்தை நிர்மாணிக்கும் பணியில் சோவியத்மக்களுக்குப் புகழ்மிகு வெற்றிகள் ஏற்படுவதாக!

வடக்குப் பகுதியில் சோஷலிசத்தை நிர்மாணிப்பதிலும், தெற்குப் பகுதியில் சுதந்திரம், ஜனநாயகத்தின் லட்சியத்திற்கும், வியத்நாமை சமாதான பூர்வமாக ஐக்கியப்படுத்துவதற்கும் மகத்தான வெற்றி ஏற்படுவதாக!

வியத்நாமிய— சோவியத் மக்களிடையே நிரந்தரமான, வலிமைமிக்க, மகத்தான நட்புறவும், தீவிர ஒற்றுமையும் நீடூழி வாழ்க!

மார்க்சியம்— லெனினியக் கோட்பாடுகள், தொழிலாளி வர்க்க சர்வதேசியம் ஆகியவற்றின் அடிப்படையிலான சோதர சோஷலிச நாடுகளின், சர்வதேசக் கம்யூனிஸ்டு, தொழிலாளி வர்க்க இயக்கத்தின் ஒற்றுமை நீடூழி வாழ்க!

தோழர் லியோனித் இலியிச் பிரெஷ்னெவின் ஆரோக்கியத்திற்காக!

தோழர்கள் நிகொலாய் விக்தரோவிச் பொத்கோர்னி, அலெக்சி நிகலேயவிச் கோசிகின், மற்றும் சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின், சோவியத் அரசின் பிற தலைவர்களின் ஆரோக்கியத்துக்காக!

இங்கு குழுமியுள்ள சகல தோழர்களின் ஆரோக்கியத்திற்காக வாழ்த்துக் கூறுகிறேன்!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**1973 ஜூலை 11-ம் நாள் சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டி பொதுச் செயலாளர் தோழர் லியோனித் பிரெஷ்னேவிற்கு சர்வதேச லெனின் சமாதான விருது அளிக்கப்பட்டபொழுது தோழர் லீ துவான் ஆற்றிய உரை.**

மதிப்புக்குரிய தோழர் லியோனித் பிரெஷ்னேவ் அவர்களே,

சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி சோவியத் அரசாங்கத்தின் மதிப்புக்குரிய தோழர்களே,

மதிப்புக்குரிய தோழர்களே நண்பர்களே,

சோவியத் யூனியனுக்கு அதிகார பூர்வமான நட்புறவு விஜயத்தினை மேற்கொண்டுள்ள எமது தூதுக்குழு வியத்நாமிய மக்களின் மதிப்புக்குரிய நண்பரும் சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் பொதுச் செயலாளருமான தோழர் லியோனித் இலியிச் பிரேஷ்னேவுக்கு "மக்களிடை சமாதானத்தை வலுப்படுத்திய" பணிக்காக லெனின் விருது வழங்கப் பெறும் விழாவில் இன்று கலந்து கொள்வதில் பெரு மகிழ்ச்சி அடைகிறது.

எமது தூதுக்குழு உறுப்பினர்கள் சார்பில் தோழர் பிரெஷ்னேவுக்கு மிகவும் மனப்பூர்வமான எமது வாழ்த்துக்களையும் அன்பான பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த உயர்விருது வழங்கப்படுவதானது மிகவும் பொருத்தமான நிகழ்ச்சியாகும். தோழர் பிரெஷ்னேவும், சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியும், சோவியத் அரசாங்கமும் ஏகாதிபத்திய யுத்த வெறிக் கொள்கைகளுக்கு எதிராக உலக சமாதானத்திற்கான போராட்டத்திலும், உலக முற்று முள்ள மக்களின் உன்னத புரட்சி நோக்கங்களுக்காகவும், சமாதானம், தேசிய சுதந்திரம், ஜனநாயகம், சோஷலிசம் ஆகியவற்றுக்கும் எடுத்துக் கொண்ட தளராத முயற்சிகளைத் தொட்டே இந்த விருது அளிக்கப்படுகிறது.

நமது சகாப்தத்தில் சமாதானத்திற்கான போராட்டம் விசேஷ முக்கியத்துவமுடைய ஒரு புரட்சிகாக் கடமையாகும். சோவியத் யூனியன் இதர சோஷலிஸ்டு நாடுகளின் வலிமை இடைவிடாது வளர்ந்து வருவதும், புரட்சிகர,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமாதானம் விழையும் சக்திகளின் விடாப்பிடியான போராட்டமும் நிலையான சமாதானத்திற்கு ஒரு நம்பகரமான உத்தரவாதம்; அவை இன்றைய சர்வதேச நிலைமையில் முடிவமைதியை நோக்கிய ஒரு போக்கினை உருவாக்குகின்றன.

கடந்த காலத்தில் சோவியத் யூனியனும், சோதர சோவியத் மக்களும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தை எதிர்த்து, தமது நாட்டின் விமோசனத்திற்காக வியத்நாம் மக்கள் நடத்திய போராட்டத்திற்கு இடைவிடாத ஆதரவும் தன்னலமற்ற உதவியும் வழங்கி வந்திருக்கிறார்கள். இந்த ஆதரவும் உதவியும் வியத்நாம் மக்களின் வெற்றிக்கு முக்கியமான பங்குப் பணியாற்றியுள்ளன. போர் நிறுத்தப் பெற்று வியத்நாமில் சுதந்திரம் அரசுரிமை ஒற்றுமை வியத்நாமின் பிரதேச உரிமை ஆகியவற்றை அங்கீகரிக்கும் அடிப்படையில் பாரிஸ் உடன்பாடு கையொப்பமிடப்பட்டதில் பிரகடனமாயுள்ளன.

வியத்நாம் மக்களுக்கு சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியும், சோவியத் சோஷலிசக் குடியரசுகளின் ஒன்றிய அரசாங்கமும் சோதர சோவியத் மக்களும் அளித்து வந்துள்ள முக்கியமான மதிப்பு மிகுந்த ஆதரவுக்கும் உதவிக்கும் மீண்டும் ஒரு முறை எமது மனப்பூர்வமான ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சோவியத் யூனியனின் கம்யூனிச நிர்மாணத்தினைத் துரிதப்படுத்தவும், உலக சமாதானத்தையும் மக்கள் பந்தோபஸ்தையும் பாதுகாக்கவும் சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் 24ஆவது காங்கிரஸ் வகுத்து முன்வைத்துள்ள பிரமாண்டமான கடமைகளை சோவியத் மக்கள் வெற்றிகாமாக நிறைவேற்ற வேண்டும் என்று மனப்பூர்வமாக வேண்டுகிறோம்.

தோழர் பிரெஷ்னேவ் அவர்களே தங்களுக்கு உறுதியான உடலாரோக்கியமும் உங்கள் உத்தம பணிகளில் புதிய வெற்றிகளும் உறுவதாக என்று மனப்பூர்வமாக ிழைகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாஸ்கோவில் லிகசியோவ் மோட்டார் ஆலையில் கூட்டம்

மாஸ்கோ லிகசியோவ் மோட்டார் ஆலையின் ஊழியர்கள் ஜூலை 12ல், தோழர்கள் லிதுவான், பாம் வான் தாங் தலைமையிலான வியத்நாம் ஜனநாயகம் குடியரசு கட்சி, சர்க்கார் தூதுக் குழுவுக்கு அன்பான, சோதர பூர்வமான வரவேற்பு அளித்தனர். அந்த சந்தர்ப்பத்தில் சோவியத்—வியத்நாமிய நட்புறவுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. அக்கூட்டத்தில், தொழில் நிலையங்களையும், நிர்மாணத் திட்ட நிலையங்களையும் சேர்ந்த தொழிலாளர்களும், மாணவர்களும், அறிவுத் துறையினரும் உள்ளிட்ட ஆயிரக்கணக்கான மாஸ்கோவாசிகள் கலந்து கொண்டனர்.

சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் அரசியல் குழு உறுப்பினரும், சோவியத் கம்யூனிஸ்டுக்கட்சியின் மாஸ்கோ நகரக் கமிட்டியின் முதல் செயலாளருமான வி. வி. கிரிஷினும், வியத்நாம் உழைப்பாளி மக்கள் கட்சி மத்தியக் கமிட்டியின் முதல் செயலாளர் லிதுவானும் இக் கூட்டத்தில் உரையாற்றினார்கள்.

## தோழர் வி. வி. கிரிஷின் உரை.

அருமைத் தோழர் லிதுவான் அவர்களே,
அருமைத் தோழர் பாம் வான் தாங் அவர்களே,
மதிப்புக்குரிய வியத்நாமிய நண்பர்களே,
தோழர்களே,

வியத்நாம் உழைப்பாளி மக்கள் கட்சி மத்தியக் கமிட்டியின் முதற் செயலாளர் தோழர் லி துவான், வியத்நாம் ஜனநாயகக் குடியரசின் கட்சி,அரசுத் தூதுக்குழுவை சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி மாஸ்கோ நகரக் கமிட்டி, உழைப்பாளி மக்கள் பிரதிநிதிகளின் மாஸ்கோ சோவியத் சார்பிலும் தலைநகரின் கம்யூனிஸ்டுகள், உழைப்பாளி மக்கள், மற்றும் இந்தக் கூட்டத்தில் பங்கெடுத்துக் கொண்டுள்ள அனைவர் சார்பிலும் என் இதய பூர்வமாக வரவேற்கிறேன். இந்த விஜயம், நெருக்கமான ஒத்துழைப்பு உறவுகளின் வளர்ச்சியில் ஒரு புதிய, முக்கிய கட்டத்தைக் குறிக்கிறது.

மார்க்சிய—லெனினியக் கோட்பாடுகளையும் தொழிலாளி வர்க்க சர்வதேசியத்தையும், நமது லட்சியங்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றுமையையும் அடிப்படையாகக் கொண்ட நமது நட்புறவும் ஒருமைப்பாடும் வியத்நாம் ஜனநாயகக் குடியரசு மற்றும் சோவியத் யூனியனின் ஜீவாதார நலன்களுக்கு முற்றிலும் இசைவானதாயிருக்கின்றன.

சோவியத் கம்யூனிஸ்டுகளாகிய நாம் உலகின் முதலாவது சோஷலிச நாட்டின் உழைப்பாளி மக்கள், சோஷலிச கூட்டமைப்பு நாடுகளின் ஒற்றுமையை மேலும் பலப்படுத்துவதன் நலனுக்கும், சமாதானம் முன்னேற்ற லட்சியத்தின் நலனுக்கும் இந்த நட்புறவை எல்லா வழிகளிலும் பலப்படுத்துவதை நமது கடமை என்று கருதுகிறோம்.

ஏகாதிபத்திய— ஆக்கிரமிப்பை எதிர்த்து— தமது நாட்டின் விடுதலைக்கும், சுதந்திரத்திற்கும் வியத்நாமின் சிறந்த புதல்வர்களும் புதல்விகளும் நடத்திய வீரம் பொருந்திய போராட்டத்தை சகல சோவியத் மக்களும் மிகுந்த அக்கறையுடன் கவனித்து வந்துள்ளனர். வியத்நாமியப் படை வீரர்கள், தொழிலாளர்கள், விவசாயிகளின் உறுதியையும் துணிவையும் நாங்கள் வியந்து பாராட்டினோம், தொடர்ந்து பாராட்டி வருகிறோம்; அவர்கள் போரின் சோதனைகளின் போது, வெற்றியில் தமது நம்பிக்கையை இழக்க வில்லை, வெற்றியடையவும் செய்தனர்.

வியத்நாமிய உழைப்பாளி மக்கள் கட்சிக்கும், அதனுடைய மத்தியக் கமிட்டிக்கும், அதனுடைய தலைவர்களுக்கும் இன்று நாங்கள் மீண்டும் எங்கள் ஆழ்ந்த மரியாதையைத் தெரிவிக்கிறோம். வெல்லற்கரிய மார்க்சிய—லெனினிய போதனையை ஆயுதமாகக் கொண்டு, தோழர் ஹோ சி மின்னின் ஆணைகளுக்கு விசுவாசமாக வியத்நாமியக் கம்யூனிஸ்டுகளின் கட்சி, போரின் கடுமையான ஆண்டுகளில் வெகு ஜனங்களுக்குத் தலைமை தாங்கி நின்று, வியத்நாம் ஜனநாயகக் குடியரசைத் தென்கிழக்காசியாவில் சோஷலிசம், சுதந்திரம், சமாதானத்தின் ஒரு வலுவான கோட்டையாக மாற்றினர்.

நமது வியத்நாமிய சகோதரர்களுடன் கூட ஒன்றுபட்டு நாங்கள், வியத்நாமுடனான பரந்த ஒருமைப்பாடு இயக்கத்தை பாராட்டுகிறோம். இந்த இயக்கம், சோஷலிச நாடுகளுடைய, கம்யூனிஸ்டு, தொழிலாளர் கட்சிகளுடைய மற்றும் முற்போக்கு மனித குலம் முழுமையின் முயற்சிகளை ஒன்றிணைத்தது. ஒரு நாட்டு மக்கள் அவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியாயமான லட்சியத்திற்காகப் போராடிக் கொண்டிருக்கும் போது சர்வதேச ஒருமைப்பாடு, உதவி, ஆதரவு எனும் பெருமித அணியின்மீது சார்ந்திருக்கும்போது அம்மக்களைத் தோற்கடிப்பது அசாத்தியம் என்ற உண்மைக்கு ஒரு சான்றாகும்.

சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் பொது செயலாளர் லியோனித் பிரெஷ்னேவ், ஜூலை 10ம் நாள் தனது உரையில் வலியுறுத்தியது போன்று, சோவியத் மக்கள் எப்போதுமே தமது வியத்நாமிய சகோதரர்களுக்கு ஆதரவாக இருந்து வந்துள்ளனர். சமாதானம், சோஷலிசத்திற்கான அதனுடைய போராட்டத்தில் வியத்நாமுக்கு சகல துறை ஆதரவும் உதவியும் அளிப்பதைத் தமது சர்வதேசியக் கடமை என்று அவர்கள் எப்போதுமே கருதி வந்துள்ளனர்.

"போல்ஷிவிக்குகள் ஒடுக்கப்பட்ட மக்கள் சம்பந்தமாக மனித நேயம் மிக்கத் தீர்மானங்களை நிறைவேற்றுவதோடு நின்று விடுவதில்லை; மாறாக அவர்களுக்கு தார்மிக ரீதியிலும், பொருளாதார ரீதியிலும் உதவி செய்கின்றனர்", என்று தோழர் ஹோ சி. மின், சோவியத் அரசின் துவக்கக் காலத்தில் எழுதினார். வியத்நாமின் முதலாவது கம்யூனிஸ்டின் இந்த வார்த்தைகள் மக்களின் விடுதலைப் போராட்டம் சம்பந்தமாக எமது கட்சி மற்றும் சோவியத் அரசினுடைய, மெய்யான சர்வதேசிய நிலையை உயர்ந்தபட்ச அளவு துல்லியமாக குணம்சப்படுத்திக் கூறுகின்றன. வியத்நாம் மக்களின் வீரம் செறிந்த போராட்டம் அதனுடைய தெளிவான சான்றாகும். சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் இரண்டு காங்கிரசுகளில் வியத்நாமிய மக்களின் நியாயமான லட்சியத்திற்கு ஆதரவாக முக்கிய தஸ்தவேஜுகள் ஏற்கப்பட்ட உண்மையிலும் சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் தொழிலாளி வர்க்க சர்வதேசியம் வெளிப்படுத்தப்பட்டது.

சோவியத் யூனியன், பிற சோஷலிச நாடுகளுடன் கூட வியத்நாம் ஜனநாயகக் குடியரசுக்கு இடையறாது அரசியல், ராஜதந்திர, மற்றும் பொருளாயத ஆதரவு அளித்து வந்தது. ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பைத் தீர்மானமாக எதிர்த்தது என்ற உண்மையிலும் இது வெளிப்படுத்தப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போராடும் வியத்நாமுக்கு ஒருமைப்பாடு தெரிவிக்கும் எண்ணற்ற கூட்டங்களில் கோடிக்கணக்கான தொழிலாளர்களும் விவசாயிகளும் அறிவுத் துறையினரும், மாணவர்களும் கலந்து கொண்டனர். சோவியத் யூனியன் பல்வேறு பொருட்களை வியத்நாமுக்கு கப்பல் மூலம் அனுப்பி வைத்தது; நாட்டின் ராணுவ, பொருளாதாரக் கோரிக்கைகளை நிறைவு செய்வதற்காக சாதனங்களையும் பிற பொருட்களையும் சோவியத் யூனியன் அனுப்பிவைத்தது. வியத்நாம் ஜனநாயக குடியரசின் தேசிய பொருளாதாரத்திற்காக தனித்தேர்ச்சியாளர்களைப் பயிற்றுவிப்பதில் பெருமளவு சாதிக்கப்பட்டுள்ளது. தற்போதும் சாதிக்கப்பட்டு வருகிறது.

வியத்நாமுக்கு அனுப்பி வைக்கப்பெற்ற சோவியத் பிரஜைகள் அதனுடைய போராடும் வீரர்களுக்கு நவீன ராணுவ சாதனங்களைக் கையாள்வதற்கும் அதனுடைய தொழிலாளர்கள் தொழிற்சாலைகளைக் கட்டுவதற்கும் உதவி செய்துள்ளனர். சோதர மக்களுக்கு உதவிசெய்து வந்துள்ள பல சோவியத் தனித்தேர்ச்சியாளர்களுக்கும் கடற்படை மாலுமிகளுக்கும் வியத்நாம் ஜனநாயகக் குடியரசு சர்க்கார் உயர் விருதுகளை வழங்கியுள்ளது.

தோழர்களே, வியத்நாமிய நண்பர்களுடன் மாஸ்கோ வாசிகளின் இந்த சந்திப்பு தலைநகரின் மிகப் பெரிய, முன்னேற்றமான தொழில் நிலையங்களில் ஒன்றில் நடைபெறுகிறது. இது தனது தேசபக்த உழைப்பு மரபுகளுக்குப் புகழ் பெற்றதாகும். லிகசியோவ் மோட்டார் ஆலையின் உழைப்பாளி மக்களோடு கூட இந்தக் கூட்டத்தில் வேறு பல தொழில் நிறுவனங்கள் ஆராய்ச்சிக் கழகங்கள் வடிவமைப்பு நிலையங்கள், மற்றும் மாஸ்கோ கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளும் கலந்துகொள்கிறார்கள். இந்த அகில மாஸ்கோ கூட்டம் சோதர நட்புறவு ஒருமைப்பாடு மற்றும் வியத்நாம் மக்களின் பாலான சோவியத் மக்களின் ஆழ்ந்த பரிவுணர்ச்சி ஆகியவற்றின் புதிய சான்றாகும்.

சகல சோவியத் உழைப்பாளி மக்களைப் போன்றே மாஸ்கோ வாசிகளும் வியத்நாமுக்கு உதவி வழங்குவதை தமது ஜீவாதார அக்கறையாகக் கருதி வந்துள்ளனர். போராடும் வியத்நாமுக்கு உதவி புரிவதில் பல மாஸ்கோ நிறுவனங்கள், நிலையங்களின் ஊழியர்கள் பங்கெடுத்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுள்ளனர். லிகசியோவ் மோட்டார் ஆலை மட்டுமே, நடப்பு ஐந்தாண்டு திட்டகாலத் துவக்கத்திலிருந்து 7000க்கு மேற்பட்ட லாறிகளையும் 620 மோட்டார் எஞ்சின்களையும் சுமார் பத்துலட்சம் ரூபிள் மதிப்புடைய உதிரி உறுப்புகளையும் உற்பத்தி செய்துள்ளது. "டைனமோ" ஆலை தயாரித்த மின்சார எஞ்சின்களும், பிற மாஸ்கோ நிறுவனங்கள் உற்பத்திசெய்த பால் பேரிங்குகள், கருவிகள், சாதனங்களும் வியத்நாம் ஜனநாயக குடியரசின் தேசியப் பொருளாதாரத்தில் விரிவாக உபயோகப்படுத்தப்படுகின்றன.

வியத்நாமில் போரை முடிவுக்குக் கொண்டுவந்து சமாதானத்தை, நிலைநாட்டும் பாரிஸ் உடன்பாடு கையெழுத்திடப்பட்டதை சோவியத் மக்கள் உளப்பூர்வமாக வரவேற்றனர். வரலாற்றில் மிகவும் அழிவுகரமான ஒரு போரினூடே வாழ்ந்த பின்னர், தற்போது தமது சமாதான பூர்வமான, ஆக்கப் பணியினை மீண்டும் தொடங்க முடிந்துள்ள நமது வியத்நாமிய சகோதரர்களின் குதூகலத்தை நாங்கள் பகிர்ந்து கொள்கிறோம்.

ஆனால் நமது வியத்நாமிய நண்பர்களை போன்றே, பாரிஸ் உடன் பாட்டை அமுல் நடத்துவதற்கு ஒரு கடினமான போராட்டப் பாதை இன்னும் தமக்கு முன்னால் உள்ளது என்ற உண்மையை நாங்கள் உணருகிறோம்.

வடக்கு வியத்நாமில் சோஷலிசத்தை நிர்மாணிப்பதிலும் வியத்நாமிய மக்களின் காலகாலமான கனவாகிய சமாதான பூர்வமான ஓர் ஐக்கிய ஜனநாயக, சுதந்திர வியத்நாமை உருவாக்குவதிலும் மகத்தான பணி ஆற்றப்பட வேண்டியுள்ளது. இந்த மக்களின் மகத்தான ஜீவ சக்தியை நாங்கள் நன்கு அறிவோம். அவர்களை எதிரிடும் மகத்தான கடமைகளை அவர்கள் வெற்றிகரமாக நிறைவேற்றுவார்கள் என்று நம்பிக்கையுடனிருக்கிறோம். சோவியத் மக்கள் சோதர சோஷலிச நாடுகளின் மக்கள் உலகின் சகல முற்போக்கு சக்திகள் ஆகியோர் உங்களுடன் நமது வியத்நாமிய நண்பர்களுடன் ஒருமைப்பாடு தெரிவிக்கின்றனர்.

தோழர்களே படைப்பு பணியில் ஈடுபட்டுள்ள சோவியத் மக்கள் தற்போது 4வது சோவியத் கம்யூனிஸ்டு கட்சி காங்கிரசில் ஏற்கப்பட்ட கம்யூனிஸ நிர்மாணத்தின் புதிய கட்டத்திற்கான வேலைத் திட்டத்தைச் செயலாக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வதில் தமது முயற்சிகளை மையப்படுத்தி வருகின்றனர். 9வது ஐந்தாண்டு திட்டம் வெற்றிகரமாக நிறைவேற்றப் பட்டு வருகிறது. சோஷலிச உற்பத்தியில் விரைவான வளர்ச்சி விகிதங்களை அடைவது அதனுடைய திறனை உயர்த்துவது, உழைப்பின் உற்பத்தி ஆற்றலை அதிகரிப்பது என்ற அடிப்படையிலும் விஞ்ஞான தொழில் நுட்பவியல் முன்னேற்றத்தின் அடிப்படையிலும் மக்களின் பொரு ளாயத கலாசாரத் தரங்களில் பெருமளவு உயர்வை உறுதி செய்வது திட்டத்தின் பிரதான குறிக்கோளாகும்.

அனைத்து சோவியத் மக்களின் சிறப்பான சாதனை களுக்கு தகுதியான முறையில் மாஸ்கோ உழைப்பாளி மக்கள் தமது பங்குப் பணியாற்றி வருகின்றனர். ஐந்தாண்டு திட்டக் காலத்தின் முதல் இரண்டு ஆண்டு களின் போது மாஸ்கோவின் தொழில்துறை உற்பத்தி சுமார் 12சதம் அதிகரித்துள்ளது. பயனீட்டாளர் பண்டங் கள் உள்ளிட்டு மிக முக்கியமான இனங்களின் உற்பத்திக் குறியளவுகளுக்கு அதிகமாகவே உற்பத்தி செய்யப்பட்டுள் ளது. ஆலைகளையும், தொழில் நிலையங்களையும் புனரமைப் பதற்கும் நவீனப்படுத்துவதற்கும்,பண்டங்களின் தரத்தை மேம்படுத்துவதற்கும் நிர்வாகத்தை மேம்படுத்துவதற்கும் பெருமளவு சாதிக்கப்பட்டுள்ளது. மாஸ்கோ தொழிற்துறை உற்பத்தியின் அதிகரிப்பு முழுமைக்கும் உழைப்பின் உயர் வான உற்பத்தி ஆற்றல் தான். காரணமேயன்றி தொழிலா ளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பு காரணமல்ல. பெருவீத வீட்டு வசதி வளர்ச்சியும் கலாசார, சேவா நிலையங்களின் நிர்மாணமும் திட்டமிட்டபடி நிறைவேற்றப்பட்டுள்ளது.

ஐந்தாண்டு திட்டம் முழுமையும் வெற்றிகரமாக நிறை வேற்றப்படுவது இவ்வாண்டு அடையப்பெறும் பலன் களையே பெருமளவு சார்ந்திருக்கும் தலைநகரின் உழைப் பாளி மக்கள் இந்த உண்மையை நன்கு அறிந்துள்ளனர். கட்சியின் சர்க்காரின் அறைகூவலுக்கு இணங்க அவர்கள் 1973ம் ஆண்டை தீவிர உழைப்பு ஆண்டாக்குவதற்கு முடிவு செய்துள்ளனர். குறைந்த செலவில் முன்னிலும் தரமான, அதிகமான பண்டங்களை உற்பத்தி செய்வதற்குத் தொழி லாளர்கள், எஞ்சினியர்கள், தொழில் நிபுணர்கள் அலுவலக ஊழியர்கள் ஆகியோர் சகல முயற்சிகளும் செய்து வருகின் றனர். தாங்கள் ஏற்றுக் கொண்டுள்ள ஐந்தாண்டு திட்டத் தின் முதல் மூன்று ஆண்டுகளுக்கான திட்டத்தை நிறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேற்றுவது சம்பந்தமான சோஷலிஸ கடமை பொறுப்புகளை மாஸ்கோ வாசிகள் நிறைவேற்றுவார்கள் என்று நாம் நமது வியத்நாமிய நண்பர்களுக்கு உறுதி கூறுகிறோம்.

சோஷலிச சமுதாயத்தின் அதன் பொருளாதாரம் கலாசாரத்தின் முரணற்ற வளர்ச்சியிலும் சோவியத் அரசை பலப்படுத்துவதிலும் சோவியத் யூனியனின் கம்யூனிஸ்டுகளும், உழைப்பாளி மக்களும் தமது பிரதான சர்வதேசியக் கடமையைக் காண்கின்றனர். இது சகல நாடுகளின் கம்யூனிஸ்டுகளின் பொதுவான புரட்சிகர லட்சியத்திற்கும் மக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டத்திற்குமான அவர்களின் மிகவும் மதிப்பிடற்கரிய பங்குப் பணியாகும்.

கம்யூனிஸ நிர்மாணத்தில் சோவியத் யூனியனின் வெற்றி நமது கட்சியும் அரசும் கடைப்பிடித்து வரும் அயல் துறைக் கொள்கையுடன் பிரிக்கவொண்ணாதவாறு சம்பந்தப்பட்டுள்ளது.

சோவியத் கம்யூனிஸ்டு கட்சியின் 24வது காங்கிரஸ் வகுத்தளித்து மத்தியக் கமிட்டியின் ஏப்ரல் (1973) பிளீனம் கூட்டத்தினில் மேலும் வளர்க்கப்பெற்ற அயல் துறைக் கொள்கை குறிக்கோள்கள் முரணற்று செயலாக்கப்பட்டு வருகின்றன. 24வது காங்கிரஸ் நிறைவேற்றிய சமாதானத் திட்டத்தை சோதர சோஷலிச நாடுகளும் கம்யூனிஸ்டு தொழிலாளர் கட்சிகளும் சமாதானம் நாடுகளின் பந்தோபஸ்து என்ற லட்சியங்களை பேணிப் போற்றுகின்ற அனைவரும் செயலூக்கமாக ஆதரித்து வருகின்றனர். இன்று சர்வதேச பதற்றங்களைத் தணிப்பதற்கும் சமாதானம் நாடுகளின் பந்தோபஸ்துக்கும் ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்பு சூழ்ச்சிகளுக்கு எதிராகவுமான போராட்டத்தில் புதிய சக்திகள் சேர்ந்து வருகின்றன.

ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக்கு எதிராக வீரம் செறிந்த வியத்நாமிய மக்களும் சகல சமாதான சோஷலிச சக்திகளும் அடைந்த வெற்றி அண்மை கடந்த காலத்தின் மிக முக்கிய சர்வதேச நிகழ்ச்சிகளில் ஒன்றாகும்.

சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின் பொதுச் செயலாளர் லியோனித் பிரெஷ்னேவ் சமஷ்டிக் குடியரசுக்கு விஜயம் செய்தது, சோவியத்—மேற்கு ஜெர்மன் உடன்பாடுகள் தோழர் பிரெஷ்னேவுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரெஞ்சு அதிபர் பாம்பிடுவுக்கும் இடையேயான பேச்சுக்கள் இவ்விரு நாடுகளிடையே ஒத்துழைப்பு வளர்ச்சியடைவதற்கு ஒரு புதிய பங்குப்பணி ஆற்றியது— ஆகிய இவை யாகவும் சோஷலிசத்தின் சர்வதேச நிலையை பலப்படுத்துவதற்கும் சர்வதேச நிலைமையை மேம்படுத்துவதற்கும் அசாதாரண முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

சமீபத்தில் சோவியத்— அமெரிக்க உச்சகட்ட மாநாடு சர்வதேச வாழ்வில் ஒரு தலைசிறந்த நிகழ்ச்சி என்று உலக மக்கள் நியாயமாகவே கருதுகின்றனர். லியோனித் பிரெஷ்னேவும் அமெரிக்க அதிபரும் கையெழுத்திட்ட உடன்பாடுகள், யாவற்றுக்கும் மேலாக அணு ஆயுதப் போரை தவிர்ப்பது குறித்த உடன்பாடு வரலாற்று முக்கியத்துவமுடையவை ஆகும். இவை சோவியத்— அமெரிக்க உறவுகளில் குணம்ச ரீதியில் ஒரு புதிய சட்டத்தின் துவக்கத்தைக் குறிக்கின்றன. கோட்பாடு ரீதியான வர்க்க நிலைகளை உறுதியாகவும் முரணின்றியும் பாதுகாத்து நிற்கும் சோவியத் யூனியன், சமாதான சகவாழ்வுப் பாதையில் சோவியத்— அமெரிக்க உறவுகளை வளர்ப்பதில் மேலும் முன்னேற்றம் காண்பதற்கும், பொருளாதார, கலாசார உறவுகளை விரிவுபடுத்துவதற்கும் பணியாற்றி வருகிறது. சோவியத்— அமெரிக்கப் பேச்சுக்களின் பலன்கள் சமாதானத்தையும் மக்களின் சந்தோபஸ்தையும் பலப்படுத்தும் லட்சியத்தின் மீது ஒரு பெரிய சாதகமான பிரதிபலிப்பை ஏற்படுத்தும் என்பதில் ஐயமில்லை.

லியோனித் பிரெஷ்னேவின் அமெரிக்க விஜயத்தின் விளைவுகளைப் பரிசீலனை செய்த சோவியத் கம்யூனிஸ்டு கட்சி மத்தியக் கமிட்டியின் பொலிட்— பீரோ— சோவியத் யூனியனின் சுப்ரீம் சோவியத்தின் தலைமைக்குழு, சோவியத் அமைச்சரவை ஆகியவை இந்த விஜயத்தின் அரசியல், நடைமுறைப் பலன்களை பூரணமாக அங்கீகரித்தன என்பது தெரிந்ததே. இந்த விஜயம் மகத்தான முக்கியத்துவமுடைய ஒரு நிகழ்ச்சியாகும். எமது நாட்டில் சகல உழைப்பாளி மக்களும் இந்த விஜயத்தை இவ்வாறே மதிப்பிடுகின்றனர்.

சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி மத்தியக் கமிட்டியின், சோவியத் சர்க்காரின் லெனினிய அயல்துறைக் கொள்கை எமது ஜீவாதாரமான தேசிய நலன்களுடனும் உலக சோஷலிசம், தேசவிடுதலை இயக்கத்தில் நலன்களுடனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இசைவாக உள்ளது. இது மாறுப்பட்ட சமூக அமைப்புகளை உடைய நாடுகளின் சமாதான சகவாழ்வுக் கோட்பாடுகள் தேச விடுதலைக்கான நியாயமான போராட்டத்திற்கு ஆதரவு ஏகாதிபத்தியத்திற்கும் அதனுடைய ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளுக்கும் ஓர் உறுதியான பதிலடி கொடுப்பது ஆகியவற்றை இணைத்துக் கடைப்பிடிப்பதை அடிப்படையாகக் கொண்டது.

சகல சோவியத் மக்களும்— மாஸ்கோவாசிகளின் உள்ளிட்டு சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியும், அரசும் கடைப்பிடிக்கும் அயல் துறைக் கொள்கைகளைப் பூரணமாக அங்கீகரிக்கின்றனர். சமாதானத்திற்காகக் கட்சியின் ஓய்வொழிச்சலற்ற அக்கறைக்காகவும் எமது மக்களின் படைப்புப் பணிக்கு சாதகமான நிலைமைகளை ஏற்படுத்துவதற்காகவும் அவர்கள் அதற்கு ஆழ்ந்த நன்றி தெரிவிக்கின்றனர். சோஷலிச கூட்டமைப்பை மேலும் பலப்படுத்துவது, சர்வதேசக் கம்யூனிஸ்டு, தொழிலாளி வர்க்க இயக்க சக்திகள் அனைத்தையும் திரட்டுவது என்ற சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சியின் முரணற்ற கொள்கையை சோவியத் உழைப்பாளி மக்கள் ஒரு மனதாக ஆதரிக்கின்றனர். உலகு தழுவிய சமாதானத்தையும் பந்தோபஸ்தையும் உறுதி செய்வதற்கும் நமது அரசின் அயல்துறைக் கொள்கையைச் செயலாக்குவதற்கும் தோழர் லியோனித் பிரெஷ்னேவ் ஆற்றியுள்ள அளவற்ற தனிப்பட்ட பங்குப் பணியை சோவியத் மக்கள் உயர்வாகப் பாராட்டுகின்றனர். தோழர் லியோனித் பிரெஷ்னேவுக்கு சர்வதேச லெனின் சமாதானப் பரிசு வழங்கப்பட்டது குறித்து அவர்கள் ஆழ்ந்த மனநிறைவு தெரிவிக்கின்றனர். சமாதானத்தின் நன்மைக்காகவும் மகத்தான கம்யூனிசக் கருத்துக்களின் வெற்றிக்காகவுமான தோழர் பிரெஷ்னேவின் பணியில் அவருக்கு புதிய வெற்றிகள் கிட்டுவதாக என்று விழைகிறோம்.

சோவியத் அயல்துறைக் கொள்கையின் வெற்றிகள் பெருமளவுக்கு தேசியப் பொருளாதாரத்திலும் கலாசாரத்திலும் ஏற்படும் முன்னேற்றத்தையும் பொருளாதாரத் திட்டங்களை நிறைவு செய்வதையும் சார்ந்துள்ளது என்ற உண்மையை நன்கு உணர்ந்துள்ள சோவியத் உழைப்பாளி மக்கள். சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 24வது காங்கிரஸ் வகுத்தளித்துள்ள மகத்தான நோக்கங்களை செயலாக்குவதற்கு எல்லா முயற்சியும் செய்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோழர்களே, இன்று நாம் நமது வியத்நாமிய நண்பர்களை, வியத்நாமிய உழைப்பாளி மக்கள் கட்சி மத்தியக் கமிட்டியின் முதல் செயலாளர் தோழர் லி. துவான், வியத்நாமிய ஜனநாயக குடியரசு பிரதம மந்திரி. பாம் வான் தாங் ஆகியோர் தலைமையில் வந்துள்ள வியத்நாம் ஜனநாயகக் குடியரசின் கட்சி, அரசுத் தூதுக் குழுவை சோஷலிசம், கம்யூனிஸம் என்ற உண்மையான லட்சியங்களின் வெற்றிக்கும் சமாதானத்திற்கும் உழைக்கும் மக்களின் மகிழ்ச்சியான வாழ்வுக்குமான போராட்டத்தில் நமது வர்க்க சகோதரர்களை கூட்டாளிகளை வாழ்த்துகிறோம்.

தலைநகரின் கம்யூனிஸ்டுகளின் சார்பிலும், சகல மாஸ்கோ வாசிகளின் சார்பிலும் தோழர்கள் லி துவான், பாம் வான் தாங் ஆகிய உங்களுக்கு வியத்நாம் ஜனநாயகக் குடியரசின் கட்சி, அரசுத் தூதுக்குழுவின் எல்லா உறுப்பினர்களுக்கும் அவர்களின் மூலமாக சகல வியத்நாம் மக்களுக்கும் எமது உளங்கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம். அவர்களது மக்களின் மாபெரும் வெற்றிக்காக அவர்களை மீண்டும் பாராட்டுகிறோம். அனைத்து சோவியத் மக்களைப் போன்றே, மாஸ்கோ வாசிகளும் நமது வியத்நாமிய சகோதரர்களுடன் நட்புறவையும் ஒருமைப்பாட்டையும் தொடர்ந்து வலுப்படுத்துவார்கள். உழைப்பாளி மக்கள் கட்சியின் வழிகாட்டுதலின் கீழ் வடக்குப் பகுதியில் சோஷலிசத்தை நிர்மாணித்துக் கொண்டும் சமாதானம் ஜனநாயகம் மெய்யான சுதந்திரம் என்ற பாதையில் தெற்கு வியத்நாமின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டுக் கொண்டும் வருகிற வீரம் செறிந்த மக்களுக்குத் தொடர்ந்து உதவியும் ஆதரவும் அளித்து வருவோம்.

ஓர் ஒன்றுபட்ட சமாதான சுதந்திர சுபிட்ச வியத்நாமை உருவாக்குவதற்கான பணியில் நமது வியத்நாமிய சகோதரர்கட்கும் புதிய வெற்றிகள் கிட்டுவதாக என்று விழைகிறோம்.

நிரந்தரமான, வெல்லற்கரிய— சோவியத் வியத்நாமிய நட்புறவு நீடூழி வாழ்க!

சோஷலிச கம்யூனிஸ நிர்மாணத்திற்கான மாபெரும் திட்டங்களை செயலாக்குவதற்கான போராட்டத்தில் சோஷலிச கூட்டமைப்பினது மக்களின் ஒற்றுமையும் ஒருமைப்பாடும் நீடூழி வாழ்க! கம்யூனிசம் நீடூழி வாழ்க!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தோழர் லி துவான் உரை

**அன்புத் தோழர்கள் கிரிஷின்,**

**மாஸுரோவ் டொல்கிக் அவர்களே!**

**அன்புத் தோழர்களே, நண்பர்களே!**

மாபெரும் சோவியத் யூனியனுக்கு, எமது மட்டற்ற அன்பிற்குப் பாத்திரமான நாட்டிற்கு வந்துள்ள எமது தூதுக்குழு, வியட்நாம் மக்கள் தங்கள் தாயகத்தின் விடுதலைக்காகவும் சுதந்திரத்திற்காகவும் தொடுத்துள்ள நீண்டதும் கடினமானதுமான போராட்டத்தில் மகத்தான வெற்றியை ஈட்டியுள்ள சூழ்நிலையில் உங்களுக்கு, வியட்நாமின் மக்களது அன்பையும் நல்லெண்ணமிக்க வாழ்த்துக்களையும் ஆழ்ந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறது.

நாம் இன்று எமது வெற்றி குறித்து மகிழ்ச்சியடையும் அதே வேளையில், தோழர் ஹோ சி மின் கூறிய வார்த்தைகளை ஆழ்ந்த உணர்ச்சிக்கனிவுடன் நினைவு கூருகிறோம். "வியட்நாமின் தொழிலாள வர்க்கமும் அனைத்து மக்களும் துன்பகரமான கடந்த காலத்தின் அடிமைத்தனத்தையும், ஏராளமான, புகழ்மிக்க வெற்றிகளைத் தங்களுக்களித்த கடினமான தன்னலமற்ற போராட்டத்தின் ஒவ்வொரு கட்டத்தையும் பற்றி எத்தனை அதிகமாக நினைக்கின்றார்களோ, அதேயளவுக்கு லெனின் பாலும் அக்டோபர் புரட்சியின்பாலும் தாம் கடமைப்பாடு கொண்டுள்ளார்கள் என்ற உண்மையை ஆழமாக அறிவார்கள்" என்று ஹோ சி மின் கூறினார். உண்மையிலேயே அரை நூற்றாண்டுக்காலத்தைக் கொண்ட, இடுக்கண்களும் துயரங்களும் நிறைந்த, அதே வேளையில் புகழ்மிக்க அருஞ்செயல்களுக்காகச் சிறப்புப் பெறும் போராட்டமானது அக்டோபர் புரட்சியின் செல்வாக்கைப் பெற்றிருந்தது. அது இரண்டாவது உலக யுத்தத்தில் சோவியத் யூனியன் அடைந்த மாபெரும் வெற்றியுடனும் சோஷலிஸ கம்யூனிஸ நிர்மாணத்தில் அது ஈட்டிய பிரமாண்டமான சாதனைகளுடனும், சோவியத் மக்களின் சக்திமிக்க ஆதரவுடனும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரந்ததும் மதிப்பிடற்கரியதுமான உதவிகளுடனும் பிணைக்கப்பட்டிருந்தது.

வியட்நாமிய மக்கள் கலோனியல் நுகத்தடியின் கீழ் அவதியுற்ற வேளையில், தோழர் ஹோசிமின் பல்லாயிரக் கணக்கான மீட்டர்களையும் தாண்டி லெனினது தாயகத் திற்கு, அக்டோபர் புரட்சியின் தாயகத்திற்கு வந்து தமது மக்களினதும் தமது நாட்டினதும் விடுதலைக்கான பாதையை— சோஷலிஸத்துக்கும் கம்யூனிஸத்துக்குமான பாதையைக் கண்டு கொண்டார். கலோனியல் ஆட்சியின் போது வியட்நாமின் புரட்சியாளர்களுக்கு வெற்றியின் நம்பிக்கைக்கான ஆதார சக்தியாகவும் பெரும் தூண்டுதல் வளமாகவும் வியட்நாமின் எதிர்காலத்துக்கான விழுமிய தோற்றமாகவும் சோவியத் யூனியன் என்றைக்குமே விளங்கிவந்துள்ளது.

'வியட்நாம் நீடூழி வாழ்க," "சோவியத் யூனியன் நீடூழி வாழ்க" என்ற வார்த்தைகளை உச்சரித்தவாறே ஏராளமான நமது தோழர்கள் தூக்குமேடை ஏறியுள்ளனர். வீரமிகு சோவியத் ராணுவமும் சோவியத்மக்களும் பாஸிஸத் துக்கு எதிரான ரத்தச்சாக்காட்டுப் போரில் ஈட்டிய மகத் தான வெற்றியின் காரணமாக வியட்நாமின் வரலாற்றில் அதி அற்புதமானதொரு பக்கத்தைத் திறந்து வைத்த ஆகஸ்ட் புரட்சி வெற்றியடைவதற்குச் சாதகமான நிலைகள் உருவாகின.

சோவியத் கம்யூனிஸ்டுகளும் சகல சோவியத் மக்களும் வியட்நாமிய மக்கள் மீது கொண்டுள்ள மனப்பூர்வமான அனுதாபம்,அவர்கள் தமது மேலான சர்வதேசிய உணர்வின் வழிநின்று வழங்கிய ஆதரவிலும் பரந்த உதவியிலும் தெளி வாக வெளிப்படுத்தப்பட்டது. சோவியத் யூனியன் இந்த உதவியை வியட்நாமிய மக்கள் எகாதிபத்திய ஆக்கிரமிப் பாளர்களுக்கு எதிராகத் தொடுத்த இரண்டு போராட்டங் களுக்கும் சோஷலிஸ நிர்மாணத்துக்கும் வழங்கியது.

அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு எதிராகவும் தமது தாயகத் தின் விடுதலைக்காகவும் வியட்நாம் மக்கள் தொடுத்த போராட்டத்தின் காலகட்டம் முழுவதிலும் அவர்கள் சோவியத் மக்களின் ஆதரவை உணர்ந்துள்ளதுடன், வியட் நாமுடன் ஒருமைப்பாடு கொள்வதும் உதவி செய்வதும் சோவியத் மக்களது கடமை, அது அவர்களது நெஞ்சங் களில் இருந்து எழுகிறது என்று நீங்கள் ஏற்கனவே பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தடவை வலியுறுத்தியதற் கொப்ப, வியட்நாமிய மக்கள் தமது நெஞ்சங்களின் அன்பையும் தமது அபிலாஷைகளை யும் உழைப்பின் கனிகளையும் அவர்களுடன் பகிர்ந்து கொண்டார்கள். வியட்நாம் மக்களுடனும் சகல இந்தோ—சீன மக்களுடனும் ஒருமைப்பாடு தெரிவிக்கும் பிரபல்ய மிக்க, சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் 23வது 24வது காங்கிரஸ்களின் அறிக்கைகளும் உரைகளும் நமது நாட்டு மக்களுக்கும் சகல போர்வீரர்களுக்கும் சக்தி மிக்க தூண்டுதலைக் கொடுக்கும் ஆதாரமாகவும் ஆணவம் கொண்ட ஆக்கிரமிப்பாளர்களுக்குக் கடும் எச்சரிக்கையாக வும் அமைந்திருந்தன.

வியட்நாமுக்காக ஆயுதங்களையும் ஏனைய பொருட்களை யும் செய்வதற்காகத் தமது மனமுவந்த நல்லுணர்வையும் உழைப்பையும் அளித்தவர்களும் "வியட்நாமின் கோரிக்கை களுக்குப் பச்சைவிளக்கு" என்ற சுலோகத்தினுல் வழி நடாத்தப்பெற்ற சோவியத் தொழிலாளர்கள், கூட்டுப் பண்ணை விவசாயிகள், ஆய்வறிவாளர்கள் ஆகியோரை வியட்நாமிய மக்கள் என்றும் நினைத்திருப்பர்.

புயல் மிக்க விரிந்த சமுத்திரங்களைத் தாண்டி வியட் நாமுக்குப் பொருட்களைக் கொணர்ந்த பொழுது சோவியத் மாலுமிகள், வியட்நாமிய மக்களின் மீது சோவியத் மக்கள் கொண்டுள்ள நல்லெண்ண உணர்வுகளையும்— போர்முனை யில் உள்ள வீரர்கள் மீது பின்புறத்தில் உள்ள மக்கள் வழக்கமாகக் கொண்டிருக்கக் கூடிய உணர்வுகளையும் கொணர்ந்தனர். கடந்த பத்து வருடங்களாக சோவியத் நிபுணர்கள், சகல இடர்களையும் துன்பங்களையும் பொருட் படுத்தாது, வியட்நாமிய மக்கள் ஒரு புதிய வாழ்வைக் கட்டியெழுப்புவதற்காக அவர்களுக்கு மனப்பூர்வமாக உதவும் வகையில் வடவியட்நாமின் சகல பகுதிகளிலும் உழைத்து வந்துள்ளனர்.

சோவியத் மக்களின் மேலான அபிலாஷைகளும் வியட் நாமிய மக்களின் புரட்சிகாமிக்க லட்சியத்தின் மீது கொண்ட அபிமான, கடமை உணர்வுகளில் ஊறிய அவர் களது செய்கைகளும் நமது நாட்டு மக்களுக்கு ஓர் உத்வேகமாக அமைந்ததுடன் வியட்நாம் ஜனநாயகக் குடியரசு, பொருளாதார வளத்தையும், தற்பாதுகாப்புத் திறனையும் போராடும் வலிமையையும் கட்டியெழுப்புவதற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





விமான நிலையத்தில் ராணுவ மரியாதை வழங்கப் படுகிறது.

லெனின்கிராட் கிரோவ் தொழிற்சாலையில் நடைபெற்ற சோவியத்
—வியத்நாம் கூட்டத்தின் ஒரு பகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"அவ்ரோரா" கப்பலில் அதிதிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சம்பாஷணை ஆரம்பமாகப் போகிறது

லெனின் சமாதியில் மலர் வளையம் வைத்து அஞ்சலி



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



லெனின்கிராட் கிரோவ் தொழிற்சாலையில்
நடைபெற்ற நட்புறவுக் கூட்டத்தில் ஒரு காட்சி

பெட்ரோகிராட் மாளிகையை பார்வையிட செல்கின்றனர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கும் அதன்மக்கள் ஈட்டிய புகழ் மிகு வெற்றிக்கும் பெரும் பங்களிப்பைச் செய்துள்ளது.

உங்களது, எல்லையற்ற, எழில் கொழிக்கும் வளம்மிக்க நாட்டின் பல பாகங்களுக்குச் செல்லவும், ஏராளமான நமது சகோதரர்களையும் சகோதரியையும் சந்தித்து நன்றி தெரிவிக்க முடியாமலிருப்பதற்காகவும் நாங்கள் வருந்துகிறோம்.

இந்த சிறப்பான மேடையின் மீதிருந்து உரையாற்றுகையில் சோவியத் மக்களின் அனுதாபமிக்க உணர்வுகளுக்காகவும், மாபெரும் விலைமதிப்பற்ற சக்திமிக்க ஆதரவுக்காகவும் உதவிகளுக்காகவும் உங்களுக்கும் உங்களின் மூலமாக சகல சோவியத் கம்யூனிஸ்ட்களுக்கும் சோவியத் மக்களுக்கும் வியட்நாமிய தொழிலாளர் கட்சியினதும் வியட்நாம் ஜனநாயகக் குடியரசு அரசாங்கத்தினதும் மக்களினதும் மேலான நன்றியைத் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

அன்புசால் தோழர்களே! கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலாக உலக மக்களின் புரட்சிகர லட்சியத்துக்கு சோவியத் மக்கள் ஆற்றியுள்ள தனிப்பெரும் சிறப்புமிக்க அளப்பரிய பங்களிப்பு வரலாற்றில் என்றைக்குமே அழியாதிருக்கும்.

போல்ஷெவிக் கட்சியினது நேர்த்தியான வழிகாட்டலின் படியும் மகாலெனினவர்களின் தலைமையின் கீழும் ரஷ்யாவின் உழைக்கும் வர்க்கமும் உழைக்கும் மக்களும் அக்டோபர் புரட்சியை நிறைவு செய்து, முதலாளித்துவத்தின் தகர்வுக்கும் உலகு தழுவிய சோஷலிசத்துக்குமான சகாப்தத்தை ஆரம்பித்து வைத்தனர். அக்டோபர் புரட்சியின் வெற்றியானது, மார்க்ஸிஸ— லெனினிஸத்தை அது ஒரு விஞ்ஞான தத்துவம் என்ற நிலையிலிருந்து இந்த சகாப்தத்தின் வெல்ல முடியாத சக்தியாக மாற்றியதுடன் தொழிலாளி வர்க்கத்தினதும் உழைக்கும் மக்களினதும் கனவான சோஷலிஸத்தையும் கம்யூனிஸத்தையும் நனவாக்கியது.

ஏறக்குறைய முப்பது ஆண்டுகளாக எதிர்ப்புணர்ச்சிமிக்க முதலாளித்துவச் சக்திகளால் சூழப்பட்டிருந்த சோவியத் மக்கள் தனியாக நின்று தமது உள்நாட்டு, வெளிநாட்டு எதிரிகளை வெற்றிகண்டு. எவருடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவியும் இன்றி தன்னலமற்ற உழைப்பின் மூலம் தங்கள் நாட்டை நிர்மாணித்து, வீரத்துக்கு ஓர் தெளிவான உதாரணத்தை உலகுக்குக் காட்டினர். சோவியத்மக்களின் அற்புதமான வெற்றிகள் உலகின் முதலாவது தொழிலாளி வர்க்க ஆட்சியை உலகின் புரட்சிகரமிக்க மக்களின் ஆற்றல் மிக்க தகர்க்க முடியாத வல்லரணை மாற்றியதுமன்றி மக்கள் ஒரு சோஷலிஸப் புரட்சியை நடாத்தி சோஷலிஸத்தை நிர்மாணிப்பதில் அளவிடற்கரிய அனுபவத்தின் மூலம் மக்கள் செழுமையுறவும் செய்தது.

மாபெரும் தேசபக்த யுத்தத்தின் போது சோவியத் மக்களும் அவர்களது இராணுவமும் எல்லையற்ற வீரத்துடன் போராடி, புரட்சிகரப் போராண்மையின் எடுத்துக்காட்டாக நின்று, மகத்தான தியாகங்களை விலைகொடுத்துப் பாஸிஸத்தை வெற்றிகண்டனர். அவர்களது புகழ் பூத்த வீரச்செயல் சோவியத் தாயகத்தைத் தற்காத்தது மட்டுமின்றி போரிலிருந்து மனித குலத்தைப் பாதுகாத்தது; பல ஐரோப்பிய, ஆசிய நாடுகளில் புரட்சி வெற்றியடைவதற்கான நிலைகளை உருவாக்கியது; இந்த வீரச்செயல் காரணமாக சோஷலிஸமானது தனியொரு நாட்டின் எல்லைகளைக் கடந்து ஓர் உலக அமைப்பாக மாறியது; தேசிய விடுதலை இயக்கம் வலிமை மிக்க உத்வேகம் பெற்றது; ஏகாதிபத்தியத்துக் கெதிரான உலகப் புரட்சி பிரமாண்டமான எழுச்சிபெற அதன் காரணமாக ஏகாதிபத்தியத்தின் பொது நெருக்கடியின் தவிர்க்க முடியாத கட்டம் தோற்றுவிக்கப்பட்டது.

யுத்தமுனையில் எல்லையற்ற வீரத்தைக் காட்டிய சோவியத் மக்கள் சமாதான காலத்திலும் கூட, தங்கள் நாட்டின் புனர்நிர்மாணத்திற்காகவும் குறுகிய காலத்தில் போரில் ஏற்பட்ட மிக மோசமான விழுப்புண்களை ஆற்றுவதற்காகவும், நாடு மேலும் முன்னேறுவதை நம்பிக்கையுடன் உத்தரவாதப் படுத்துவதிலும் அவர்கள் தமது விசேஷமான தன்னலமற்ற தன்மையையும் ஆற்றலையும் வெளிப்படுத்தினார்கள். சோவியத் யூனியன் இன்று உலகின் மிகவலிமை மிக்க சோஷலிஸ நாடாகும்; பெரும் பொருளாதார, ராணுவ வளம் கொண்ட, கலாசாரத்தில் உயர்வளர்ச்சியில் நிற்கும் நாடாகும்; விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பவியலின் மிகப்பல துறைகளில் சிகரங்களை எட்டிவிட்ட நாடாகும். தொழிலாள வர்க்கப் புரட்சியை நிறைவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படுத்துவதிலும் சோஷலிஸ நிர்மாணத்திலும் அண்டவெளி ஆய்விலும் முன்னேடிகளாகத் திகழும் சோவியத் மக்கள், மனிதகுலத்தின் சாசுவதமிக்க வசந்த ருதுவாக விளங்கும் கம்யூனிஸத்திற்கு வழிகாட்டும் பாதையிலும் முன்னேடிகளாகத் திகழ்கிருர்கள். சோவியத் யூனியனின் எல்லையிலா வியாபிதம் கம்யூனிஸத்தின் பொருளாயத, தொழில் நுட்ப அடிப்படையைக் கட்டியெழுப்பும் பிரமாண்டமான நிர்மாணத் தளமாக உள்ளது.

சோஷலிஸ நாடுகளின் வளர்ந்து வரும் வல்லமையும் சோவியத் யூனியனின் வல்லமையும் புரட்சிக்குச் சாதகமாக உலக சக்திகளின் சம நிலையில் தீவிரமாற்றத்தை ஏற்படுத்தின; அவற்றின் வல்லமை இன்றைய சகாப்தத்தின் உன்னத லட்சியங்களான சமாதானம், தேசிய சுதந்திரம், ஜனநாயகம், சோஷலிஸம் ஆகியவற்றிற்கான மக்களின் போராட்டத்துக்கு ஓர் உத்தரவாதமாக விளங்குகிறது.

திறமையும், துணிவும், புரட்சிகர நம்பிக்கையும் தொழிலாளிவர்க்க சர்வதேசிய உணர்வும் கொண்டுள்ள சோவியத் மக்கள் பல அருஞ்செயல்களை மெய்யறிவுடனும் சிருஷ்டிகர உணர்ச்சிக்கனிவுடனும் புரிந்து சிறப்புப் பெறுகின்றனர். இந்த அருஞ்செயல்கள் அவர்களது சொந்த நலன்களுக்கும் உலக மக்களின் புரட்சிகர லட்சியத்துக்கான நலன்களுக்கும் உகந்தனவாகும்.

லெனினவர்களினுல் தோற்றுவிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட புகழ்மிக்க சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி இச்சாதனைகள் அனைத்தினதும் நெறியாளனுகவும் தலைவனுகவும் திகழ்கிறது. போல்ஷேவிக் கட்சியின் பிறப்பைக் குறிப்பிடும் ரஷ்ய சமூக ஜனநாயகத் தொழிலாளர் கட்சியின் 2வது காங்கிரஸின் 70வது ஆண்டு வைபவம் விரைவில் கொண்டாடப்படும். இந்த சந்தர்ப்பத்தில் சோவியத் யூனியனின் கம்யூனிஸ்டுகளுக்கும் சோவியத் மக்கள் அனைவருக்கும் வியட்நாமிய உழைக்கும் மக்கள் கட்சியின் சார்பிலும் வியட்நாமிய மக்களின் சார்பிலும் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவிப்பதற்கு என்னை அனுமதியுங்கள்.

சோவியத் மக்களின் தலைசிறந்த வெற்றிகள் குறித்து வியட்நாமிய மக்கள் பெருமிதம் கொள்கின்றனர். கம்யூனிஸ நிர்மாணத்திலும், ஒன்பதாவது ஐந்தாண்டுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டத்தின் குறியிலக்குகளைப் பூரணப் படுத்துவதிலும் மேலும் மகத்தான சாதனைகளை சோவியத் மக்கள் ஈட்ட வேண்டும் என்று வாழ்த்துகிறோம்; உலக சமாதானத்துக்கான போராட்டத்திலும் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் 24வது காங்கிரஸின் முடிவுகளுக்கமைய பல்வேறு நாடுகளிலும் உள்ள மக்களுடைய புரட்சிகர லட்சியத்திற்கு உதவியளிப்பதிலும் அவர்களுக்குப் புதிய வெற்றிகள் கிடைக்கட்டும் என்று வாழ்த்துகிறோம்.

அன்புத் தோழர்களே! எங்கள் நாட்டினை நீண்டகாலத்துக்கு பிரித்து வைக்க முடியும் என்று நம்பியிருந்த அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளின் நவ— கலோனியலிஸத்தைத் தகர்த்தெறிய வியட்நாமிய மக்கள், மிகக் கஷ்டமானதும் அதே வேளையில் வீரஞ் செறிந்ததுமான வெற்றிகரமான போராட்டத்தை மேற் கொண்டிருந்ததை நீங்கள் அறிவீர்கள்.

வியட்நாமில் போரை நிறுத்துவது குறித்தும் சமாதானத்தை நிலைநாட்டுவது குறித்தும் ஒப்பந்தம் ஒன்று 1972 ஜனவரி 27ம் திகதி பாரிஸில் கைச்சாத்தாயிற்று. இது வியட்நாமிய மக்கள் தங்கள் புரட்சிகரப் போராட்டத்தில் ஈட்டிய மகத்தான வெற்றிகளை ஒழுங்கு முறையுடனும் பெருமிதத்துடனும் அங்கீகரித்தது; அமெரிக்காவும் ஏனைய நாடுகளும் வியட்நாமின் சுதந்திரம், அரசுரிமை, ஐக்கியம் பிரதேச ஒன்றிணைப்பு ஆகியவற்றை மதிப்பதாக வாக்களித்துள்ளன; தென்வியட்நாமில் தனது ராணுவத்தைத் தொடர்ந்து வைத்திருப்பதை கைவிடுவது என்று தீர்மானித்த அமெரிக்கா, தென்வியட்நாமின் உள்நாட்டு விஷயங்களில் தலையிடுவதில்லை என்பதையும் ஒப்புக்கொண்டுள்ளது. சுயநிர்ணய உரிமைக்கான தெற்கு வியட்நாமிய மக்களுக்குள்ள தூய்மையானதும், மீறமுடியாததுமான உரிமை எல்லா நாடுகளினாலும் மதிக்கப்பட வேண்டும் என்பது அங்கீகரிக்கப்பட்டுள்ளது. வெளியாரின் தலையீடு எதுவுமின்றி, வடக்குத் தெற்கு வியட்நாம்களுக்கிடையேயான பேச்சுவார்த்தைகள், ஒப்பந்தங்களின் அடிப்படையில் சமாதான பூர்வமான வழிகளில் வியட்நாமின் ஐக்கியம் படிப்படியாக நிறைவேற்றப்பட வேண்டும். மார்ச் 9ம் திகதி அமெரிக்காவினது எஞ்சியிருந்த படைப்பிரிவும் வியட்நாமை விட்டு வெளியேற வேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. இவ்வாறு 115 ஆண்டுகளாக வியட்நாமின் மண்ணில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்நிய ராணுவங்கள் நிலை கொண்டிருந்தமைக்கு முடிவு கட்டப்பட்டது.

வியட்நாமிய மக்களின் நீண்ட புரட்சிகரப் போராட்டத்தில் ஒரு திருப்பு முனையாக விளங்கும் இது பெரும் முக்கியத்துவமிக்க ஒரு வரலாற்றுப் பிரசித்தி பெற்ற வெற்றியாகும். "எதையும் தியாகம் செய்வோம், ஆனால் அடிமையாக இருக்கமாட்டோம்" என்ற அவர்களது விடாப்பிடியான உறுதியின் விளைவே இந்த வெற்றியாகும்; மக்களின் உறுதியான ஐக்கியத்தினதும், வெற்றியடையும் வரை போராடுவது என்ற சங்கல்பத்தினதும் விளைவாகும். கடந்த பத்துவருடங்களுக்கும் மேலாக இராணுவம், அரசியல், ராஜதந்திரம் ஆகிய மும்முனைகளிலும் வியட்நாமிய மக்கள் தொடுத்துவந்த உறுதியான போராட்டத்தின் பலனாகும்.

சகோதர சோஷலிஸ நாடுகளும் சர்வதேச கம்யூனிஸ, உழைக்கும் வர்க்க இயக்கமும் சமாதானத்தையும் நீதியையும் போற்றும் நாடுகளும் இந்த வெற்றியில் பங்கு கொள்கின்றன; இந்த வெற்றி அமெரிக்க மக்கள் உட்பட முற்போக்கு மனிதகுலம் முழுவதினதும் வெற்றியாகும்; நிலைபாடான, தகர்க்க வொண்ணாத ஒருமைப்பாட்டின் வெற்றியாகும்.

வியட்நாமிய மக்களுக்குச் சாதகமான நிலைகளை உருவாக்கும் இந்த வெற்றி அவர்களுக்கு முன்னால், நிரந்தர சமாதானத்தைப் பேணவும் வலுப்படுத்துவதுமான போராட்டத்தைத் தொடர்ந்து நடாத்தவும் வடக்கு வியட்நாமில் சோஷலிஸ நிர்மாணத்துக்கும் தென் வியட்நாமின் சுதந்திரத்தையும் ஜனநாயகத்தையும் பூரணப்படுத்தவும் சமாதான பூர்வமான அடித்தளத்தில் நமது நாட்டின் ஐக்கியத்தை ஸ்திரப்படுத்துவதற்கும் பிரகாசமான வாய்ப்புக்களைத் திறந்து விட்டுள்ளது.

வியட்நாம் ஜனநாயகக் குடியரசின் அரசாங்கமும் தென் வியட்நாம் குடியரசின் இடைக்காலப் புரட்சி அரசாங்கமும் ஆரம்பநாள் தொட்டே பாரிஸ் ஒப்பந்தத்தை மதித்தும் முழுமையாகக் கடைப்பிடித்தும் வந்துள்ளன. ஆயினும் இந்த ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களை மோசமாகவும் திட்டமிட்டும் மீறும் வழியை அமெரிக்காவும் சைகோன் நிர்வாகமும் மேற்கொண்டு வருகின்றன. அமெ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிக்கா, சைகோன் நிர்வாகத்துக்கு இன்னமும் உதவி செய்து காப்பாற்றி வருகிறது; இது தென் வியட்நாமிய மக்கள் நீண்டகாலமாகக் கண்டித்து வரும், ஒரு இராணுவ பாஸிஸ்ட் குழுவாகும்; இதற்கு எதிராக அவர்கள் விடாப் பிடியான போராட்டத்தை நடாத்தி வருகிறார்கள்; இக் குழுவினரின் மீதான உலகப் பொதுமக்களின் எதிர்ப்பு தீவிரமாக நாள்தோறும் அதிகரித்து வருகிறது.

இந்த வரலாற்றுச் சூழ்நிலையில் தென்வியட்நாம் குடியரசின் இடைக்காலப் புரட்சி அரசாங்கமும், தென் வியட்நாமின் தேச விடுதலை முன்னணியும் தென் வியட்நாம் மக்களின் ஒரே, உண்மையான பிரதிநிதிகள் என்ற முறையில் முன்னரெப்போதையும்விட, சுயநிர்ணயத்துக்கான சட்ட பூர்வமான உரிமை கொண்ட திடமான போராளிகளாகவும் தென் வியட்நாமின் சுபீட்சமிக்க எதிர்காலத்தின் சின்னங்களான சுதந்திரம், சமாதானம், தேசிய இணக்கம் என்ற பதாகையை ஏந்திச் செல்பவர்களாகவும் உறுதியோடு உழைத்து வருகிறார்கள்.

சமாதானத்தின் மீது அதிக பற்றுக்கொண்டுள்ள தென் வியட்நாமின் பொதுமக்கள் அதேவேளையில் ராணுவத்தின் சகல சூழ்ச்சித் திட்டங்களையும் தோற்கடிக்கவும் திட உறுதியும் வலுவும் கொண்டிருக்கிறார்கள். இந்த இராணுவத்தினர் வியட்நாமிய மக்களின் அடிப்படை உரிமைகளுக்கும் அவர்கள் போற்றும் அபிலாஷைகளுக்கும் எதிராக இந்த சகாப்தத்தின் போக்குக்கும் முற்போக்கு மனித குலத்தின் அபிலாஷைகளுக்கும் எதிராகச் செயல் படுவார்களேயானால் தவிர்க்க முடியாத வெட்கக்கேடான தோல்வியே அடைவர். இதுதான் வரலாற்றின் மாற்றப் பட முடியாத பாதையாகும்.

பாரிஸில் நடைபெற்ற வடவியட்நாமிய— அமெரிக்கப் பேச்சுவார்த்தைகளின் போது இத்தகைய சூழ்நிலை இருந்ததன் விளைவாகவே, பாரிஸ் ஒப்பந்த நாடுகளின் 1973 ஜூன் 13ம் திகதிய கூட்டறிக்கை வெளியிடப்பட்டது. கூட்டறிக்கையின் ஷரத்துக்களை செயல்படுத்தும் வகையில் போர் நடவடிக்கைகளை நிறுத்துதல், சமாதானத்தை உத்தரவாதப்படுத்துதல், மக்களின் வாழ்க்கையை சுமுகமாக்குதல், தேசிய சமரசம், தேசிய இணக்கம் ஆகிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வின் அடிப்படையில் தென் வியட்நாமின் உள்நாட்டுப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல் ஆகிய ஆறு அம்சத் திட்டத்தை தென் வியட்நாம் குடியரசின் இடைக்காலப் புரட்சி அரசாங்கம் ஜூன் 28ம் திகதி முன்வைத்தது. இந்த நியாயமான தர்க்கபூர்வமான திட்டத்துக்கு வியட்நாம் ஜனநாயகக் குடியரசு முழு ஆதரவு அளித்தது.

லாவோஸில் சமாதானத்தை நிலைநாட்டுவது தேசிய இணக்கத்தை ஏற்படுத்துவது பற்றி கைச்சாத்தான ஒப்பந்தத்தை வியட்நாமிய மக்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். இந்த ஒப்பந்தத்தை அமெரிக்காவும் வியன்டின் நிர்வாகத்தினரும் முழுமையாக செயல்படுத்த வேண்டும் என்று லாவோஸ் மக்களின் கோரிக்கையை நாங்கள் உறுதியுடன் ஆதரிக்கிறோம்; இதன் மூலம் சமாதான பூர்வமான, சுதந்திரம்மிக்க, நடுநிலைமை, ஜனநாயக, ஐக்கிய, வளம்மிக்க நாடாக லாவோஸை மாற்றுவதற்கான நிலைகளை உருவாக்க முடியும். வியட்நாம் மக்கள், கம்போடியா மீது அமெரிக்க ஏகாதிபத்தியம் யுத்தத்தைக் கட்டாயமாக்குவது குறித்துக் கண்டனம் தெரிவிக்கிறார்கள். அவர்கள் கம்போடிய மக்களின் நியாயமான போராட்டத்தை ஆதரிப்பதுடன் அவர்களது சுதந்திரத்தையும் அரசுரிமையையும் முழுமையாக மதிக்கிறார்கள். வியட்நாம் லாவோஸ், கம்போடிய மக்கள் மேற்கொண்டுள்ள புரட்சிகரப் போராட்டத்தில் அனுகூலமான நிலைமைகள் உருவாகியுள்ளன. இந்தோ— சீன மக்களது மகாநாட்டின் கூட்டுப் பிரகடனத்தின் உணர்வில் மிக நெருக்கமாக ஒன்றுபட்டுள்ள இந்தோ— சீன மக்கள் மேலும் பல முக்கியத்துவமிக்க வெற்றிகளை ஈட்டுவார்கள் என்பதில் சந்தேகமில்லை.

வியட்நாமிய மக்கள் தமது மேலான லட்சியங்களை அடையும் பாதையில் மேலும்பல இடர்களையும் தடைகளையும் தாண்ட வேண்டியுள்ளார்கள்; தங்கள் போராட்டத்தில் அவர்கள் இன்னும் அதிகமான துணிவையும் உறுதியையும் காட்ட வேண்டும். வியட்நாமிய மக்களின் நியாயமான லட்சியம் நிச்சயமாக முழு வெற்றியடையும் என்பதை நாங்கள் திடமாக நம்புகிறோம். இதற்காக அவர்களது நீண்டதும், கடினமானதுமான போராட்டத்தில் அவர்கள் அனைத்துக் கண்டங்களிலுமுள்ள சேர்ந்த தமது சகோதரர்களினதும் நண்பர்களினதும் அனுதாபத்தையும் ஆதரவையும் பெற்றுள்ளார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோவியத் யூனியன், சீனு, மற்றும் சகோதர சோஷலிஸ நாடுகளின் மக்கள், சர்வதேச கம்யூனிஸ, உழைக்கும் வர்க்க இயக்கத்துடனும் முற்போக்கு மனித குலத்துடனும் சேர்ந்து அளித்த மகத்தான உதவிகளுக்காக, வியட்நாம் உழைக்கும் மக்கள் கட்சியும் வியட்நாம் மக்களும் உலக மக்களின் பொதுவான புரட்சிப் போராட்டத்துக்கும் சோஷலிஸ முகாமினதும் சர்வதேச கம்யூனிஸ உழைக்கும் வர்க்க இயக்கத்தினதும் விருப்ந்த ஐக்கியத்தை மாக்ஸிஸ—லெனினிஸத்தினதும் தொழிலாள வர்க்க சர்வ தேசியத்தினதும் அடிப்படையில் வலுப்படுத்துவதற்கு முக்கிய பங்களிப்பைச் செய்துள்ளார்கள்.

அன்பார்ந்த தோழர்களே! "மலைகள் இணைவதில்லை, ஆனல் மக்கள் இணைகிருர்கள்" என்ருெரு ரஷ்யப் பழமொழி உள்ளது. பல்லாயிரக் கணக்கான கிலோ மீட்டர் தூரத்தினல் வியட்நாமும் சோவியத் யூனியனும் பிரிக்கப்பட்டிருந்தபோதிலும் அவற்றின் மக்கள் சோஷலிஸம், கம்யூனிஸம் என்ற மனித குலத்தின் உன்னதமான லட்சியங்களுக்காக ஒருங்கிணைந்து உழைக்கிருர்கள். இப்பணி அவர்களை நெருங்கிய நண்பர்களாகவும் சகோதரர்களாகவும் ஆக்கியுள்ளது.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியும் சோவியத் அரசாங்கமும் சகோதர சோவியத் மக்களும் தங்கள் ஆதரவையும் விரிந்த உதவியையும் வியட்நாமிய மக்கள் இறுதி வெற்றியடையும் வரை தொடர்ந்து வழங்குவார்கள் என்பது குறித்து வியட்நாமிய மக்கள் நம்புகிருர்கள் "யுத்த நாட்களைப் போன்றே சமாதானம் மிக்க நாட்களிலும் நாம் உங்களுடன் சேர்ந்து நிற்போம். வியட்நாமுக்கு ஆதரவளிப்பது எமது சர்வதேசக் கடமையாகும். அது சகல சோஷலிஸ நாடுகளினதும் பொதுவான லட்சியமாகும்." தோழர் லியோனிட் பிரெஷ்நேவின் இந்த இனிய வார்த்தைகள் நம்பிக்கையினதும் அகத்தூண்டுதலினதும் புதியதோர் ஆதாரமாகவும் வியட்நாமிய தேசபக்தர்களின் நம்பிக்கைகளுக்கு உகந்தனவாகவும் அமைந்துள்ளன.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டியும் சோவியத் அரசாங்கமும் வியட்நாமுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அளித்த உதவிகள் அனைத்தும் கைமாறு கருதாதவை என வெளியிட்ட முடிவு, வியட்நாமிய மக்களிடையே பெரும் உணர்ச்சிக் கனிவையும் சோ.க.க.மீதும் சோவியத் அரசாங்கம், சகோதர சோவியத் மக்கள் மீதும் பெரும் நன்றியையும் ஏற்படுத்தியுள்ளது.

நீண்ட போராட்டத்தினால் உறுதி பெற்ற, வியட்நாமுக்கும் சோவியத் யூனியனுக்கும் இடையிலான மகத்தான நட்புறவும் விருத்த ஐக்கியமும் இரு நாடுகளின் மக்களுக்கும் விலைமதிப்பற்ற சொத்தாகும். வியட்நாமிய கம்யூனிஸ்டுகளும் வியட்நாமிய மக்களும் சோவியத் மக்களுக்குப் பாத்திரமானவர்களாக உள்ளனர்; சோவியத் யூனியனுடன் தொடர்பாக அவர்கள் தங்கள் சர்வதேசக் கடமையை நிறைவு செய்யவும் நமது கட்சிகளுக்கும் அரசாங்கங்களுக்கும் மக்களுக்கும் இடையில் நிலவும் நட்புறவையும் ஒட்டிணைவாற்றலையும் மேலும் வலுப்படுத்துவதற்கும் உறுதி கொண்டுள்ளார்கள்; இதன் விளைவாக இந்த நட்புறவும் ஒட்டிணைவாற்றலும் நமது நாடுகளைப் போன்றே வலுமிக்கதாகவும் வளமிக்கதாகவும் என்றும் திகழும்.

## லெனின்கிராட் கிரோவ் தொழிலகத்தில் கூட்டம்

**தோழர்கள் லீ துவான், பாம் வான் தாங் ஆகியோரின் தலைமையிலான வியட்நாம் ஜனநாயகக் குடியரசின் கட்சி அரசாங்கத் தூதுக்குழு ஜூலை 13-ம் திகதியன்று, லெனின் கிராட்டிலுள்ள கிரோவ் தொழிலகத்திற்கு விஜயம் செய்தது.**

லெனின் சிலையொன்றைக்கொண்டிருக்கும், அந்த ஆலையின் சதுக்கத்தில் சோவியத்— வியட்நாமிய நட்புறவுக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. இக்கூட்டத்தில் சோ. க. க. மத்தியகமிட்டி அரசியல் குழுவின் உப உறுப்பினரும் சோ. க. க.வின் லெனின்கிராட் பிரதேசக் கமிட்டியின் முதலாவது செயலாளருமான ஜி. வி. ரொமாநோவ், சோ. க. க. மத்திய கமிட்டி அரசியல் குழுவின் உறுப்பினரும் சோவியத் சோஷலிஸக் குடியரசுகள் ஒன்றியத்தின் பிரதமருமான ஏ. என். கொசிஜின், வியட்நாமிய உழைக்கும் மக்கள் கட்சி மத்திய கமிட்டியின் முதலாவது செயலாளர் லி துவான், வியட்நாம் ஜனநா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யகக் குடியரசின் பிரதமர் பாம் வான் தாங் ஆகி யோர் உரை நிகழ்த்தினர்கள்.

## தோழர் ஜி. வி. ரோமாநோவின் உரை

அன்பு சால் தோழர்களே!

லெனின்கிராட் பிரதேச, நகரக் கட்சிக் கமிட்டிகள், உழைக்கும் மக்கள் பிரதிநிதிகளின் நகர, பிரதேச சோவியத்துக்கள், கம்யூனிஸ்ட்டுகள், லெனின் கிராட் மக்கள், மற்றும் இங்கு குழுமியுள்ளவர்களின் சார்பில் வியட்நாம் உழைக்கும் மக்கள் கட்சியின் மத்தியக் கமிட்டி முதல் செயலாளர் தோழர் லீ துவான், வியட்நாம் உழைக்கும் மக்கள் கட்சி மத்திய கமிட்டியின் அரசியல் குழு உறுப்பினரும் வியட்நாம் ஜனநாயகக் குடியரசின் பிரதமருமான தோழர் பாம் வான் தாங் ஆகியோரின் தலைமையில் இங்கு வந்துள்ள வியட்நாம் ஜனநாயகக் குடியரசின் கட்சி, அரசாங்கத் தூதுக்குழுவுக்கு எனது உளங்கனிந்த சகோதரத்துவ வாழ்த்துக்களைத் தெரிவிப்பதற்கு என்னை அனுமதியுங்கள்.

அன்புத் தோழர் லீ துவான் அவர்களே, அன்புத் தோழர் பாம் வான் தாங்அவர்களே, அன்பு வியட்நாமிய நண்பர்களே, தோழர்களே,

மகா அக்டோபர் சோஷலிஸப் புரட்சியின் வெற்றிகரமான முன்னேற்றத்தினதும் முதலாளித்துவ வீழ்ச்சியின் யுகத்தினதும் ஆரம்பத்திற்கு எந்த நகரிலிருந்து, தற்போது காவியப் புகழ்பெற்ற அரோராக் கப்பல் பீரங்கியை முழங்கியதோ அங்கு, கம்யூனிஸ்ட் கட்சியினதும் சோவியத் யூனியனினதும் ஸ்தாபகரான மகா லெனினவர்களின் நாமத்தைப் பூண்டுள்ள நகரில் வியட்நாம் ஜனநாயகக் குடியரசின் புகழ்மிக்க கட்சி, அரசாங்கத் தூதுக்குழுவை வரவேற்பதில் நாம் பெரும் மகிழ்ச்சியும் உவகையும் அடைகின்றோம்.

வியட்நாம் மக்கள் தங்கள் நாட்டின் விடுதலைக்கும் சுதந்திரத்திற்குமாகத் தொடுத்த வீரப் போராட்டத்தை சோவியத் மக்கள் அனைவருடனும் சேர்ந்து லெனின் கிராட் வாசிகளும் சகோதரத்துவ ஒருமைப்பாட்டின் மேலான உணர்வுகளுடன் அவதானித்து வந்துள்ளார்கள்.

வியட்நாமிய மக்களின் தேசமளாவிய வீரமும், அவர்கள் தமது போர்க்குணமிக்க முன்னணிப்படையான உழைக்கும் மக்கள் கட்சியின் கீழ் கொண்ட ஒருமைப்பாடும், ஆக்கிர



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மிப்பாளனுக்கு அவர்கள் கொடுத்த உறுதியான பதிலடியும் தென்வியட்நாம் தேச பக்தர்களின் விடாமுயற்சியும் துணிவும் ஏகாதிபத்தியவாதிகளின் சூழ்ச்சித் திட்டங்களைத் தகர்த்து, ஓர் அரசியல் தீர்வுக்கு அவர்கள் இணங்கி வருவதற்கான நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தின; இவை சர்வதேசப் பதட்ட நிலையில் இருந்து வந்த மிக அபாயகரமான போர்க் களம் ஒன்றை அகற்றும் சாத்தியத்தைக் கொடுத்தன.

வியட்நாமின் போர் நடவடிக்கைகளில் ஏற்பட்ட முடிவானது, அதன் மக்களது நியாயமான லட்சியத்தின் பெரு வெற்றியாகும். சோவியத் மக்கள் அனைவரையும் போன்றே லெனின்கிராட்டின் உழைக்கும் மக்களும் இந்த வரலாற்றுப் பிரசித்திபெற்ற வெற்றிக்காக, வியட்நாம் உழைக்கும் மக்கள் கட்சியையும் வியட்நாமிய மக்களின் வீரத்தையும் இதயபூர்வமாகப் பாராட்டுகிறார்கள்.

சோவியத் யூனியனிலும் ஏனைய சோஷலிஸ நாடுகளிலும் உலக கம்யூனிஸ இயக்கத்தினலும் வியட்நாமிய மக்களுக்கு வழங்கப்பட்ட இடையருத பரந்த பன்முக சர்வதேசிய ஆதரவும் இந்த வெற்றிக்கான பிரதான காரணியாகும்.

தொழிலாளவர்க்க சர்வதேசியக் கோட்பாடுகளுக்கு விஸ்வாசமாக இருந்து வரும் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி, தனது கடைசி காங்கிரஸ்கள் இரண்டிலும் வியட்நாம் மக்களுடனும் இந்தோசீன மக்களுடனும் ஒருமைப்பாடு தெரிவிக்கும் முக்கிய தஸ்தாவேஜுக்களை நிறைவேற்றின; எமது தற்போதைய சோவியத் விஜயத்தின்போது தோழர் லி துவான் தமதுரையில் வலியுறுத்தியது போன்று இத்தஸ்தாவேஜுகள் வியட்நாமிய மக்களுக்கு நம்பிக்கையும் உத்வேகமும் ஊட்டும் புதியதோர் ஆதாரமாகவும், அவர்களது நியாயமான போராட்டத்துக்கு தூண்டுதல் அளிக்கும் காரணியாகவும் அதே நேரத்தில் ஆக்கிரமிப்பாளர்களுக்குக் கடும் எச்சரிக்கையாகவும் அமைந்திருந்தது.

சோ. க. க.வின் 24 வது காங்கிரஸ் வகுத்தளித்த சமாதான வேலைத் திட்டம், தென் கிழக்காசியாவில் இருந்து யுத்த விளை நிலத்தை அகற்றும் போராட்டத்தை கேந்திர அம்சங்களில் ஒன்றாகக் கொண்டிருந்தது; பின்னல் இது சோஷலிஸ நாடுகளின் ஒருங்கிணைந்த நடவடிக்கைகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திட்டமாக அமைந்தது, இன்றைய உலகின் முற்போக்குச் சக்திகளினால் மதிக்கப் பெற்றது.

சோவியத் யூனியன் இதர சோஷலிஸ நாடுகளுடன் சேர்ந்து வியட்நாமிய சகோதரர்களுக்கு இராணுவ, அரசியல், பொருளாதார, ராஜதந்திர முனைகளில் இடையறாத உதவிகளை வழங்கியது.

நமது கூட்டம், வளமிகுந்த புரட்சிகர, போராட்ட, உழைப்பின் பாரம்பரியங்களைக் கொண்ட, புகழ் மிக்க கிரோவ் தொழிலகத்தில் நடைபெறுகிறது. இங்கு விபோர்க், பெட்ரோகிராட் பகுதிகள், வாஸிலியேவ்ஸ்கி தீவு, நெவ்ஸ்காயா, ஸாஸ்டாவா ஆகியவற்றின் தூதர்களும் பல தொழிலகங்களினதும் ஆய்வுக் கழகங்களின் பிரதிநிதிகளும் நமது துடிப்பான இளம் மக்களும் கலந்து கொள்கிறார்கள்.

சோவியத் யூனியனின் சகல உழைப்பாள மக்களைப் போன்றே லெனின்கிராட் வாழ் மக்களும் வியட்நாமுக்கு வழங்கும் உதவியை தமது ஜீவாதார லட்சியமாகவும் தமது உயர்ந்த சர்வதேசக் கடமையாகவும் என்றும் கருதுகிறார்கள். சகோதர மக்களுக்கு உதவி வழங்குவதில் நமது நகரின் ஏராளமான தொழில் துறை, விஞ்ஞான நிறுவனங்களைச் சேர்ந்தவர்களும் பங்கெடுத்துள்ளார்கள்.

லெனின் கிராட்டில் உற்பத்தி செய்யப்பட்ட கண் சம்பந்தப்பட்ட, மின்— வெற்றிட கருவிகளும், மின்சக்தி யந்திரங்களும், வார்ப்புச் சாதனங்களும் மருத்துவ உபகரணங்களும் மற்றும் பல பொருட்களும் வியட்நாம் ஜனநாயகக் குடியரசின் தேசியப் பொருளாதாரத்தில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

பெரும் பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த ஏராளமான திட்டங்கள், நமது தொழில் ஸ்தாபனங்களினால் வடிவமைக்கப்பட்டு வியட்நாமில் நிர்மாணிக்கப்பட்டுள்ளன.

தற்போது, லெனின்கிராடின் நிபுணர்கள் தமது வியட்நாமிய நண்பர்களுடன் சேர்ந்து, நேவா நதிக்கரையில் இருந்து வெகு தூரத்தில் யுத்தத்தின் சீரழிவுகளை புனருத்தாரணப் படுத்தும் ஏராளமான நடைமுறை பிரச்சினைகளுக்குத் தீர்வுகண்டு வருகிறார்கள்.

இவையனைத்தும் சகோதர வியட்நாம் மக்களுக்கு சோவியத் யூனியன் வழங்கும் உதவியின் ஒரு கூறு என்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதை நாம் நன்கறிவோம். ஆயினும், வியட்நாமிய சகோத ரர்கள் பகைவனை வெற்றி கொள்வதற்கும் சமாதானபூர்வ மான வழியில் அவர்கள் தமது வாழ்க்கையை மேற்கொள்ள வும் சிக்கலான நிலைமைகளிலும் சோவியத் மக்கள் இடை விடாது அளித்து வந்த உதவியை இவையும் காட்டுகின்றன.

லெனினது கட்சியின் தலைமையின்கீழ் மகத்தான தேச பக்த யுத்தத்தில் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற சோவியத் வாசிகளும், 900 நாள் முற்றுகையைச் சமாளிக்கும் வலுப் பெற்ற லெனின்கிராட் வாசிகளுமான நாங்கள், யுத்த பிற் கால நடவடிக்கைகள் குறித்து— தேசிய பொருளாதாரத் தைப் புனருத்தாரணம் செய்வது, சிதைவிலிருந்து தொழில கங்கள், ஆலைகள், மின்சக்தி நிலையங்கள் முதலியவற்றைக் கட்டி யெழுப்புவது, நாட்டின் பொருளாதாரத்திற்கும் மக்க ளுக்கும் தேவையான உற்பத்தியை நிர்வகிப்பது ஆகிய வற்றின் அவசியம் குறித்து நன்கறிந்துள்ளோம்.

சோஷலிஸ நாடுகளின் மக்களது சர்வதேசிய ஆதரவைப் பெற்றுள்ள வியட்நாம் ஜனநாயகக் குடியரசும் சோவியத் யூனியனின் உண்மையான நண்பரும் தலைசிறந்த மார்க்ஸிஸ— லெனினிஸவாதியுமான தோழர் ஹோ சி மின்னின் ஆணை களைச் சிறப்பாகப் பின்பற்றி வரும் உழைக்கும் மக்கள் கட் சியின் தலைமையிலான வியட்நாமின் உழைப்பாளி மக்களும் தங்கள் பணிகளை வெற்றிகரமாகச் செய்து முடிப்பார்கள் என்று நாம் நம்புகிறோம்.

தோழர்களே! சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியும் சோவியத் மக்கள் அனைவரும், சோ. க. க. வின் 24 வது காங் கிரஸினதும் அதன் பின்னால் நடைபெற்ற கட்சி மத்திய கமிட்டியின் முழு நிறைவான கூட்டங்களினதும் முடிவுக ளின்— தெட்டத்தெளிவான செயல் திட்டத்தின் மெய் யான வழிகாட்டுதலில் ஓர் உழைப்பு அணிவகுப்பை மேற் கொண்டுள்ளார்கள்.

தேசம் முழுவதுடன் இணைந்து லெனின்கிராடின் உழைக் கும் மக்களும் லெனின்கிராட் பிரதேசமும் திட்டமிட்ட தற்கு முன்னராகவே 9 வது ஐந்தாண்டுத் திட்டத்தின் முற் பாதியின் பணிகளைச் செய்து முடித்துள்ளார்கள்.

ஐந்தாண்டுத் திட்டத்தின் மூன்றாவது ஆண்டை, அது பொருளாதார வல்லமையைக் கட்டியெழுப்புவதில் மட்டு மல்லாது, சோவியத் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதிலும் ஐந்தாண்டுத் திட்டத்தைப் பெருமளவில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாங்கியிருப்பதனல் அதை தீர்க்கமான ஆண்டு என்று சோவியத் மக்கள் அழைக்கிறுர்கள்.

வாழ்க்கையின் நல்லவைகள் எவையும் மேலிருந்து நமக்குக் கிடைப்பதுமில்லை, அவற்றை தட்டில்வைத்து எவரும் எம்மிடம் நீட்டுவதுமில்லை. நாம் உற்பத்தி செய்வதை மட்டும்தான் நாம் கொண்டிருக்கிறேம் என்பதை நாம் உணர்ந்துள்ளோம். எனவே ஐந்தாண்டுத் திட்டத்தின் தீர்க்கமிக்க ஆண்டின் பணிகளை, குறிப்பிட்ட காலத்திற்கு முன்னரே நிறைவு செய்வதற்கான உறுதிமிக்க சோஷலிஸ உழைப்புப் போட்டி நாடெங்கும் நடைபெறுகிறது.

என்றும்போல், வெகுஜனங்களின் முனைப்பினுல் குறிப்பிடத்தக்க நல்விளைவுகள் எற்படுகின்றன. உதாரணத்துக்குப் பலவற்றில் ஒன்றை இங்கு கூறலாம். லெனின் கிராட் பொருளாதாரத்தின் பல்வேறு பிரிவுகளையும் சேர்ந்த பத்து லட்சத்திற்கும் மேற்பட்ட உழைக்கும் மக்கள், உழைப்பு உற்பத்தியை உயர்த்தும் விரிவான திட்டங்களின் அடிப்படையில் ஐந்துநாள் வேலையை நான்கு நாட்களில் முடிக்குமாறு கிரோவ் தொழிலகத்தின் தொழிலாளர்கள் விடுத்த அழைப்பை எற்றுள்ளார்கள்.

தமது தன்னலமற்ற உழைப்பு, தமது ஆற்றல், அறிவு அனுபவங்கள் ஆகியவற்றைக் கம்யூனிஸ நிர்மாணத்துக்காக அர்ப்பணித்துள்ள சோவியத் யூனியனின் உழைக்கும் மக்கள், தமது நாட்டின் பொருளாதார வலுவின் உறுதிப்பாடும் சர்வதேச அரங்கில் அதன் கீர்த்தியின் உயர்ச்சியும் ஒரு தனிப்போக்கையே கொண்டுள்ளன என்பதை நன்கு உணர்கிறுர்கள்.

அனைத்து சோவியத் மக்களைப்போன்றே லெனின்கிராட் மக்களும் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் 24 வது காங்கிரஸினுல் வகுத்தளிக்கப்பட்ட சமாதான வேலைத் திட்டத்தையும், கட்சி மத்திய கமிட்டியின் —ஏப்ரல் மாதத்திய முழு நிறைவான கூட்டத்தின் முடிவுகளையும் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டியும் அதன் அரசியல் பீடமும் மேற்கொண்டுள்ள செயல்முறையிலான நடவடிக்கைகளையும் அங்கீகரித்து ஆதரவு தருகிறுர்கள்.

உலக சோஷலிஸத்தின் நிலைகளை உறுதிப்படுத்துவதிலும் சர்வதேச பந்தோபஸ்தை வலுப்படுத்துவதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லும் நமது உலகின் நிலைமையை அபிவிருத்தி செய்வதி லும் எடுக்கப்பட்ட மிகவும் முக்கியமான நடவடிக்கை களில் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் பொதுச் செயலாளர் லியோனிட் பிரஷ்னேவ் பல நாடுகளின் தலைவர்களுடன் மேற்கொண்ட உயர்மட்ட சந்திப்புக்களும் பேச்சுவார்த்தைகளும் அடங்கும்.

உலகின் தலைவிதி முழுவதிலும் சோவியத்— அமெரிக் கப் பேச்சுவார்த்தைகள் விசேஷ முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளன. அனைத்துக்கும் மேலாக அணுவாயுதப் போரைத் தவிர்ப்பதற்காக ஒப்பந்தம் செய்யப்பட்டது. தலையாய முதலாளித்துவ வல்லரசுடன் முக்கிய ஒப்பந்தங் களை செய்து கொண்டது, அணு ஆயுதப் போர் என்றென் றைக்குமாக அகற்றப்பட்டுவிடும் என்ற நம்பிக்கையையும் உறுதியையும் உலகம் முழுவதற்கும் அளிக்கக் கூடியதாக, சர்வதேச பதட்ட நிலையைத் தளர்த்தும் ஒரு பரந்த புதிய முன்னேற்றமாகும்.

கம்யூனிஸ்ட் கட்சியும் அதன் மத்திய கமிட்டியும் அயல்விவகாரக் கொள்கையை அமுல்படுத்துவதில் வர்க்க ரீதியான உண்மையான மார்க்ஸிஸ— லெனினிஸ அணுகு முறை மேற்கொண்டிருப்பதற்காகவும் சமாதானம், சோஷலிஸ சமாஜத்தின் உறுதிப்பாடு, சர்வதேச கம்யூனிஸ— தொழி லாளி வர்க்க இயக்கத்தின் சகல சக்திகளின் ஒருமைப் பாடு ஆகியவற்றிற்காக இடையறாத அக்கறை கொண்டி ருப்பதற்காகவும் அவற்றிற்கு சோவியத் மக்கள் தங்கள் ஆழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறார்கள்.

லியோனிட் பிரேஷ்நேவுக்கு சர்வதேச லெனின் சமா தானப் பரிசை வழங்குவதற்காக மாஸ்கோவில் அண்மை யில் நடைபெற்ற கூட்டம், நமது கட்சியும் அதன் பொதுச் செயலாளரும் உலக சமாதானத்தை வலுப்படுத்துவதற்காக மேற்கொண்ட பணிக்கு சர்வதேச அங்கீகாரத்தின் வெளிப்பாடாக அமைந்திருந்தது. மேடையில் தோன்றிய அனைவரும்— தொழிலாளி அல்லது ஆசிரியர், பொதுஜன அல்லது அரசியல் தலைவர், பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மக்கள் அனைவரும் மாறுபாடற்ற, நோக்கபூர்வமான, முடி வுமைதிக்கான போராட்டத்தில் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டியும் அதன் பொதுச் செயலாள ரும் வகித்த தலைசிறந்த பாத்திரத்தைப் பாராட்டினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லியோனிட் இலியச் பிரஷ்நேவ் தலைசிறந்த விருதைப் பெற்றமைக்காக லெனின்கிராட் வாழ் மக்கள் அவரை இதய பூர்வமாகப் பாராட்டினார்கள்; அவரது நல்லாரோக்கியத்துக்காகவும் பூமியில் ஸ்திரமான சமாதானத்துக்காக அவர் மேற்கொண்டுள்ள உன்னதமான போராட்டத்தில் அவர் புதிய வெற்றிகளை ஈட்டுவதற்காகவும் வாழ்த்துகிறார்கள்.

தோழர்களே! வீரமிகு நகராம் லெனின்கிராடில் வியட்நாம் ஜனநாயகக் குடியரசின் கட்சி, அரசாங்கத் தூதுக் குழுவுக்கு அன்பான நல்லெண்ண வரவேற்பளிக்கும் நாம், எமது வர்க்க சகோதரர்களுக்கு மார்க்ஸிஸ— லெனினிஸத்தின் சாகவரமிக்க கருத்துக்களின் வெற்றிக்கான போராட்டத்தின் தோழர்களுக்கு நாங்கள் வணக்கம் தெரிவிக்கிறோம்.

சோவியத் மக்கள் அனைவருடனும் சேர்ந்து லெனின் கிராடின் கம்யூனிஸ்டுகளும் சகல உழைக்கும் மக்களும், சோவியத் யூனியனினதும் வியட்நாமினதும் சகோதரக் கட்சிகளிடையேயும் நாடுகளுக்கிடையேயும் மக்களுக்கிடையேயும் நிலவும் உறவுகளில் புதியதொரு நடவடிக்கையாகவும், உலக சோஷலிஸ அமைப்பிற்குப் பங்களிப்பாகவும் அமைந்துள்ள விஜயத்தை மேற்கொண்டுள்ள வியட்நாம் ஜனநாயகக் குடியரசுக் கட்சி அரசாங்க தூதுகோஷ்டிக்கு வாழ்த்துக் கூறுகிறோம்.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியும் சோவியத் அரசாங்கமும், ஆக்கிரமிப்பாளரை எதிர்த்து வியட்நாமிய மக்கள் தொடுத்த போராட்டத்தின்போது, பாதுகாப்பை வலுப்படுத்தவும் பொருளாதாரத்தை வளர்க்கவும் அவர்களுக்களித்த உதவியை நன்கொடையாகக்கருதுவதென்று எடுத்த முடிவையிட்டு லெனின்கிராட் மக்கள் பாராட்டுகிறார்கள். சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியினதும் முழு சோவியத்மக்களினதும் தொழிலாளிவர்க்க சர்வதேசியத்திற்கு இப்பெருந்தன்மைமிக்க செயல் புதியதொரு வெளிப்பாடாக அமைந்துள்ளது என்று நாங்கள் கருதுகிறோம். அத்தோடு சகோதர நாடு தனது சமாதான பூர்வமான நிர்மாணத்தில் சகல வெற்றியையும் அடையவேண்டும் என்று வாழ்த்துகிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோழர்கள் லி துவான், பாம் வான் தாங் அவர்களே, லெனின் கிராடின் கம்யூனிஸ்டுகள் சகல உழைக்கும் மக்கள் ஆகியோரின் சார்பில் உங்களுக்கும் உங்கள் கட்சி, அரசாங்கத் தூதுக்குழு உறுப்பினர்களுக்கும், உங்கள் மூலமாக வீரமிகு வியட்நாம் மக்கள் அனைவருக்கும் அவர்களது மாபெரும் வெற்றிக்காக எமது அன்பான இதயபூர்வமான வாழ்த்துக்களையும் பாராட்டுதல்களையும் தெரிவிப்பதற்கும் சமாதான பூர்வமான, ஐக்கிய,சுதந்திர வியட்நாமுக்கான போராட்டத்தில் நமது வியட்நாமிய சகோதரர்கள் புதிய வெற்றியை ஈட்டுவதற்காக ஆசிகளைத் தெரிவிப்பதற்கும் என்னை அனுமதியுங்கள்.

சாசுவதமானதும் தகர்க்கவொண்ணாததுமான சோவியத்— வியட்நாமிய நட்புறவு பொதுப் போராட்டத்தில் புடமிடப்பட்டதும் பரீட்சிக்கப்பட்டதுமான நட்புறவு நீடூழி வாழ்க!

சோஷலிஸ சமாஜத்தின் நாடுகளது ஐக்கியமும் சகோதர ஒருமைப்பாடும் நீடூழி வாழ்க!

வெல்ல முடியாத மார்க்ஸிஸ— லெனினிஸ பதாகை நீடூழி வாழ்க!

## தோழர் ஏ. என். கோஸிஜின் உரை

மதிப்பிற்குரிய தோழர்கள்

லீ துவான் அவர்களே!

பாம் வான் தாங் அவர்களே!

அன்பிற்குரிய வியட்நாமிய நண்பர்களே!

அன்புமிக்க லெனின்கிராட் தோழர்களே!

ஒரு சகோதரனைப் போன்று நமது அன்பிற்குரிய அதிதிகளை மீண்டும் ஒருமுறை வாழ்த்தவும் நமது கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டியினதும் சோவியத் அரசாங்கத்தினதும் தனிப்பட்ட முறையில் சோ. க. க. மத்திய கமிட்டியின் பொதுச் செயலாளர் லியோனிட் பிரேஷ்நேவினதும், அரசியல் பீடத்தின் சகல உறுப்பினர்களதும் அன்பான வாழ்த்துக்களை லெனின்கிராட் மக்களுக்குத் தெரிவிக்கவும் என்னை அனுமதியுங்கள். சோவியத் மக்கள் அனைவரையும் போன்றே லெனின்கிராட் வாசிகளும் நமது வியட்நாமிய சகோதரர்கள் போராடும் லட்சியத்தின்பால்

எத்தனை நேசம் கொண்டுள்ளார்கள் என்பதை வியட்நாமிய சகோதரர்களுடன் லெனின்கிராட்டில் வந்திறங்கிய உடனேயே கண்டு கொண்டோம். வியட்நாம் உழைக்கும் மக்கள் கட்சி மத்திய கமிட்டியின் முதலாவது செயலாளர் தோழர் லீ துவான், வியட்நாம் உழைக்கும் மக்கள் கட்சி மத்திய கமிட்டி அரசியல் குழுவின் உறுப்பினரும் வியட்நாம் ஜனநாயகக் குடியரசு அரசாங்கத்தின் பிரதமருமான தோழர் பாம் வான் தாங் ஆகியோரின் தலைமையில் வந்திருக்கும் வியட்நாமிய உழைக்கும் மக்கள் கட்சி, வியட்நாம் ஜனநாயகக் குடியரசு அரசாங்கம் ஆகியவற்றின் தூதுக்குழுவுக்கு எத்தகைய அன்பான, நினைவை விட்டகலாத வரவேற்பை அளிக்கிறார்கள் என்பதை நாம் கண்டோம். விமான நிலையத்திலும், நகரின் தெருக்களிலும் சதுக்கங்களிலும், வியட்நாம் மக்கள் மீதான இதயங்கனிந்த நேசபூர்வமான நட்புறவையும், மதிப்பையும், ஒருமைப்பாட்டையும் வெளிப்படுத்தி பல தோழர்கள் பேசிய இக்கூட்டத்திலும் வியட்நாம் ஜனநாயகக் குடியரசின் தூதுக்குழுவுக்கு அளித்த தனிச்சிறப்புமிக்க வரவேற்பைக் கண்டோம்.

வீரமிக்க நகரான, புகழ்மிக்க புரட்சிகர நகரான லெனின்கிராடில் ஆசியாவின் புரட்சிகர விடுதலை இயக்கத்தின் முன்னணியில் நடைபோடும் வீரமிகு வியட்நாம் மக்களின் பிரதிநிதிகள் வரவேற்கப்படுவதும் வாழ்த்தப்படுவதும் தனிச்சிறப்பும் முக்கியத்துவமும் வாய்ந்ததாகும்.

வியட்நாமிய மக்கள் ஏகாதிபத்திய— கலோனியலிஸவாதிகளுக்கெதிரான, கடுமையான போராட்டத்தில் தமது உறுதியைக் காட்டியுள்ளார்கள். அவர்கள் எல்லா சோதனைகளின்போதும் வல்லமையுடன் நின்று ஆக்கிரமிப்பு யுத்தத்தின் உக்கிரமான கொடுமைகள் அனைத்தையும், தமக்கு எதிராகத் திருப்பிவிடப்பட்ட சகல விதமான ஆயுதங்களையும் கொண்ட, லட்சக்கணக்கான— வலிமைமிக்க தலையீட்டாளர்களின் இராணுவத்தையும் துச்சமெனக் கருதி வெற்றியீட்டினார்கள். மிக இடுக்கண் மிகுந்த நிலையிலும் வியட்நாமிய மக்கள் பின்வாங்காது, தமது நிலைகளிலிருந்து விலகாது விடுதலைக்கும் சுதந்திரத்துக்கும் சோஷலிஸத்துக்குமான போராட்டத்தில் வெற்றியடைந்தனர்; ஏனெனில் அவர்கள் தமது முன்னணிப் படையான வியட்நாம் உழைக்கும் மக்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்சியின்கீழ் நெருக்கமாகத் திரண்டு நின்றதும், தமது தலைவர் ஹோ சி மின்னின் ஆணைகளுக்கும் மார்க்ஸ், எங்கல்ஸ், லெனின் ஆகியோரின் வெற்றிகரமிக்க பதாகைக்கும் விஸ்வாசமாக இருப்பதுவும், தமது நாட்டின்மீது ஆர்வமிக்க, எல்லையற்ற பாசம் வைத்திருப்பதுவுமே. இவையனைத்தும் சோவியத் யூனியனும் ஏனைய சோஷலிஸ நாடுகளும் அளித்த பெரும் உதவிகளுடன் ஏகாதிபத்திய ஆக்கிரமிப்புக்கு எதிரான போராட்டத்தில் வியட்நாமிய மக்களின் வெற்றியை உத்தரவாதப்படுத்தின.

சோவியத் யூனியனும், சோஷலிஸ சமாஜத்தைச் சேர்ந்த இதர நாடுகளும் புரட்சிகர வியட்நாமுக்கு ஆதரவளிக்கவும், உழைக்கும் மக்களின் நலன்களுக்காகவும் சமாதானம், முன்னேற்றம் ஆகியவற்றின் சூழலில் வியட்நாமின் சுபீட்சத்திற்காகவும் அதன் தேசபக்த சக்திகள் தொடுத்துள்ள போராட்டத்துக்கு தம்மாலானதனைத்தையும் செய்துள்ளன, தொடர்ந்தும் செய்யவுள்ளன. சோவியத் மக்கள் வியட்நாமிய சகோதரர்களுக்கு அளித்த ஒவ்வொரு கிலோகிராம் தானியமும் எரிபொருளும் ஒவ்வொரு துண்டும் ரொக்கட்டும், ஒவ்வொரு மோட்டார் வாகனமும் யந்திர சாதனங்களும் ஆக்கிரமிப்பாளனுக்கு வலுவான பதிலடி கொடுக்க மட்டுமல்ல, யுத்தத்தின் விழுப்புண்களை ஆற்றுவதற்கும் பங்குப்பணி செய்தன. வியட்நாமுக்கு எமது அரசியல், தார்மிக ஆதரவைப் போன்றே இந்த உதவிகள் அனைத்தும், சோஷலிஸ நாடுகளின் ஐக்கியத்தின் மகத்தான சக்தியையும் மார்க்ஸிஸ— லெனினிஸத்தின் பொதுவான கருத்துக்களை அடிப்படையாகக் கொண்ட, அவற்றின் வர்க்க ஒற்றுமையின் வெல்லமுடியாத் தன்மையையும் வெளிப்படுத்துகின்றன. கம்யூனிஸ லட்சியங்களின் வெற்றிக்கான நமது பொது முன்னேற்றத்தை, நமது பொதுப் போராட்டத்தை தடுத்து நிறுத்தும் ஆற்றல் கொண்ட எந்தச் சக்தியும் உலகில் இல்லை. இதற்கு வியட்நாமிய மக்களின் வெற்றி புதியதொரு சான்றாகும்.

அன்புள்ள தோழர்களே! நேற்று மாஸ்கோவில் சோவியத்— வியட்நாமிய பேச்சுவார்த்தைகள் முடிவடைந்தன. அவை சர்வதேச விவகாரங்களையும் வியட்நாம் ஜனநாயகக் குடியரசின் சோஷலிஸ நிர்மாணத்தின் நலன்களுக்கும் வியட்நாமில் ஸ்திரமான சமாதானத்தை உறுதிப்படுத்தும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலன்களுக்கும் வியட்நாம் பற்றிய பாரிஸ் ஒப்பந்தத்தைப் பூரணமாக அமுல்படுத்துவதன் நலன்களுக்கும் இசைவான வகையில் சோவியத்— வியட்நாமிய ஒத்துழைப்புக்களை மேலும் வளர்ப்பது பற்றிய பிரச்சினைகளையும் உள்ளடக்கியிருந்தன. நாம் வியட்நாமுடனை எமது பொருளாதார ஒத்துழைப்புக்கள் விசேஷமாக அதன் தேசிய பொருளாதாரத்தின் புனருத்தாரணத்துக்கான பணி குறித்த முக்கிய பிரச்சினைகள் குறித்தும் ஆராய்ந்தோம். யுத்தத்துக்குப் பின்னர், வியட்நாம் ஜனநாயகக் குடியரசு மக்களின் முன்னல் யுத்தத்தினல் பெருநாசமடைந்த தேசிய பொருளாதாரத்தைப் புனருத்தாரணம் செய்யும் பணியும் யுத்தக் கொடுமைமிக்க நீண்ட பல ஆண்டுகளாக கஷ்டமுற்ற உழைக்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதும் முக்கியத்துவம் மிக்கதாக எழுந்துநின்றன. இதைக் கவனத்தில் எடுத்த நாம், வியட்நாம் ஜனநாயகக் குடியரசுடனை பொருளாதார ஒத்துழைப்பு பிரச்சினைகள் குறித்து முக்கிய முடிவுகளை எடுத்து,சோவியத்—வியட்நாமிய ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திட்டோம். இந்த முடிவுகளை எடுக்கையில் நாம் சோஷலிஸ சர்வதேசியக் கோட்பாடுகளிஞலும், யுத்தத்தினல் வியட்நாமிய மக்கள் அடைந்த ஆழமான காயங்களை முடிந்த அளவில் விரைவாக ஆற்றவேண்டும் என்ற ஆர்வத்தினலும் வழிகாட்டப்பட்டோம்.

வியட்நாமிய தோழர்கள், வியட்நாம் குறித்த பாரிஸ் ஒப்பந்தத்தை முழுமையாக செயல்படுத்துவது குறித்துத் தம்மாலானதனைத்தையும் செய்வதாக எமக்குத் தெரிவித்துள்ளனர். இந்த ஒப்பந்தமானது வியட்நாமின் அரசியல் தீர்வுக்கான பிரச்சினையைத் தீர்க்கும் ஓர் அடித்தளமாக அவர்கள் கருதுகிருர்கள். சோவியத் யூனியன் தனது பங்கில் இதற்காக ஒவ்வொரு வழியிலும் உழைக்கும்.

வியட்நாமிய தோழர்களுடனை நமது பேச்சுவார்த்தைகள் பூரணமான பரஸ்பர நல்விளப்பம், தோழமை, சகோதர நட்புறவு ஆகியவற்றின் உணர்விலும், நமது பேச்சுவார்த்தைகளில் மட்டுமன்றி சோவியத் யூனியனில் வியட்நாமிய தோழர்கள் மேற்கொண்ட சகல சந்திப்புக்களின் சிறப்புகளின் சூழலிலும் நிகழ்ந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற்போக்குச் சக்திகளின் சூழ்ச்சிகள் குறித்து எச்சரிக்கையாக இருக்கும் அதேசமயத்தில் வியட்நாம் ஜனநாயகக் குடியரசு, சமாதான பூர்வமான நிர்மாணத்தில் ஈடுபட்டு வருகிறது. வியட்நாமிய மக்கள் தமது நாட்டின் வளம்மிகு தேசிய பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பு வதில் மகத்தான வெற்றிகளை ஈட்டுவார்கள் என்பதில் நாம் நம்பிக்கை கொண்டுள்ளோம். இதை நோக்கி வியட்நாமிய உழைக்கும் மக்கள் கட்சியின் அரசியல், ஸ்தாபன நடவடிக்கைகள் திருப்பிவிடப்பட்டுள்ளது என்பதையும், கட்சியினதும் தேசத்தினதும் தலைவர்களான, லீ துவான், பாம் வான் தாங், வியட்நாமிய உழைக்கும் மக்கள் கட்சியின் அரசியல் குழுவின் இதர உறுப்பினர்கள் ஆகியோரின் கவனமும் இதன்மீதே உள்ளது என்பதையும் வியட்நாமிய நண்பர்களிடமிருந்து தெரிந்து கொண்டுள்ளோம்.

இந்த வெற்றியின் விளைவாக வியட்நாம் ஜனநாயகக் குடியாசின் உழைக்கும் மக்கள் தங்கள் ஆற்றல், உழைப்பு, திறமை ஆகியவற்றை சோஷலிஸ நிர்மாணத்திற்கும் நாட்டின் சமாதான பூர்வமான மறு ஐக்கியத்திற்கான முன் தேவைகளை உருவாக்குவதற்கும் அளிக்கமுடியும். இம்மாறுதல்கள் முழுஉலகின் சர்வதேச உறவுகளில் பெரும் சாதகமான மாற்றங்களைக் குறிக்க சூழ்நிலையில் வியட்நாமிய மக்களின் வாழ்க்கையில் ஏற்பட்டுள்ளன. இவை வியட்நாம் ஜனநாயகக் குடியரசின் சோஷலிஸ நிர்மாணத்திற்கான முன்னர் எப்போதுமே இருந்திராத மிகவும் சாதகமான சூழ்நிலையை உருவாக்குகின்றன.

கடந்த சில ஆண்டுகளில் சோவியத் யூனியனும் ஏனைய சோஷலிஸ நாடுகளும் நிரந்தர சமாதானத்துக்கும் சர்வதேச பந்தோபஸ்துக்குமான போராட்டத்தில் வரலாற்று முக்கியத்துவமிக்க வெற்றிகளை ஈட்டியுள்ளன. இந்த வெற்றிகளுக்கு, வியட்நாமில் யுத்தம் முடிவுக்கு வந்ததும், ஐரோப்பிய நிலவரம் சகஜமடைந்ததும், சோவியத் யூனியனையும் இதர சோஷலிஸ நாடுகளையும் பொறுத்தவரையில் மேற்கு ஜெர்மனியுடனான உறவுகளில் அபிவிருத்தி ஏற்பட்டதும், சோவியத்— அமெரிக்க உறவுகளில் குறிப்பிடத்தக்க அபிவிருத்தி காணப்பட்டதும் ஆயுதக் குறைப்பில் முக்கியமாக அணுவாயுத போரைத் தவிர்ப்பதில் (இது குறித்து சோவியத் யூனியனும் அமெரிக்காவும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளன) ஏற்பட்ட தெளிவான விளைவுகளும் சான்றுகவுள்ளன.

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் 24வது காங்கிரஸின் முடிவுகளைப் பின்பற்றிவரும், சர்வதேச நிலைமையில் மாறுதல்களை ஏற்படுத்தியுள்ள பிரதான சோவியத் அயல்துறைக் கொள்கை நடவடிக்கைகள் அனைத்தும் மனிதகுலம் முழுமையினதும் சமாதான பூர்வமான எதிர்காலப்பாதைக்கு ஒளிகாட்டுகின்றன. நமது கட்சியினதும், அரசாங்கத்தினதும் அயல்துறைக் கொள்கையை உருவாக்குவதிலும் செயல்படுத்துவதிலும் தலைசிறந்த பங்கை சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டிப் பொதுச் செயலாளர் லியோனிட் பிரெஷ்நேவ் ஆற்றியுள்ளார். சோவியத் மக்களும் உலகின் சகல சமாதானம் விரும்பும் சக்திகளும் சோ. க. க. மத்திய கமிட்டிப் பொதுச் செயலாளர் அமெரிக்கா, ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு, பிரான்ஸ் ஆகியநாடுகளுக்கு மேற் கொண்ட விஜயங்களையும், அந்நாடுகளின் தலைவர்களுடன் அவர் மேற்கொண்ட பேச்சுக்களின் பெறுபேறுகளையும் அங்கீகரிக்கிறார்கள். தலையாய முக்கியத்துவமிக்க இந்த விஜயங்கள், வேறுபட்ட சமுதாய அமைப்பைக் கொண்ட நாடுகளிடையேயான உறவுகளை மறுசீரமைப்புச் செய்யும் செயற்பாங்குகளுக்கு சக்திமிக்க தூண்டுதல்களை அளிக்கின்றன. சமாதானத்தைப் பாதுகாப்பதற்கும் வலுப்படுத்துவதற்குமான போராட்டத்தில் லியோனிட் பிரெஷ்நேவ் ஆற்றியுள்ள தலைசிறந்த பணிக்காக அவருக்கு சர்வதேச லெனின் சமாதானப் பரிசு கிடைத்தது. இந்த உயர்விருது நேற்று முன்தினம் கிரம்ளினில் தோழர் லியோனிட் பிரெஷ்நேவுக்கு வழங்கப்பட்டதை நீங்கள் அறிவீர்கள்.

இரண்டு உலக அமைப்புக்களுக்கிடையில் நிலவும் உறவுகளில் அநுகூலமான மாறுதல்களை ஏற்படுத்தும் செல்வாக்குமிக்கதொரு சக்தியாக சமாதான சகவாழ்வுக் கருத்து மாறி வருகிறது. சமாதான சகவாழ்வுக் கோட்பாடுகளை செயல்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ள நமது கட்சியினதும் அரசாங்கத்தினதும் அயல்துறைக் கொள்கை சகல மக்களினதும் உள்ளார்த்துடன் ஆதரவைப் பெற்று, வல்லமை மிக்கதோர் சமாதானப் போராட்டமாக மாறியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகில், பதட்ட நிலை நீடிப்பதையும், கெடுபிடிப்போர் மீண்டும் ஏற்படுவதையும் விரும்பும் சக்திகள் இன்னும் உலகில் இருக்கின்றன என்பது உண்மையே. இச்சக்திகளுக்கு மக்கள் ஆதரவளிக்க மாட்டார்கள். அவற்றின் முயற்சிகள் பயனற்றவை; அவை தோல்வியையே காணும். சமாதான பூர்வமான வாழ்க்கையின் இன்பங்களை உணர்ந்துள்ள மக்கள் சமாதானத்தை உயர்த்துவதற்கும், வலுப்படுத்துவதற்கும் உறுதியாக உழைக்கிறார்கள் என்பதில் ஐயமில்லை.

நமது உறவுகள் சமாதான சகவாழ்வினை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும் என முதலாளித்துவ நாடுகளுக்குக் கூறும் அதேவேளையில், நமது வர்க்க கோட்பாடுகளையோ அல்லது மக்களின் தேசிய, சமுதாய எழுச்சிக்காகப் போராடும் புரட்சிகரச் சக்திகளின் நலன்களையோ என்றும் கைவிட்டதில்லை. ஏனைய நாடுகளின் மக்களது விவகாரங்களில் ஏகாதிபத்தியத்தின் ஆக்கிரமிப்புக் கொள்கை தலையிடுவதை சோவியத் யூனியன் என்றும் கடுமையாக எதிர்த்து வந்துள்ளது; இன்றும் எதிர்க்கிறது.

நமது சமாதானக் கொள்கை, சோஷலிஸ சமாஜத்தின் ஐக்கியத்தை உறுதிப்படுத்துவதுடன் உள்ளார்ந்தவகையில் பிணைக்கப்பட்டுள்ளது. சோஷலிஸ நாடுகளின் வல்லமையும் ஒட்டுணர்வாற்றலும் பதட்ட நிலையைத் தளர்த்தவும், சர்வதேசச் சூழல் முழுவதையும் அபிவிருத்தியடையச் செய்வதற்கும் பாடுபடுகின்றன. அவை சமாதானத்தின் இயக்கமையமாக உள்ளன; இதை நீண்ட காலத்துக்கு எவராலும் புறக்கணிக்க முடியாது. வியட்நாமிய மக்களின் வெற்றி இதற்கு இன்னோர் உதாரணமாகும்.

அன்புத் தோழர்களே! இன்று நாம், நமது வியட்நாமிய நண்பர்களை லெனின் கிராட் நகரில், நமது மாபெரும் தலைவர் மக்களின் இலட்சியத்திற்கான போராட்டச் சக்திகளை உருவாக்கி வளர்த்த நகரில், தொழிலாளர் புரட்சிக்கான திட்டத்தை வகுத்து அதை நடைமுறைப் படுத்துவதற்கு அக்டோபர் ஆயுதப் புரட்சிக்கு வழியமைக்க போல்ஷெவிக் கட்சிக்குத் தலைமைதாங்கிய நகரில் வரவேற்கின்றோம்.

அக்டோபர் புரட்சியானது, ரஷ்யாவின் உழைக்கும் மக்களுக்கும் மனித குலம் முழுமைக்கும் எதிர்காலப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாதைக்கு ஒளிகாட்டியது. அக்டோபர் சோஷலிஸப் புரட்சியின் கருத்துக்களும் அனுபவங்களும் உலகின் தொழிலாள வர்க்கப் புரட்சியாளர்களினதும் சகல தேசிய விடுதலை, முற்போக்குச் சக்திகளினதும் சக்திமிக்க ஆயுதமாக மாறியுள்ளன. அவை வியட்நாமிய மார்க்ஸிஸ்டுகளினது வல்லமைமிக்க ஆயுதமாகவும் மாறியுள்ளன.

வியட்நாமிய நண்பர்களுடனான நமது சகோதரத்துவக் கூட்டம் ரஷ்ய புரட்சிகர தொழிலாளவர்க்கத்தின் கோட்டைகளில் ஒன்றும் நாட்டின் நல்நிலைமைப் பெற்றதுமான ஒரு தொழிலகத்தில் நடைபெறுகிறது.

ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தினதும் அதன் தீர்க்கமான மூன்றாவது ஆண்டினதும் பணிகளை நிறைவேற்றுவதில் லெனின்கிராடின் தொழிலாள வர்க்கமும், அறிவுத்துறையினரும் மகத்தான வெற்றியடைய வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். அவர்கள் பொருளாதார சிக்கனமும் மிக முன்னேற்றமடைந்த தொழில் நுட்பமும் கொண்ட உற்பத்தியை உத்தரவாதப் படுத்தும் வகையில் தம்மாலான தனைத்தையும் செய்வார்கள் என்று நாம் நம்புகின்றோம். "நமது மகத்தான நிர்மாணப்பணியில் பெரியதும்—சிறியதுமான சகல பிரச்சினைகளிலும் அக்கறையும் கவனமும் நேர்மையுமிக்க ஒரு போல்ஷேவிக் மனப்பான்மையே இன்று நம்மிடமிருந்து தேவைப்படுகிறது."1933 அக்டோபரில் லெனின்கிராடில் பொறியியல் தொழிலாளர்களுக்கு உரையாற்றுகையில் செர்ஜி கிரோவ் கூறிய இந்த வார்த்தைகள் இன்றும் பூரணமாக ஒப்புக்கொள்ளக் கூடியதாக உள்ளது.

வியட்நாமிய கட்சி, அரசாங்கத் தூதுக்குழுவின் சோவியத் விஜயம், நமதிருநாடுகளினதும் உறவுகளின் வரலாற்றில் பிரதான, மிகமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாக இடம்பெறும். சோவியத் மக்களும் வியட்நாமிய மக்களும் இந்த ஜூலை மாதத்தின் தினங்களை என்றும் நினைத்து இருப்பர். இவற்றை சோவியத்—வியட்நாமிய ஒத்துழைப்பினதும் நட்புறவினதும் வெற்றித் தினங்களாக நாம் நினைத்திருப்போம்.

கடந்த யுத்தகாலத்தைப் போன்றே சமாதான காலத்திலும் நமது மக்களினதும், மார்க்ஸிஸ— லெனினிஸ, தொழிலாளவர்க்க சர்வதேசியக் கோட்பாடுகளில் நமது கட்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களுக்கிடையிலான இணைப்புக்களினதும் சகோதர, ஒருமைப்பாட்டு ஐக்கியத்தை வலுப்படுத்தக் கூட்டாக உழைப்போம். இந்த பொது லட்சியத்துக்கு லெனின்கிராட் வாசிகள் கூட பெரும் பங்களிப்பைச் செய்வார்கள் என்று நாம் நம்புகிறோம்.

சோவியத் யூனியன்— வியட்நாம் ஜனநாயகக் குடியரசின் கட்சிகளினதும் மக்களினதும் நட்புறவும்; ஒருமைப்பாடும் மேலும் வலுப்பெறட்டும்!

வியட்நாமில் சோஷலிஸ நிர்மாணத்திலும் அங்கு சமாதானபூர்வமான இணைப்பை ஏற்படுத்துவதிலும் நமது வியட்நாமிய சகோதரர்கள் சகல வெற்றிகளையும் ஈட்ட வேண்டும் என்று நாம் விரும்புகிறோம்.

ஆழமான ஜனநாயக மாற்றங்களுக்காகவும் நாட்டின் சுதந்திரம், ஒன்றிணைதல் ஆகியவற்றிற்காகவும் தொடர்ந்து போராடும் தென்வியட்நாம் தேசபக்தர்களுக்கு எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

சோஷலிஸ சமாஜம் — நாடுகளிடையே சமாதானம் முற்போக்கு நட்புறவு ஆகியவற்றின் வல்லரண் நீடூழி வாழ்க!

## தோழர் லீ துவான் உரை

அன்புத் தோழர் கொஸிஜின் அவர்களே,
அன்புத் தோழர் ரொமாநோவ் அவர்களே,
அன்பார்ந்த தோழர்களே!

சோவியத் யூனியனுக்கு உத்தியோகபூர்வ நட்புறவு விஜயத்தை மேற்கொண்டுள்ள நமது தூதுக்குழு, மகா அக்டோபர் புரட்சியின் தொட்டிலும், சோவியத் மக்களினது போராட்டத்தினதும், ஆக்க பூர்வமான உழைப்பினதும் வரலாற்றில் தனிச்சிறப்புமிக்க புகழ்வாய்ந்த அத்தியாயங்களைச் சேர்த்த நகரமுமான லெனின் கிராடுக்கு விஜயம் செய்ய சந்தர்ப்பம் கிடைத்தது குறித்து பெரு மகிழ்ச்சியடைகிறோம். லெனின் இங்கு வாழ்ந்து பணியாற்றியுள்ளார்; இங்குதான் மனிதகுல வரலாற்றின் புதிய சகாப்தத்தை, சோஷலிஸத்தின் வெற்றிச் சகாப்தத்தை, ஒடுக்கப்பட்ட மக்களின் விடுதலைக்கான லட்சியத்தின் வெற்றிச் சகாப்தத்தை தோற்றுவித்த உலகில் முதலாவது தொழிலாளவர்க்க புரட்சி லெனினது தலைமையின் கீழ் வெற்றி பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லெனின் கிராட், தோழர் ஹோ சி மின் தமது மக்களின் விடுதலைக்கும் தமது நாட்டின் விமோசனத்துக்குமான வழிகளைத் தேடி நாற்பத்தி ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னர் விஜயம் செய்த முதல் நகராகும்.

லெனின்கிராட் மக்களது புகழ்மிக்க புரட்சிகரப் பாரம் பரியங்கள் மகத்தான தேசபக்த யுத்த காலத்தின் போது மிகத் தெளிவாக வெளிப்பட்டன. 900 நாட்கள் முற்றுகை யின் போது குண்டு வீச்சுக்களையும் துப்பாக்கிகளின் தோட் டாக்களையும் பஞ்சம், குளிர், மரணம், இடர்கள் அனைத்தை யும் பொருட்படுத்தாது முழுசோவியத் யூனியனையும் போன்று லெனின்கிராடும் உறுதியாக நின்று முற்றுகை யைத் தகர்த்தது. கேவலமிக்க பாஸிஸ்ட் படையினர் இப் புனித நகருக்குள் நுழைவதற்கு லெனின்கிராட் மக்கள் விடவேயில்லை.

லெனின்கிராடினரின் வீரமிக அழிக்க முடியா எடுத் துக்காட்டு, வியட்நாமிய மக்களுக்கு வியட்நாமின் வட பகுதியும் தென்பகுதியும் நடத்திய தேசிய விடுதலைப் போராட்டத்தில், அவர்களது நாட்டின் விடுதலைக்கும் சுதந் திரத்துக்குமான போராட்டத்தில் சக்திமிக்கதொரு தூண்டுதலாக அமைந்திருந்தது. யுத்தத்தின் பின்னர் லெனின்கிராடினர் தமது நகரை வேகமாகப் புனருத் தாரணப் படுத்தியும் ஏராளமான நவீன தொழிலகங்களைக் கட்டியும் புதிய பகுதிகளை உருவாக்கியுமுள்ளனர். நேவா நதிக்கரையில் அமைந்துள்ள இந்நகரம் முன்னரைவிட அழகாக அமைந்துள்ளது.

லெனின்கிராட், சோவியத் யூனியனின் மிகப்பெரும் தொழில்துறை, கலாசார, விஞ்ஞானக் கேந்திரமாக வழங்கு கிறது. அதன் தொழிலாளர்களும் விஞ்ஞானிகளும் கலைத் துறையினரும் தங்கள் படைப்பாற்றல் மிக்க உழைப்பின் மூலம் சோவியத் யூனியனின் கம்யூனிஸ நிர்மாணத்துக்கும் தமது நாட்டின் வல்லமையை வலுப்படுத்துவதற்கும் மதிப் பிடற்கரிய பங்காற்றுகிறார்கள். சோஷலிஸ, கம்யூனிஸ இலட்சியங்களுக்குத் தம்மை உண்மையாகவும் முழுமை யாக அர்ப்பணித்துள்ள லெனின்கிராடினர், ஈடிணையில்லா வீரச் செயல்களைப் புரிந்துகொண்டுள் ளதுடன், இன்று உழைப்பில் பெரு வெற்றிகளை ஈட்டி வருகிறார்கள். லெனினவர்களது உன்னதமான நாமத்தைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாங்கியுள்ள லெனின்கிராட் அதற்கு உண்மையிலேயே மிகவும் பொருத்தமானதே. வீரத்திருநகர் என்ற விருதுக்கு அது மிகவும் தகுதி வாய்ந்ததே. கடந்த இரு ஆண்டுகளிலும், சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் 24வது காங்கிரஸ் வகுத்தளித்த ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தை செயல்படுத்துவதில் லெனின் கிராடினர் முக்கியமாக பெருவெற்றிகளைக் கண்டுள்ளனர். உங்கள் நகரின் தொழில்துறையில் உழைப்பு உற்பத்தி 12 சதவிதத்தால் அதிகரித்துள்ளது. தொழில்துறை விளைவளவு உயர்ந்துள்ளது. லெனின்கிராடின் தொழிலாளர்களும் நிபுணர்களும் தனித்தன்மைமிக்க சாதனங்களை ஐரோப்பாவிலேயே மிகப் பெரிதான டர்பைன்கள், எண்ணெய்க் கப்பல்கள், உலைக் கலங்களுக்கான உபகரணங்கள் ஆகியவற்றை உற்பத்தி செய்கிறார்கள். தற்சமயம் ஐந்து நாள் வேலையை நாலு நாட்களில் முடிக்கும் பணியை மேற்கொண்டிருப்பதன் மூலம், நடைமுறையிலுள்ள ஐந்தாண்டுத் திட்டத்தின் தீர்க்கமான ஆண்டான 1973ம் ஆண்டின் திட்டத்தை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்யும் உழைப்புப் போட்டியில் லெனின் கிராடினர் பங்கெடுத்துள்ளனர். தோழர்களே! உங்களது பிரமிக்கத்தக்க வெற்றிகளின் பெருமகிழ்ச்சியில் நாங்களும் பங்கெடுத்துக் கொள்கிறோம்; அன்புக்குரிய லெனின் கிராடினரே! நீங்கள் மேலும் புதிய, மகத்தான சாதனைகளை ஈட்ட வேண்டும் என்று வாழ்த்துகிறோம்; உங்கள் அன்புக்குரிய நகர் மேலும் அபிவிருத்தியடைந்து, தினந்தோறும் மேலும் மேலும் செழிப்புற வேண்டும் என்று வாழ்த்துகிறோம்.

தோழர் பிரெஷ்நேவின் தலைமையிலான கம்யூனிஸ்ட் கட்சியின் வழிகாட்டுதலில் சோவியத் மக்கள் சர்வதேச சமாதானத்திற்காக ஏகாதிபத்தியத்தின் போர் வெறித்தனமான கொள்கைக்கு எதிராகத் தொடுத்த போராட்டத்திலும் சமாதானம், தேசிய சுதந்திரம், ஜனநாயகம், சோஷலிஸம் ஆகியவற்றிற்கான போராட்டத்திலும் புதிய வெற்றிகளை அடைய வேண்டும் என்று நாம் விரும்புகிறோம்.

அன்பார்ந்த தோழர்களே! வியட்நாமிய மக்கள் தமது நாட்டின் சுதந்திரத்துக்கும் விடுதலைக்குமான நீண்ட, இன்னல் மிக்க போராட்டத்தில் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற வெற்றியை அடைந்துள்ள சூழலில் நமது தூதுக்குழு சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்துள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாண்டின் ஆரம்பத்தில் பாரிஸில் கைச்சாத்தான, வியட்நாமில் யுத்த நிறுத்த, சமாதான ஒப்பந்தமானது வியட்நாமிய மக்களின் அடிப்படை தேசிய உரிமைகளையும் தென்வியட்நாம் மக்களின் சுயநிர்ணயத்துக்கான உரிமையையும் பெருமையுடன் அங்கீகரிக்கிறது.

இவ்வாண்டின் மார்ச் மாதத்தில் அமெரிக்காவின் இராணுவத்தின் கடைசிப் பிரிவு தென்வியட்நாமிலிருந்து வெளியேற வேண்டுமென்று நிர்ப்பந்திக்கப்பட்டது. இது வியட்நாமிய மக்களின் மாபெரும் வெற்றியாக இருக்கும் அதே வேளையில் சோஷலிஸ நாடுகளினதும் சர்வதேச கம்யூனிஸ, உழைக்கும் — வர்க்க இயக்கத்தினதும் பொது வெற்றியாகும்; வியட்நாமிய மக்களின் நியாயமான போராட்டத்தின் போது அவர்களுக்கு ஆதரவும் உதவியும் அளித்த சகலரினதும் வெற்றியாகும். ஆயினும் அமெரிக்காவும் சைகோன் நிர்வாகமும் பாரிஸ் ஒப்பந்தத்தின் பல முக்கிய விதிகளைக் கடுமையாக மீறி வருகின்றன, வியட்நாமிய மக்களின் அடிப்படை உரிமைகளையும் நீண்டகால அபிலாஷைகளையும் எதிர்க்கின்றனர்.

வியட்நாமிய மக்கள், அனைவரைக் காட்டிலும் சமாதானத்தை மிக அதிகமாக விரும்புகின்றனர். ஆயினும் பிற்போக்காளர்களின் மூர்க்கத்தனமிக்க வடிவங்கள் அனைத்தையும் தகர்க்கும் உறுதியை அவர்கள் கொண்டிருப்பதுடன் அதற்கான பலமும் அவர்களிடமுள்ளது. நாம் தற்போது ஈட்டிய வெற்றியானது மிக சாதகமான நிலைகளை உருவாக்கியுள்ளதுடன், நிரந்தர சமாதானத்தைப் பாதுகாக்கவும் உறுதிப்படுத்தவும் வட வியட்நாமில் வெற்றிகரமான சோஷலிஸ நிர்மாணத்துக்கும், தென் வியட்நாமில் சுதந்திரத்தை ஈட்டி ஜனநாயகத்தை ஸ்தாபிக்கவும், நமது நாட்டின் சமாதானபூர்வமான இணைப்புக்கும் நமது மக்களுக்குப் பிரகாசமான நம்பிக்கையளிக்கும் உத்வேகத்தை ஊட்டுகிறது.

வியட்நாமிய மக்கள் இப்புகழ்மிக்க பணிகளை நிறைவேற்ற உறுதிகொண்டுள்ளார்கள். ஐந்து கண்டங்களிலுமுள்ள எமது சகோதரர்கள், நண்பர்களையும் போன்று சோவியத் மக்களும் நமது நியாயமான இலட்சியங்களுக்கு மனப்பூர்வமான ஆதரவையும் உறுதியையும் அளிப்பார்கள் என்று அவர்கள் நம்புகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பார்ந்த தோழர்களே! வியட்நாமிய மக்கள், தமது வெற்றிகள் அனைத்தும் லெனினது வீரமிகு நகர்வாழ் மக்கள் உட்பட சோவியத் மக்கள் அனைவரினதும் ஆதரவுடனும் உதவியுடனும் இணைந்துள்ளது என்பதை எக்காலத்திலும் நினைவுகூர்வர். அக்டோபர் புரட்சியை நிறைவேற்றிய மக்களும், தமது நாட்டின் விடுதலைக்கான போராட்டத்தில் அளப்பரிய தியாகங்களைப் புரிந்துள்ளவர்களின் சிறப்பியல்புகளை ஆழமாகப் புரிந்துகொண்டுள்ளவர்களுமான லெனின்கிராட் மக்கள், தமது உள்ளார்ந்த தொழிலாள வர்க்க சர்வதேசிய உணர்வினை வெளிப்படுத்தும் வகையில் வியட்நாமிய மக்களுக்கு அவர்களது போராட்டத்தின்போது பெரும் ஆதரவும் உதவியும் அளித்தனர். இது அனைத்து மக்களிடையேயும் இடையறாது வளர்ந்தும் விரிந்தும் வருவதும் பல்வேறு வகைப்பட்ட அம்சங்களையும் முனைப்பான வடிவங்களையும் பெற்று வருவதுமான வியட்நாமுடன் ஒருமைப்பாடு கொள்ளும் இயக்கத்தில் வெளிப்பட்டது; இன்றும் வெளிப்படுகிறது; இது, லெனின்கிராட் மக்களினதும் விஞ்ஞானிகளினதும் தேர்ச்சிமிக்க கைகளினாலும் புத்தியினாலும் தயாரிக்கப்பட்டு வியட்நாமுக்குக் கப்பலேற்றப்படும் பொருட்கள் மூலமும் லெனின்கிராடில் கல்வி பயிலும் வியட்நாமின் இளைஞர்களினதும் யுவதிகளினதும் சோவியத் போதனாசிரியர்கள், விரிவுரையாளர்களினதும் தினசரி கவனம், இதயம் கனிந்த உணர்வுகள் மூலமாகவும் வெளிப்படுகிறது.

வியட்நாமிய உழைக்கும் மக்கள் கட்சி, வியட்நாம் ஜனநாயகக் குடியரசின் அரசாங்கம் சகல வியட்நாம் மக்கள் அனைவரினதும் சார்பில் அன்புமிக்க லெனின்கிராட் மக்களே, உங்கள் மேலான உணர்வுகளுக்கும் சிறப்பான செயல்களுக்குமாக இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவிப்பதற்கு என்னை அனுமதியுங்கள்.

உங்களுடைய உணர்வுகளுக்குத் தகுதியான முறையில் இருப்பதற்காக வியட்நாமிய மக்கள் தமது புரட்சிகரப் பணிகளை வெற்றிகரமாக முடிப்பதற்கு உறுதி பூண்டுள்ளதுடன் வியட்நாமிய—சோவியத் நட்புறவை சாசுவதமானதாகவும் தகர்க்க முடியாததாகவுமாக்குவதற்கும் தமது வலுவனைத்தையுமளிக்கிறார்கள். இன்றைய சிறப்புவாய்ந்த நல்லெண்ணமிக்க கூட்டத்தின் நினைவாக, அன்பார்ந்த லெனின்கிராட் வாழ் மக்களே, உங்களுக்கு "சாசுவதமிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தகர்க்கவொண்ணாத மகத்தான நட்புறவும், வியட்நாம் மக்களுக்கும் சோவியத் மக்களுக்கும் இடையிலான போர்க்குணமிக்க ஒருமைப்பாடும் நீடூழி வாழ்க" என்ற வாழ்த்துக்களைக் கொடுப்பதற்கு என்னை அனுமதியுங்கள்.

## தோழர் பாம் வான் தாங் உரை

இன்று, வியட்நாமிய மக்களினதும் சோவியத் மக்களினதும் மாபெரும் வெற்றிகளை உங்களுடன் சேர்ந்து நாங்களும் கொண்டாடுகின்றோம். இக்கூட்டம் எம்மைப் பொறுத்தவரையில் ஒரு மகத்தான நிகழ்வாகும். இது அக்டோபர் புரட்சி வெற்றிபெற்ற, பாஸிஸத்தை எதிர்த்த போராட்டத்தில் தலைசிறந்த வீரச்செயல்கள் புரியப்பட்ட, மண்ணில் நடைபெறுகிறது. இது நமது மாபெரும் லெனினவர்களின் சிலையருகே நடைபெறுகிறது.

தோழர்களே! எமது வியட்நாமிய மக்களும் எமது உழைக்கும் மக்கள் கட்சியும் மகா லெனினவர்களுடைய விஸ்வாசமிக்க சீடர்களாக எக்காலத்திலும் விளங்குவர்.

எமது வியட்நாமிய மக்களும் எமது உழைக்கும் மக்கள் கட்சியும் மகத்தான அக்டோபர் புரட்சியின் பாதையை என்றென்றைக்கும் பின்பற்றுவர்.

எமது வியட்நாமிய மக்களும் எமது உழைக்கும் மக்கள் கட்சியும் மாபெரும் சோவியத் மக்களுடன் ஒன்று சேர்ந்து கம்யூனிஸத்தை நோக்கி அணிவகுத்துச் செல்வார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வியட்நாம் ஜனநாயகக் குடியரசினது கட்சி, அரசாங்கத் தூதுக்குழுவுக்கு சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் லெனின்கிராட் பிரதேசக் கமிட்டியும் லெனின்கிராட் உழைக்கும் மக்கள் பிரதிநிதிகளின் நகர சோவியத்தும் அளித்த விருந்துபசாரம்.**

*1973 ஜூலை 15ம் திகதி சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் லெனின்கிராட் பிரதேசக் கமிட்டியும் லெனின்கிராட் உழைக்கும் மக்கள் பிரதிநிதிகளின் நகர சோவியத்தின் உயர் கமிட்டியும் வியட்நாம் ஜனநாயகக் குடியரசின் கட்சி, அரசாங்கத் தூதுக்குழுவினைக் கௌரவித்து விருந்துபசாரம் ஒன்றை அளித்தன. இந்த விருந்துபசாரத்தின்போது, சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியின் அரசியல் பீடத்தின் உப உறுப்பினரும் சோ. க. க.வின் லெனின்கிராட் பிரதேசக் கமிட்டியின் முதலாவது செயலாளருமான ஜி. வி. ரொமாநோவ், வியத்நாம் ஜனநாயகக் குடியரசின் பிரதமர் பாம் வான் தாங்கும் உரையாற்றினர்.*

## தோழர் ஜி. வி. ரொமாநோவ் உரை

அன்பார்ந்த வியட்நாமிய நண்பர்களே,
தோழர்களே,

கட்சியின் லெனின்கிராட் பிராந்தியக் கமிட்டியினதும் லெனின்கிராடின் ஐந்து லட்சம் கம்யூனிஸ்டுகளைக் கொண்ட படைப் பிரிவினதும் லெனின்கிராட் வாழ் மக்களனைவரின் சார்பிலும் மூன்று புரட்சிகளின் நகரான வீரத்திருநகராம் லெனின்கிராடில் மகா லெனினவர்களது நாமத்தைப் பூண்ட நகரில் மீண்டும் உங்களை உளப்பூர்வமாக வரவேற்பதற்கு என்னை அனுமதியுங்கள்.

உங்கள் மூலமாக வியட்நாம் உழைக்கும் மக்கள் கட்சிக்கும் மிகக் கடுமையான போராட்டத்தை மேற்கொண்டு தமது விடுதலையையும் சுதந்திரத்தையும் வென்றெடுத்து வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியைக் கண்ட சகோதர, வீரமிகு வியட்நாம் மக்களுக்கும் எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாபெரும் தேசபக்த யுத்தத்தின்போது பாஸிஸத்தை எதிர்த்து நடைபெற்ற ஜீவமரணப் போராட்டத்தில் 900 நாட்கள் முற்றுகைக்கு ஈடு கொடுத்த லெனின்கிராடினர் வீரமிகு வியட்நாமிய சகோதரர்கள்மீது அன்பாகவிருக்கின்றனர். யுத்தத்தின் முன்னணி, பின்னணி என்று வேற்றுமையின்றி எதிரிகள் படைவீரர்களின் மறைவிடங்களை மட்டுமன்றி சமாதானபூர்வமான மக்களின் இருப்பிடங்களையும் குண்டு வீசித் தாக்கும்போது போராடுவது எத்தனை கஷ்டமானது என்பதை நாம் நன்கறிவோம். போரின் போது தமது கணவனையோ மனைவியையோ அல்லது தந்தையையோ, மகனையோ அல்லது சகோதரனையோ, சகோதரியையோ இழக்காத குடும்பமே எம்மிடத்தில் இல்லை.

சமாதானத்துக்காக நாம் அளப்பரிய தியாகங்களையும் துயரங்களையும் விலை கொடுத்தோம். அதனால்தான் நாம் சமாதானத்தை விரும்புகிறோம்; அதனால்தான் நாம் நாடுகளிடையே ஏற்பட்டுள்ள கருத்து வேறுபாடுகளுக்குத் தீர்வு காண்பதற்கு யுத்தக்களத்தை விடுத்து மகாநாட்டு மேசையை விரும்புகிறோம்.

சோவியத் மக்களின் விருப்பத்தையும் அபிலாஷைகளையும் பிரதிபலிக்கும் சோஷலிஸ சமாஜ நாடுகளின் மக்களும் நல்லெண்ணம் மிக்க மக்கள் அனைவரும் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி மத்திய கமிட்டியும், அரசியல் பீடமும் தனிப்பட்ட முறையில் சோ. க. க. மத்திய கமிட்டியின் பொதுச் செயலாளர் தோழர் பிரெஷ்நேவும் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் 24வது காங்கிரஸினால் வகுத்தளிக்கப்பட்ட சமாதான வேலைத் திட்டத்தை இடைவிடாது துரிதமாக செயல்படுத்தியும், வர்க்க நிலையிலிருந்தும் கோட்பாட்டு ரீதியான மார்க்ஸிஸ—லெனினிஸ அடித்தளங்களிலிருந்தும் சர்வதேச பந்தோபஸ்தை வலுப்படுத்துவதற்காக மேலும் பல புதிய நடவடிக்கைகளை மேற்கொண்டும் வருகின்றனர்.

தோழர் பிரெஷ்நேவின் அமெரிக்க விஜயத்தின் விளைவுகளையும் கைச்சாத்தான ஒப்பந்தங்களையும் விசேஷமாக யாரையும் எதைக் கொண்டும் பயமுறுத்துவதிலிருந்து, காலமெல்லாம் பயமுறுத்திவரும் போர்களிலிருந்து மனித குலத்தை விடுவிப்பதை மட்டும் நோக்கமாகக் கொண்ட, அணுவாயுத யுத்தத்தைத் தவிர்க்கும் ஒப்பந்தத்தையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லெனின்கிராட் மக்கள் முழுமையாக அங்கீகரிக்கின்றனர். இதே நோக்கத்திற்காகவே அரசியல்பீட உறுப்பினர்களான தோழர்கள் பொட்கொர்னி, கொஸிஜின், கிரிலென்கோ ஆகியோர் பல்கேரியா, ஆஸ்திரியா, சிரியா ஆகிய நாடுகளுக்கு விஜயம் செய்தனர்.

அன்பார்ந்த தோழர்களே! வியட்நாமிய மக்களின் வீரதீரப் போர் ஆண்டுகளின்போது சோவியத் யூனியன் வியட்நாம் ஜனநாயகக் குடியரசுக்கு இராணுவ, அரசியல், ராஜதந்திர முனைகளில் மாற்றமொன்று சர்வாம்ச உதவிகளையும் ஆதரவையும் அளித்து வந்துள்ளது. இவ்வாண்டுகள் முழுவதிலும் தலைசிறந்த மார்க்ஸிஸ — லெனினிஸ்டும் சோவியத் யூனியனின் உண்மையான நண்பருமான ஹோ சி மின்னின் பெயருடன் நெருக்கமாக இணைந்து நிறுவப்பட்ட வியட்நாம் உழைக்கும் மக்கள் கட்சி, மகா லெனினவர்களினல் ஸ்தாபிக்கப்பட்ட சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியுடன் தனது தொடர்புகளை வலுப்படுத்தியும் வியாபிதப்படுத்தியும் வந்துள்ளது.

நமது கட்சிகளிடையேயும் நமது சகோதர மக்களிடையேயும் நட்புறவை மேலும் வலுப்படுத்துவது தமது சர்வதேசக் கடமையென்று நமது கட்சியும் சோவியத் மக்களனைவரும் என்றும் கருதுகிறார்கள்.

சகல சோவியத் மக்களையும் போன்றே லெனின்கிராடினரும் யுத்த ஆண்டுகளின்போது வியட்நாமுக்கு அளித்த உதவியை கைமாறு கருதாதது எனக் கொள்ளவேண்டும் என்று கட்சியின் மத்திய கமிட்டியும் சோவியத் அரசாங்கமும் எடுத்த முடிவை திருப்தியுடன் வரவேற்கிறார்கள்.

யுத்தத்தின் காயங்களை மாற்றுவது என்பது சுலபமான காரியமல்ல என்பதை சோவியத் மக்கள் நன்கறிவார்கள். இதற்குக் காலமும், சாதனங்களும், ஊக்கமிக்க உழைப்பும், தாய்நாட்டின் மீதான தன்னலமற்ற சேவையும் வேண்டும். ஆனால் சகல சோஷலிஸ நாடுகளின் சகோதர உதவியுடனும் சர்வதேசிய ஆதரவுடனும் சமாதானபூர்வமான வியட்நாமில் புதிய தொழிற்சாலைகளும் ஆலைகளும் தோன்றும், பயிர்கள் தழைக்கும், புதிய நகர்களும் குடியிருப்புகளும் எழும் என்று நாம் நம்புகிறோம்.

தோழர்களே, வியட்நாம் ஜனநாயகக் குடியரசின் கட்சி, அரசாங்கத் தூதுக்குழுவுக்கு மீண்டும் எமது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதயங்கனிந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதற்கும்

வீரமிகு வியட்நாமிய மக்களுக்கும்,

அவர்களது முன்னணிப் படையான வியட்நாமிய உழைக்கும் மக்கள் கட்சிக்கும்

சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் வியட்நாமிய உழைக்கும் மக்கள்கட்சிக்கும் இடையிலும் சோவியத்—வியட்நாமிய மக்களுக்கு இடையிலும் உள்ள சகோதரத்துவ நட்புறவை உறுதிப்படுத்துவதற்கும்

தோழர் லீ துவானின் ஆரோக்கியத்துக்கும் தோழர் பாம் வான் தாங்கின் ஆரோக்கியத்துக்கும் சகல வியட்நாமிய தோழர்களின் ஆரோக்கியத்திற்கும்

வாழ்த்துக் கூற என்னை அனுமதியுங்கள்.

## தோழர் பாம் வான் தாங் உரை

மதிப்பிற்குரிய தோழர் கொஸிஜின்

மதிப்பிற்குரிய தோழர் ரொமாநோவ்

லெனின்கிராடினதும் லெனின்கிராட் பிரதேசத்தினதும் தலைவர்களாகிய தோழர்களே!

தோழர்களே,

முதலில் வியட்நாமிய உழைக்கும் மக்கள் கட்சியினதும் வியட்நாம் ஜனநாயகக் குடியரசின் அரசாங்கத்தினதும் தூதுக்குழுவின் சார்பில் லெனின்கிராட் வீரத்திருநகரின் மக்களால் எமக்களிக்கப்பட்ட இதயம் கனிந்த சகோதரத்துவ வரவேற்புக்கு எமது மனமார்ந்த நன்றியைக் கூறவும் நமது நாட்டைப்பற்றியும் நமது மக்களின் புரட்சிகர இலட்சியம் பற்றியும் இனிய வார்த்தைகளைக் கூறியதற்காக தோழர் ரொமாநோவுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்ளவும் என்னை அனுமதியுங்கள்.

தனது அழகினாலும் பாரம்பரியங்களினாலும் பெயர் போனதும் புகழ்மிக்க கடந்த காலத்தையும் பிரகாசமான எதிர்காலத்தையும் கொண்டதுமான லெனின்கிராட்டிற்கும் நமது தூதுக்குழு மிகுந்த மரியாதையுடனும் ஆழமான உணர்ச்சிகளுடனும் விஜயம் செய்துள்ளது. நாம் இங்கு வருவதற்கு முன்னரே, உலகுதழுவிய சோஷலிஸத்தினதும் கம்யூனிஸத்தினதும் வெற்றிச் சகாப்தத்தை ஆரம்பித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைத்த அக்டோபர் புரட்சியின் தொட்டிலாகவிருந்த லெனின்கிராட் எமது அன்பைப் பெற்றிருந்தது. இங்கிருந்துதான் புரட்சியின் ஒளி தோன்றி ரஷ்யாவை மட்டுமல்ல சகல கண்டங்களையுமே ஒளியூட்டி, வர்க்க எதிரிகளுக்கு அச்சத்தையூட்டி, உலக முழுவதும் உள்ள தொழிலாளர்களுக்கு மகிழ்ச்சியையும் பெருமிதத்தையும் அளித்தது. தோழர் ஹோ சி மின் தமது மக்களையும் நாட்டையும் காப்பாற்றுவதற்கான வழிகளையும் சோஷலிஸத்துக்கும் கம்யூனிஸத்துக்குமான வழியையும் கண்டுபிடிப்பதற்காக சோவியத் யூனியனில் வந்திறங்கியபோது அவர் விஜயம் செய்த முதல் நகரமானபடியாலும் லெனின்கிராடை நாம் நேசிக்கிறோம்.

லெனின் வாழ்ந்த கூடாரம், அரோரா போர்க்கப்பல், மாரிகால அரண்மனை, ஹிட்லரின் படைகளால் முற்றுகையிடப்பட்டபோது கழிந்த 900 பகல்களும் இரவுகளும்— உங்கள் நாட்டின் இத்தகைய புகழ்மிகு வரலாறுகள் நாம் அறிந்தவையே. உலகப் புரட்சியின் போதகரான மகா லெனினவர்களுடைய நாமம் லெனின்கிராட் நகருக்குப் பொருத்தமானதே. வீர நகர் என்ற விருதுக்கும் லெனின் கிராட் தகுதியானதே.

வியட்நாம் மக்களுக்கும் சோவியத் யூனியன் மக்களுக்கும் இடையில் அரை நூற்றாண்டுக்கு முன்னர் உதித்த நட்புறவு, போராட்ட ஒருமைப்பாட்டுணர்வுகள், நாள்தோறும் வளர்ந்தும் வலுவடைந்தும் வருகின்றன. நமது நாடு பிரெஞ்சுக் காலனியாதிக்கத்தின் நுகத்தடியின்கீழ் இருந்த நாட்களில் வியட்நாமிய கம்யூனிஸ்டுகளும் சகல மக்களும் கைது செய்யப்படுவது, நாடு கடத்தப்படுவது போன்ற நிலைமை இருந்தபோதும்கூட அக்டோபர் புரட்சியின் ஆண்டுத் தினத்தைக் கொண்டாட என்றுமே மறந்ததேயில்லை. தமது சாவைச் சந்திக்கச் சென்றபோது நமது தோழர்கள் பலர் "சுதந்திர வியட்நாம் நீடுழி வாழ்க! சோவியத் யூனியன் நீடுழி வாழ்க!" என்று குரலெழுப்பினர். இது, வியட்நாமிய மக்கள் லெனின்மீதும் அக்டோபர் புரட்சியின்மீதும் சோவியத் யூனியன்மீதும் லெனின்கிராட் மீதும் என்றும் கொண்டிருக்கும் இனியும் கொண்டிருக்கப் போகும் நல்லெண்ண உணர்வுகளின் வெளிப்பாடாகும்.

லெனின்கிராட்டுடன் பரிச்சயம் கொண்டுள்ள நாம், சகல துறைகளிலும் நீங்கள் சாதித்துள்ள பிரமிக்கத்தக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாதனைகளையும் தேசிய பொருளாதாரத்தை நிர்வாக முறைகளிலும், விஞ்ஞான, தொழில்நுட்ப சாதனைகளிலும், புதிய தலைமுறையினருக்கான கல்வியிலும் நீங்கள் மேற்கொண்டுள்ள புதிய உழைப்பைப் பற்றியும் குறிப்பிட விரும்புகிறோம். புகழ்மிகு புரட்சிகர, உழைப்புப் பாரம்பரியங்களைக் கொண்டிருக்கும் லெனின்கிராட் சோவியத் பொருளாதாரத்தில் தலையாய தொழில்துறைக் கேந்திரமாக விளங்குகிறது. அது நவீன விஞ்ஞான, தொழில்நுட்ப வளர்ச்சிக்குப் பெரும் பங்குப் பணியாற்றியுள்ளது.

லெனின்கிராட் வாழ் மக்கள்மீது, வியட்நாமிய உழைக்கும் வர்க்கத்திற்கும் உழைக்கும் மக்கள் சகலருக்கும் ஆழ்ந்த நல்லுணர்வுகளையும் போர்க்குணமிக்க ஒருமைப்பாட்டையும் நமது தூதுக்குழுவின் சார்பில் தெரிவித்துக் கொள்ள என்னை அனுமதியுங்கள். ஒன்பதாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் நிர்க்கமான மூன்றாவது ஆண்டின் திட்டங்களையும் சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 24வது காங்கிரஸின் முடிவுகளையும் நிறைவு செய்வதற்கான உழைப்புப் போட்டியில் புதிய வெற்றிகளை ஈட்டவேண்டும் என்று நாம் உங்களை வாழ்த்துகிறோம்.

அன்புமிக்க தோழர்களே! வரலாற்றின் மிகவும் கொடுமையானதொரு கலோனியலிஸ யுத்தத்தில் நாம் வெற்றியடைந்துள்ளதை நீங்கள் அறிவீர்கள். இதில் சகோதர சோஷலிஸ நாடுகளும் சர்வதேச கம்யூனிஸ தொழிலாளி வர்க்க இயக்கங்களும் சமாதானத்தையும் நீதியையும் போற்றும் சகல நாடுகளினதும் மக்கள் விடுதலை இயக்கமும் அளித்த இணையற்ற ஆதரவின் முக்கியத்துவத்தை ஆழமாக உணர்ந்துள்ள எமது அனுபவங்கள் எமக்குப் பெருவகையைத் தருகின்றன. சோவியத் யூனியன் பன்முக, விரிவான காத்திரமான உதவிகளை, அமெரிக்க ஆக்கிரமிப்பாளர்களுக்கெதிரான போராட்டத்திலும் நமது நாட்டின் விடுதலைக்கும் சோஷலிஸ நிர்மாணத்துக்குமான போராட்டத்திலும் நமது மக்களுக்கு அளித்துள்ளது. இந்த உதவிகளின் முக்கியத்துவம் என்னவெனில் அது ஒரு வெல்லற்கரிய ஆயுதத்தை— நமது லட்சியத்தின் இறுதி வெற்றிக்கான நம்பிக்கையைத் தந்துள்ளதே.

சோவியத் யூனியனுக்கு நாம் மேற்கொண்டுள்ள விஜயத்தின் முக்கிய நோக்கம். சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியும், சோவியத் அரசாங்கமும், சோவியத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்களும், சர்வதேசத் தொழிலாள வர்க்க உணர்வுடன் எமக்களித்த அவர்களது ஆதரவுக்கு நன்றி தெரிவிக்க வேண்டும் என்ற ஹோ சி மின்னினது உன்னதமான கட்டளையை நிறைவேற்றுவதற்காகும்.

கடந்த சில நாட்களாக நாம் சென்றவிடங்களுக்கெல்லாம் தோளோடு தோள் நிற்கும் சகோதரர்களுக்களிக்கக் கூடிய நல்லெண்ண வரவேற்பு எமக்கு அளிக்கப்பட்டது. தோழர் லியோனிட் பிரெஷ்நேவ், ஏனைய சோவியத் கட்சி, அரசாங்கத் தலைவர்கள் ஆகியோருடன் நமது தூது கோஷ்டி நடாத்திய பேச்சுவார்த்தைகள் நல்லெண்ணமும் சகோதரத்துவ நட்புறவும் போர்க்குணமிக்க ஒருமைப்பாடும் கொண்ட சூழலில் நடைபெற்றன. இப்பேச்சுவார்த்தைகள் சாதகமான பலன்களுக்கு வழிவகுத்துள்ளன. நிரந்தர சமாதானத்தை ஸ்தாபிப்பதற்கும் உறுதிப்படுத்துவது, வியட்நாம் ஜனநாயகக் குடியரசின் சோஷலிஸ நிர்மாணம், தென் வியட்நாமின் சுதந்திரத்துக்கும் ஜனநாயகத்துக்குமான லட்சியத்தினை நிறைவேற்றுவது, வியட்நாமின் சமாதான பூர்வமான இணைப்பு ஆகியவற்றிற்கான புரட்சிகர ஜனநாயக வியட்நாமிய மக்களின் போராட்டத்தின் புதிய கட்டத்திற்கு சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியும் சோவியத் அரசாங்கமும் சோவியத் மக்களும் தமது மெய்யான ஆதரவையும் உதவியையும் தொடர்ந்து அளிப்பர் என்ற உறுதியை மீண்டும் வெளிப்படுத்தியுள்ளனர். சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டியும் சோவியத் அரசாங்கமும், சோவியத் யூனியன் வியட்நாமுக்கு இதுவரை காலமும் அளித்த உதவிகளை அன்பளிப்பாகக் கருத முடிவு செய்துள்ளன. இந்த நடவடிக்கைக்காக சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டிக்கும் சோவியத் அரசாங்கத்துக்கும் நமது கட்சி, அரசாங்கத் தூதுக் குழு நன்றி தெரிவித்துக் கொள்கின்றது.

அன்பார்ந்த தோழர்களே, நாம் சோவியத் யூனியனை விட்டு ஆழமான மன உணர்வுகளுடன் நாளை புறப்படுகின்றோம். நமது நாடுகள் ஒன்றிலிருந்து மற்றொன்று வெகு தூரத்தால் பிரிக்கப்பட்டிருந்த போதிலும் நாமனைவரும் சகோதரர்கள்; நெருங்கிய நல்லுணர்வுகளால் ஒன்றிணைக்கப்பட்டிருக்கும் தோழர்கள். வரலாற்றில் மகத்தான புரட்சியான அக்டோபர் சோஷலிஸப் புரட்சி கூரொளி வீசிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த மண்ணில் இருந்து பால்டிக் கடலிலிருந்து பசுபிக் சமுத்திரம் வரை, வட கடலிலிருந்து பாமிர் மலைகள் வரை விரிந்துள்ள இந்நாட்டில் வாழும் 25 கோடி சோவியத் சகோதர சகோதரிகளுக்கு நல்லெண்ணமிக்க உணர்வுகளை யும் மகத்தான வியட்நாம்— சோவியத் நட்புறவுகள் எக் காலத்தையும் விட வலுப் பெறுவதற்கான அனைத்தையும் செய்வோம் என்ற உறுதியையும் தெரிவிக்கின்றோம்.

நேசபூர்வமான உணர்வுகள்மிக்க இச் சூழ்நிலையில்
வீரமிகு லெனின் கிராடின் சுபீட்சத்திற்காக

நமது கட்சிகளுக்கும் மக்களுக்கும் இடையில் உள்ள நட்புறவும், போர்க் குணமிக்க ஒருமைப்பாடும் என்று மில்லாதவாறு வளர்ந்தோங்குவதற்காக,

கம்யூனிஸ நிர்மாணத்திலும் உலக சமாதானத்திலும், தோழர் பிரெஷ்நேவின் தலைமையிலான சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் வழி நடாத்துதலின் கீழ் சோவியத் மக்கள் புதிய மாபெரும் வெற்றிகளை ஈட்டுவதற்காக, தோழர் கொஸிஜின் ஆரோக்கியத்திற்காக,

தோழர் ரொமாநோவ், மற்றும் லெனின்கிராட் பிரதேச, லெனின்கிராட் நகரத்தின் ஏனைய தலைவர்களின் ஆரோக் கியத்திற்காக

இங்கு குழுமியிருக்கும் சகல தோழர்கள், நண்பர்களின் ஆரோக்கியத்திற்காக நான் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## "நியூ டைம்ஸ்" சஞ்சிகைக்கு பாம் வான் தாங் அளித்த பேட்டி

வியட்நாம் உழைக்கும் மக்கள் கட்சி, அரசாங்க தூதுக் குழுவின் உத்தியோக பூர்வமான நட்புறவு விஜயத்தின் போது, வியட்நாம் உழைக்கும் மக்கள் கட்சியின் அரசி யல் குழு உறுப்பினரான பிரதமர் பாம் வான் தாங் கிடம் "நியூ டைம்ஸ்" சஞ்சிகையின் நிருபர் சில கேள்வி களுக்குப் பதிலளிக்கும்படி கேட்டார். அவை வருமாறு.

**கேள்வி—** பாரிஸ் ஒப்பந்தம் கைச்சாத்தானது முதல் வியட்நாமின் நிலைமை குறித்து நீங்கள் கூறவிரும்புவது என்ன? இந்த ஒப்பந்தம் எவ்வாறு அமுல்படுத்தப்பட்டு வரு கிறது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பதில்—** வியட்நாமின் யுத்த நிறுத்தம் சமாதானத்தை ஸ்திரப்படுத்துவது குறித்த ஒப்பந்தம், வியட்நாமிய மக்கள் தங்கள் நாட்டின் சுதந்திரத்துக்காகவும் விடுதலைக்காகவும் தொடுத்த நீண்டகால இடைவிடாத வீரப் போராட்டத்தின் வெற்றிகரமான விளைவுகளுக்கு உருவமைத்தது. அது வியட்நாமிய மக்களின் அடிப்படைத் தேசிய உரிமைகளையும் தென்வியட்நாமிய மக்களின் சுயநிர்ணயத்துக்கான உரிமைகளையும் உறுதிப்படுத்தியதுடன் நிரந்தர சமாதானத்தைப் பாதுகாத்து வலுப்படுத்தவும் வடவியட்நாமின் சோஷலிஸ நிர்மாணத்துக்கும் தென் வியட்நாமில் ஜனநாயகத்தையும் சுதந்திரத்தையும் உத்தரவாதப்படுத்தவும் நாட்டின் சமாதான பூர்வமான இணைப்பை நோக்கிச் செல்லவும் வியட்நாமிய மக்கள் தொடுத்துள்ள புரட்சிகரப் போராட்டத்தின் இன்றைய கட்டத்தில் புதிய அனுகூலமான நிலைகளை உருவாக்கியும் சிறந்த வாய்ப்புக்களைத் திறந்தும் வைத்துள்ளது.

வியட்நாமிய மக்களும் வியட்நாம் ஜனநாயகக் குடியரசின் அரசாங்கமும் தென் வியட்நாம் குடியரசின் இடைக்காலப் புரட்சி அரசாங்கமும் வியட்நாம் குறித்த சர்வதேச மகாநாட்டின் செயல்களிலும் 1973ம் ஆண்டின் ஜூன் 13ம் திகதிய கூட்டறிக்கையிலும் உறுதி செய்யப்பட்ட பாரிஸ் ஒப்பந்தத்தின் விதிகள் சகல வியட்நாமிய மக்களினதும் தென்வியட்நாம் மக்களின் சகல பிரிவினரதும் புரட்சிகர நோக்கங்களும் ஒத்திருப்பதாலும் பரந்த சர்வதேச ஆதரவைப் பெற்றிருப்பதாலும் பாரிஸ் ஒப்பந்தத்தை மதித்து அதன்படி நடக்கின்றனர். இது, அமெரிக்காவும் சைகோன் நிர்வாகமும் பாரிஸ் ஒப்பந்தத்தை கடுமையாகவும் திட்டமிட்டும் மீறுவதை எதிர்த்து நடைபெறும் நியாயமான போராட்டத்தில் வெளிப்படுகிறது. நமது போராட்டம், வியட்நாமிய மக்களின் திடமான நம்பிக்கையையும் வரலாற்றின் மாற்றமுடியாத போக்கையும் பிரதிபலிப்பதால் அது வெற்றியடைந்தே தீரும். இந்தப் போராட்டத்தின் மூலம் தென்வியட்நாம் குடியரசின் இடைக்காலப் புரட்சி அரசாங்கம் மட்டும்தான் தென்வியட்நாம் மக்களின் உண்மையான பிரதிநிதி என்பதைத் தினமும் அதிகமாகவும் நிரூபித்து வருகிறது. சைகோனின் இராணுவ, பாஸிஸ குழு, தமது நாட்டிலும் வியட்நாமிய மக்களுக்கும் கொடுமை இழைத்து, உலகப் பொது மக்களின் கண்டனத்தைப் பெற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றுள்ள அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கைப்பொம்மையாக இருப்பதை மேலும் மேலும் வெளிப்படுத்தி வருகிறது.

**கேள்வி—** வியட்நாம் ஜனநாயகக் குடியரசின் பொருளாதார நிலைமை என்ன?

**பதில்—** வியட்நாமிய மக்களினால் ஈட்டப்பெற்ற மகத்தான வெற்றிகள் வடவியட்நாமின் சோஷலிஸ நிர்மாணத்தைத் தொடர்வதற்கும் வியட்நாம் ஜனநாயகக் குடியரசின் சர்வாம்ச உறுதிப்பாட்டிற்கு— தேசமளாவிய புரட்சிக்கும் கிழக்குலகின் வெல்லற்கரிய சோஷலிஸ முகாமாகுவதற்குமான உறுதியான அடித்தளத்திற்கும் அனுகூலமான நிலைமைகளை உருவாக்கித் தந்தன. யுத்தத்தின் விளைவுகளை அகற்றுவதற்கும் நாட்டின் நிலைமையை ஸ்திரப்படுத்தவும், மக்களின் வாழ்க்கையை படிப்படியாக அபிவிருத்தி செய்யவும் நாம் கடுமுழைப்பை மேற்கொண்டுள்ளோம். நாம் நமது பொருளாதாரத்தைப் புனரமைக்கவும் கலாசாரம், விஞ்ஞானம், தொழில் நுட்பம் ஆகியவற்றை வளர்க்கவும் இவை மூலமாக பொருளாதார வளர்ச்சியை மேலும் துரிதமாக்கவும் பரவலாக்கவும் சாதகமான நிலையை உருவாக்கவும் உழைத்து வருகிறோம். அதே நேரத்தில் நாம் ஒவ்வொரு கணத்திலும் விழிப்புடன் இருக்கிறோம்; இராணுவ முஸ்தீபுகளைத் தொடர்ந்து தயாராக வைத்துள்ளோம், இதன் மூலமாக மீண்டும் நமது நாட்டுக்கு எதிராக ஆக்கிரமிப்புச் செய்ய எதிரிமேற்கொள்ளும் ஒவ்வொரு திட்டத்தையும் எம்மால் முறியடிக்க முடியும்.

**கேள்வி—** தற்போது சோவியத் யூனியனுக்கு மேற்கொண்டுள்ள உங்களது விஜயத்தினதும் சோவியத் தலைவர்களுடனான உங்கள் சந்திப்பினதும் மனப்பதிவுகளைக் கூறமுடியுமா?

பதில்— நமது தூதுக்குழுவின் உத்தியோக பூர்வமான நட்புறவு விஜயமானது ஒரு புறத்தில் வியட்நாம் உழைக்கும் மக்கள் கட்சி, வியட்நாம் ஜனநாயகக் குடியரசின் அரசாங்கம், வியட்நாமிய மக்கள் ஆகியோருக்கும் மறுபுறத்தில் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சி, சோவியத் அரசாங்கம், சோவியத்மக்கள் ஆகியோருக்கும் இடையிலுள்ள மகத்தான நட்புறவினதும் போர்க்குணமிக்க ஒருமைப்பாட்டினதும் வெளிப்பாடாக அமைந்துள்ளது. மாஸ்கோ, லெனின் கிராட் ஆகிய இரு இடங்களிலும் நமது தூதுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழுவுக்கு உளப்பூர்வமான வரவேற்பு அளிக்கப்பட்டது. உங்கள் கட்சி, அரசாங்கத் தலைவர்களுடன் நாம் நிகழ்த்திய பேச்சுவார்த்தைகள் சகோதரத்துவமும், தோழமையும் பூரணமான பரஸ்பரம் நல்விளப்பமும் நம்பிக்கையும் மிக்க சூழலில் நடைபெற்றன. இந்த விஜயமானது மார்க்ஸிஸ, லெனினிஸ, தொழிலாளி வர்க்க சர்வதேசியத்தின் அடித்தளத்தில் வியட்நாம் ஜனநாயகக் குடியாசுக்கும் சோவியத் யூனியனுக்கும் இடையிலான நட்புறவையும் போர்க்குணமிக்க ஒருமைப்பாட்டையும் வளர்க்கவும் வலுப்படுத்தவும் செய்யப்பட்டதொரு முக்கியமான மைல் கல்லாகவும் கனமான பங்களிப்பாகவும் அமைந்திருக்குமென்பதில் சந்தேகமில்லை.

கேள்வி— ஏகாதிபத்தியத்துக்கு எதிராக, நாடுகளின் சமாதானமும் பந்தோபஸ்தும் வேண்டி வியட்நாமிய மக்களுடன் ஒன்று சேர்ந்துழைத்த சோவியத் யூனியனும் ஏனைய சோஷலிஸ நாடுகளும் உங்களுக்களித்த உதவி குறித்து உங்கள் கருத்தைக் கூறமுடியுமா?

பதில்— வியட்நாமிய புரட்சியின் வெற்றிகள் அனைத்தும் சோவியத் மக்களும், சீன மக்களும் ஏனைய சகோதர சோஷலிஸ நாடுகளின் மக்களும் ஐந்து கண்டங்களிலும் உள்ள நமது நண்பர்கள் சகோதரர்கள் அனைவரும் அளித்த அனுதாபங்கள் ஆதரவுகள் ஏராளமான விலை மதிப்பற்ற உதவிகளுடன் நெருக்கமாக இணைந்ததுள்ளதை நமது மக்கள் நன்ருக அறிவார்கள்.

வியட்நாமிய மக்கள் வியட்நாம் உழைக்கும் மக்கள் கட்சி, வியட்நாம் ஜனநாயகக் குடியாசு ஆகியவற்றின் சார்பில், சோவியத் யூனியனின் புகழ்மிக்க கம்யூனிஸ் கட்சிக்கும் சோவியத் யூனியனின் அரசாங்கத்திற்கும் சகோதர சோவியத் மக்களுக்கும் அவர்கள் அளித்த சர்வாம்ச ஆதரவுக்காகவும் விலைமதிப்பற்ற உதவிகளுக்காகவும் எமது இதயம் கனிந்த உண்மையான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த உதவியும் ஆதரவும், அமெரிக்க ஆக்கிரமிப்புக்கு எதிரான வியட்நாம் மக்களது போராட்டத்தில், நாட்டைக்காப்பாற்றவும் சோஷலிஸத்தை நிர்மாணிக்கவும் அவர்கள் தொடுத்த போராட்டத்தில் மாபெரும் வெற்றிகளை ஈட்டுவதற்கு மிக முக்கியமான காரணிகளாக இருந்தன.

வியட்நாமிய மக்களது புரட்சிகரப் போராட்டத்தின் இன்றைய கட்டத்தில் சோவியத் யூனியன் தொடர்ந்து ஆத



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரவும் உதவியும் அளிப்பதைத் தனது சர்வதேசியக் கடமையாகக் கருதுகிறது என்று தோழர் லியோனிட் பிரெஷ்நேவும் சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியினதும் சோவியத் அரசாங்கத்தினதும் ஏனைய தலைவர்கள் விடுத்துள்ள உளப்பூர்வமான அறிக்கையை வியட்நாமிய மக்கள் பெருமையுடன் வரவேற்கின்றனர்.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் 24 வது காங்கிரஸின் முடிவுகளுக்கு இசைவாக கம்யூனிஸத்தை நிர்மாணிப்பதிலும் உலக சமாதானத்தைப் பாதுகாப்பதிலும் சகோதர சோவியத் மக்கள் மேலும் முனைப்பான வெற்றிகளை ஈட்ட வேண்டுமென்று வாழ்த்துக் கூற இச் சந்தர்ப்பத்தை எடுத்துக்கொள்கிறேன்.

## 1973 ஜுலை 16-ம் திகதி பாம் வான் தாங் டெலிவிஷனில் நிகழ்த்திய உரை

வியட்நாம் உழைக்கும் மக்கள் கட்சி, வியட்நாம் ஜனநாயகக் குடியரசின் அரசாங்கம் ஆகியவற்றின் தூதுக் குழுவுக்கு சோவியத் மக்கள் அளித்த வரவேற்பை வர்ணிக்க எனக்கு வார்த்தைகள் போதவில்லை.

உண்மையிலேயே, சோவியத் மக்கள் மாஸ்கோவிலும் லெனின்கிராடிலும் எமக்களித்த வரவேற்பு வைபவங்கள் விசேஷமாகவும் குறிப்பிடத்தக்க சிறப்பாகவும் அமைந்திருந்தன. இது வியட்நாமிய மக்களது, சோவியத் மக்களினதும் கூட, வெற்றியின் விழாவாகும்.

எமக்களித்த நல்லெண்ண வரவேற்புக்கும் நமது வெற்றிக்குக் காரணமாகவிருந்த ஆதரவையும் சகோதர உதவியையும் அளித்தமைக்காகவும் நமது தூதுக்குழுவினரின் சார்பில் மாஸ்கோ நகர மக்களுக்கும் லெனின்கிராடினருக்கும் இந்த எல்லையற்ற அழகிய நாட்டின் சகல மூலை முடுக்குகளிலும் வாழும் சோவியத் மக்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிக்க டெலிவிஷன் வாய்ப்பளித்துள்ளது. வியட்நாமிய மக்கள் மாபெரும் சோவியத் மக்களின் உண்மையான நண்பராகவும் தோழராகவும் என்றும் இருப்பர் என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

தோழர் பிரெஷ்நேவுடனும் கம்யூனிஸ்ட் கட்சியினதும் சோவியத் நாட்டினதும் ஏனைய தலைவர்களுடனும் நமது தூதுக் குழு நிகழ்த்திய சந்திப்புகளும் பேச்சுவார்த்தைக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளும் தோழமை, பரஸ்பரம் மதிப்பு, நம்பிக்கை உணர்வுகள் நிறைந்தவையாக இருந்தன. அவை, பாரிஸ் ஒப்பந்தத்தை முழுமையாக அமுல் படுத்துவது, சமாதானத்தைப் பாது காத்து வலுப்படுத்துவது, வடவியட்நாமில் சோஷலி ஸத்தை நிர்மாணிப்பது, தென் வியட்நாமின் சுதந்திரத்துக் கும் ஜனநாயகத்துக்குமான போராட்டத்தை நிறைவு செய்வது, வியட்நாமின் சமாதான பூர்வமான ஐக்கியம் ஆகியவற்றிற்கான வியட்நாமிய மக்களின் புரட்சிகரப் போராட்டத்தின் புதிய கட்டத்தில் நமதிரு கட்சிகளுக் கிடையிலும் நமது நாடுகளான சோவியத் யூனியனுக்கும் வியட்நாமுக்கும் இடையிலும் பிரச்சினைகளை ஒருங்கி ணைந்து நிர்ணயிப்பது, இருநாடுகளுக்கிடையிலும் உள்ள நட்புறவையும் பன்முக ஒத்துழைப்புக்களையும் மேலும் உறு திப்படுத்துவது ஆகியவற்றின் முனைப்பாகவும் இருந்தன. இப்பாதை வியட்நாமிய மக்கள் தமது மகத்தான புரட்சி கரப் போராட்டத்தில் மேலும் பல புதிய பிரதான வெற்றி களை ஈட்ட வழிவகுத்தது.

கோடிக்கணக்கான சோவியத் மக்களுடன் வரலாற்றில் இணையற்ற அற்புதங்களைச் சாதித்த மக்களுடன் மகா லெனினவர்களது நாட்டின் புதிய உலகின் உதயமான அக் டோபர் புரட்சியின் தாயகத்தின் பிரஜைகளுடன் இரண் டாவது உலகப் போரின் போது பாஸிஸத்தை முறி யடித்து அதன் கொடுமைகளிலிருந்து மனித குலத்தைப் பாதுகாத்து சோஷலிஸ முகாமின் அமைப்புக் கான நிலைகளை உருவாக்கிய மக்களுடன் விண்வெளியில் முதல் முதல் அடியெடுத்துவைத்தவர்களும் கம்யூனிஸத் தின் பொருளாயத, தொழில் நுட்ப அடித்தள வேலைகளில் இன்று ஈடுபட்டிருப்பவர்களும் உலகில் சமாதானத்தைப் பாதுகாப்பதற்கான அனைத்து முயற்சிகளையும் செய்து வரு பவர்களான சோவியத் மக்களுடன் உரையாட டெலிவிஷன் எனக்கு வாய்ப்பினை அளித்துள்ளது.

வியட்நாமிய மக்களின் அன்பார்ந்த சகோதரர்க ளுடன்— தொழிலாளர்கள், கூட்டுப்பண்ணை விவசாயிகள் சோஷலிஸ அறிவுத்துறையினர் ஆகியோருடன் டெலிவிஷ னில் பேசுவதற்கு எனக்குச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள் ளது. உங்களனைவருக்கும் சகோதரத்துவ வாழ்த்துக்களை யும் ஒருமைப்பாட்டையும் புதிய வெற்றிகளுக்கான ஆசிக ளையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டிக்கும், சோவியத் சோஷலிஸக் குடியரசுகள் ஒன்றியத்தின் அமைச்சரவைக்கும்.**

வியட்நாமிய மக்களின் நேசத்திற்குரிய நாடான, லெனினதும், மகத்தான அக்டோபர் சோஷலிஸ்ட் புரட்சியினதும் நாடான சோவியத்யூனியனிலிருந்து வியட்நாம் உழைக்கும் மக்கள் கட்சி, வியட்நாம் ஜனநாயகக் குடியரசின் அரசாங்க தூதுக்குழு புறப்படு முன்னர், தோழர் லியோனிட் பிரெஷ்நேவின் தலைமையிலான சோவியத் யூனியன் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியகமிட்டிக்கும், சோவியத் கட்சி அரசாங்கத்தின் தலைவர்கள் அனைவருக்கும் சகல சோவியத் சகோதர, சகோதரிகளுக்கும் அவர்கள் நமது தூதுக் குழுவினருக்கு அளித்த நல்லெண்ண வரவேற்பிற்காகவும், சோவியத் யூனியனுக்கு நாம் மேற்கொண்ட உத்தியோக பூர்வமான நட்புறவு விஜயம் வெற்றிகரமாக நிறைவுறுவதற்கான நிலைகளை உருவாக்கியமைக்காகவும் நாம் இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பொதுப் போராட்டத்தைக் கொண்டிருக்கும் நமது கட்சிகள், அரசாங்கங்கள், மக்கள் ஆகியோருக்கிடையிலான மகத்தான நட்புறவும் போர்க்குண மிக்க ஒருமைப்பாடும் சாசுவதமாகவும் தகர்க்க வொண்ணாததுமாக விளங்கும் என நாம் நம்புகின்றோம்.

**லி துவான்,**

முதலாவது செயலாளர், மத்திய கமிட்டி,

வியட்நாம் உழைக்கும் மக்கள் கட்சி

**பாம் வான் தாங்,**

பிரதம அமைச்சர்

வியட்நாம் ஜனநாயகக் குடியரசு.

---

ஸ்ரீ லங்காவிலுள்ள சோவியத் சோஷலிஸ சமஷ்டிக் குடியரசின் ஸ்தானிகராலய தகவல் பகுதியினரால் கொழும்பு 2, டபிள்யு. ஏ. டி. ராமநாயக்க மாவத்தை 41ம் இலக்கத்திலுள்ள லேக்ஹவுஸ் பிரின்டேர்ஸ் அன்ட் பப்ளிஷர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தில அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org